விலை: 50.00
பக்கங்கள் - 40
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 001 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 05 வெள்ளிக்கிழமை (20.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பத்திரிகா தர்மத்தின்
# உயிர்காத்து வாழ்வளித்த வலம்புரி வரலாற்று வெற்றி கண்டுள்ளது
### கம்பவாரிதி இ.ஜெயராஜ் புகழாரம்



(கொழும்பு)

உவப்பான செய்தி அறிந்து மகிழ்கிறேன். "வலம்புரி" இருபத்தைந்து அகவைகளைத் தாண்டுகிறதாம்.

தமிழ்மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும், கண்ணாடியாக மாறி, "வலம்புரி" வெற்றி கொண்டிருக்கிறது.

சிலகாலம் பத்திரிகா ▷39

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 25

## முள்ளிவாய்க்கால் கடற்கரையில்
# 103 மியன்மார் அகதிகளுடன் கரையொதுங்கிய கப்பல்

(முல்லைத்தீவு)

**முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 103 மியன்மார் அகதிகளுடன் கப்பல் ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.**

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பகுதியில் நேற்றுக் காலை மியன்மாரில் இருந்து கப்பல் ஒன்று கரையொதுங்கியிருந்தது.

குறித்த கப்பலில் 35 சிறுவர்கள், ஒரு கர்ப்பவதி உட்பட ▷02



## நாட்டில் மீண்டும்
# எரிபொருளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போக்களிலும் நேற்று எரிபொருள் தட்டுப்பாடு ஏற் ▷39

# தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானங்களை தடை செய்க
### யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பை மீறி மத்தியகுழு எடுக்கும் தீர்மானங்களுக்குத் தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட் ▷39

# மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்
### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையின் கட்டமைப்பிற்குள் நாட்டின் பொருளாதாரம் தொடர்பான விமர்சனங்களை முன்வைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் ▷39

# நாட்டுக்குத் தேவையான உதவிகளை வழங்குங்கள்
### நோர்வேத் தூதுவரிடம் சஜித்

(கொழும்பு)

நாட்டுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு நோர்வே தூதுவரிடம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை முன் ▷02



### யாழ்.போதனாவில்
# போதையில் ஒருவர் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மதுபோதையில் ▷39

# புதிய அரசியலமைப்பை அநுர நிறைவேற்ற வேண்டும்
### கரு ஜயசூரிய நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றோம் என முன்னாள் சபாநாயகர் ▷02

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி இராசரத்தினம் சிவபாக்கியம்

உடுப்பிட்டி சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது மாகியப்பிட்டியில் வசித்து வந்தவருமான திருமதி இராசரத்தினம் சிவபாக்கியம் 19.12.2024 நேற்று வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர் இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் டகிலானந்தன், மோகனாநந்தன், ஜெயாநந்தன், சசிகலா, சத்தியதேவி, சலுஜாதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும் கோகிலாதேவி, சந்திரகலா, ஜெயந்தி, ரவிசங்கர், சிவானந்தன், சத்தியசீலன் ஆகியோரின் மாமியாரும் அருட்சோதியின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.12.2024) இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 504 9037

(C-1860)

## நாட்டுக்கு...

வைத்துள்ளார்.

நோர்வேத் தூதுவர் எச்.இ. மே-எலின் ஸ்டெனர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடையே நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, தற்போதைய இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

தற்போதைய வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான உதவிகளை வழங்குமாறும் அதற்கு எதிர்க்கட்சி என்ற முறையில் முழு ஆதரவை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நோர்வே தூதுவரிடம் தெரிவித்தார். (ம-7)

## 103 மியன்மார்...

103 பேர் இருந்துள்ளனர்.

மியன்மாரில் நடக்கும் உள்நாட்டு யுத்தம் காரணமாக தமது உயிரை காப்பாற்றிக்கொள்ள வேறு எந்த நாட்டிலாவது தஞ்சங்கோருவதற்கு குறித்த மக்கள் கப்பலில் புறப்பட்டுள்ளனர். இந்நிலையில் தற்போதைய கால நிலை காரணமாக காற்று இழுவை அதிகமாக இருந்ததனால் கப்பல் இலங்கையை நோக்கி தள்ளப்பட்டதன் காரணமாகவே குறித்த கப்பல் முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கியுள்ளது.

குறித்த கப்பலில் இருப்பவர்கள் பத்து நாட்களாக கப்பலில் இருந்ததனால் உணவுகள் எதுவும் இன்றி அவதிப்பட்டுள்ளனர், சிலர் மயக்கமும் அடைந்துள்ளனர். இந்நிலையில் குறித்த விடயம் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து உலருணவுப் பொருட்கள், உணவுகள் வழங்கப்பட்ட நிலையிலும் கப்பலைக் கரைக்குக்கொண்டுவரமுடியாத நிலையில் கடற்படையினரின் கப்பல் உதவியுடன் குறித்த வெளிநாட்டுக்கப்பலை திருகோணமலைக்கு கொண்டு செல்லும்பணியில்கடற்படையினர்ஈடுபட்டுள்ளனர். *(முன்வந்த செய்தி உள்ளே)* (ம-7,299)

## புதிய அரசியல...

நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று நாடு பாரியளவில் முன்னேற்றமடைந்திருக்கும். தற்போதைய ஜனாதிபதியாவது அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்ப்பதாக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்காகக் கொண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதுஇதனைத்தெரிவித்தார். (ம-7)


**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306**

(649)




# வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் விசேட அறிவித்தல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் என்ற எமது ஆலயத்தின் பெயரில் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஸ்தாபன ரீதியிலான கட்டடங்களோ, அமைப்புக்களோ, முகவர்களோ எவரும் இல்லை என்பதை சகல மக்களுக்கும் இவ்விளம்பரத்தின் மூலம் பகிரங்கப்படுத்துகின்றோம். அவ்வாறு யாராவது செயற்படுவதையோ அமைப்பு ரீதியாகவோ, தனிமையாகவோ இயங்குவதையோ நாம் வேதனையுடன் ஆட்சேபிகின்றோம். அவ்வாறு யாராவது செயற்பட்டால் சட்டரீதியான நடவடிக்கையினை எடுக்க வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் ஆலய நிர்வாகத்திற்கு ஏற்படும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இதேபோல் இவ்வாலயத்தில் நடைபெறும் அன்னதானம் வழங்கும் பணியை ஆலய நிர்வாகமே அடியார்களின் மனமுவந்த உதவியோடு எவ்வித தளர்வுமின்றி செய்து வருகிறது. இங்கு நடைபெற்றுவரும் அன்னதான பணிக்கு ஆலயத்தைத் தவிர வேறு எவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நிர்வாகமே முழுப்பொறுப்புக்கும் உரியது என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்துகின்றோம். அடியார்களிடம் இருந்து முறைப்பாடுகள் வருவதால் இதனை விளம்பரப்படுத்த வேண்டிய தேவை எமக்கு எழுந்துள்ளது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலின் பெயரால் சிலர் பொங்கல் உற்சவக்காலங்களிலும் விஷேட தினங்களிலும் கிராமங்கள் தோறும் சென்று பணமும் பொருளும் வசூல் செய்து வருவதாகவும் அறிகின்றோம். எமது ஆலயத்தின் பெயரில் நிதியோ, பொருளோ சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அடியார்கள் தாமாகவே விரும்பி முன்வந்து பங்களிப்புச் செய்வதை மட்டுமே நாமும் விரும்புகின்றோம், ஏற்கின்றோம்.

ஆலயத்திற்கு நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் கீழ் குறிப்பிடப்படும் வங்கிக் கணக்குகளுக்கோ அன்றி பரிபாலன சபை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், வற்றாப்பளை முள்ளியவளை, இலங்கை என்ற முகவரிக்கு நேரடியாகவே அனுப்பிவைக்கலாம். வங்கி மூலம் பணத்தை அனுப்புவோர் அது பற்றிய விபரத்தினை எமக்கு அறியத்தரும் பட்சத்தில் நிதிக்குரிய பற்றுச்சீட்டினையும் அம்பாளின் பிரசாதத்தினையும் அனுப்பி வைக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| கொமர்ஷல் வங்கி | - 1229001750 | - முள்ளியவளை |
| இலங்கை வங்கி | - 70274525 | - முள்ளியவளை |
| மக்கள் வங்கி | - 020100100026539 | - முல்லைத்தீவு |

அம்பாளின் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக -

தொடர்புகட்கு:
தலைவர் - 077 375 7448
செயலாளர் - 077 936 2643
பொருளாளர் - 076 182 8750
0243243558

பரிபாலன சபை,
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்.

(C-1858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY SMARTER WORK BETTER

## IDMNC INTERNATIONAL

## JOIN NOW



**Degree** - Bachelor of LLB
BA Business Management
BSC Computing
BSC Nursing
BEd Teacher
BSC Psychology

**Diploma** - Artificial Intelligence
Entrepreneurship
Criminal Justice
Media literacy & Journalism
Bio medical & laboratory sciences
food science and nutrition

English
computing
management
hotel management
human resource management
psychology

**Certificate** - Computing Applications
legal studies
psychological counseling
marketing leadership

**Study & Work aboard**

BUCKINGHAMSHIRE NEW UNIVERSITY EST. 1891
GIRNE AMERIKAN ÜNIVERSITESI
EDhat INTERNATIONAL

**Approvals**

UGC WES TVEC
TEF Silver Teaching Excellence Framework
The Association of Commonwealth Universities

**Jaffna Vavuniya Mannar**
**0760970954**

(C-1848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகத்தின் முதன்மை நாளிதழ்

அதிக வாசகர்கள் அதிக விற்பனை

# உங்கள் வலம்புரி 25 ஆவது ஆண்டு நிறைவில் வெள்ளி விழாக் காண்கிறது

**இடம்**
நல்லூர் துர்க்கா மணி மண்டபம்

**காலம்**
20.12.2024 (வெள்ளிக்கிழமை)
பிற்பகல் 3.00 மணி

## தலைவர்



- **திரு.சிவஞானம் வெற்றிவேலாயுதம்**
(நிர்வாக இயக்குநர் - வலம்புரி)

## ஆசியுரைகள்



- **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
(ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)



- **சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
(தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)



- **கலாநிதி ஆறு. திருமுருகன்**
(தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)



- **அருட்திரு ஜுபன் மரியாம்பிள்ளை அடிகளார்**
(இயக்குநர், பிசப் சௌந்தரம் மீடியா சென்ரர்)



- **அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஏ. பைஸர்**
(காசிமி, மதனி)

## பிரதம விருந்தினர்



- **வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்)

## சிறப்பு விருந்தினர்கள்



- **வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்**



- **உயர்திரு இ.இளங்கோவன்**
(பிரதம செயலாளர். வடக்கு மாகாணம்)



- **வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா**
(பொது வைத்திய நிபுணர் -
யாழ்.போதனா வைத்தியசாலை)



- **உயர்திரு.ந.தெய்வேந்திரராஜா**
(ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)



- **கலாநிதி செ.சேதுராஜா**
(ஓய்வு நிலை அதிபர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி

## - நிகழ்ச்சி நிரல் -


- **மங்கல விளக்கேற்றல்**
- **இறைவணக்கம்**
- **வரவேற்பு நடனம்**
நர்த்தன ஷேத்திரா மாணவிகள்
(நெறியாள்கை - ஆதித்தியா ஜெயபாலன்)
- **வரவேற்புரை**
திரு.மாவை நா. கஜேந்திரன்
(முகாமையாளர் - வலம்புரி)
- **ஆசியுரைகள்**
- **தொடக்கவுரை**
திரு.கணேசன் திருமாலழகன்
(நிர்வாகப் பணிப்பாளர் - வலம்புரி)
- **தலைமை உரை**
- **சிறப்பு விருந்தினர்கள் உரை**
- **பிரதம விருந்தினர் உரை**
- **சிறப்புரை**
திரு.நல்லையா விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர் - வலம்புரி)
- **கௌரவிப்பு நிகழ்வு**
- **நன்றியுரை**
செல்வன் விஜயசுந்தரம் வாரணன்

வெள்ளி விழாவில் கலந்து கொள்ள
உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.
- வலம்புரிக் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸில் இடம்பெற்ற நடனப் போட்டி

## தமிழ்ப் பெண்கள் அணி முதலிடம்







சுவிட்சலாந்து நாட்டில் நடைபெற்ற நடனப் போட்டியில் தமிழ்ப் பெண்களின் அணியான echoes of roots அணி முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இம் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில் உலகளாவிய ரீதியிலிருந்து 29 அணிகள் பங்கு பற்றின.

இதில் வல்லிபுரம் சம்யா, சதானந்தராஜன் சம்யுதா, நவநேசன் றஸ்மியா, மிதுஜா அமிர்தலிங்கம், ஜனுஜா அமிர்தலிங்கம், சச்சிதானந்தமூர்த்தி அர்ச்சனா, ரேதுகா ஜீவகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடுத்து வரும் ஜுலை மாதம் அமெரிக்காவில் இறுதிப்போட்டி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

# இன்று 20.12.2024 காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசக முற்றோதல். திருத்திண்ணபுரம் சிவன் கும்பாபிஷேகம் காண்போம்

சிவஞானத்தேன் ஊறுகின்ற திருவாசகப் பாசுரங்கள் அறுநூறும்
திருக்கோவையர் நானூறு பாடல்களும் பாடி அருளிய
ஆகாய கங்கை போன்ற அண்ணல் மாணிக்கவாசகரை
எனக்கு இடையூறு ஏற்படாதிருக்க காலையும் மாலையும் வணங்குவோம்.

*39 வது செவ்வந்திப் புராணம்*



இன்று 20.12.2024 காரைநகர் ஈழத்து சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசக முற்றோதல் நடைபெற்று மாணிக்கவாசகர் சுவாமிக்கு அபிஷேகம் செய்து மாணிக்கவாசகர் அஷ்டோத்திர சத நாமாவளி மலர் தூவி வழிபாட்டுடன் அறுசுவையுடன் அன்னதானம் நடைபெறவும் அன்பு விதை போன்ற அருட்சனை மடாலயத்தில் அன்பு வித்திட்டு மலர் தூவி வழிபட்டு உயிர்கள் சிவ புண்ணியங்களை இயற்றி திருவருள் திருவாசகத்தின் அடி நாதமாக உணர்வு பெறுவோம். தை பிறந்தால் வழி பிறக்கும். ஆலய கும்பாபிஷேகம் கண்டு தரிசித்து உதவி நின்று ஆன்மாக்கள் யாவரும் பேரின்ப பெருவாழ்வு பெறுவார்கள் என்பது திண்ணம். 39 ஆவது செவ்வந்திப் புராண வாசகத்தில் அண்ணல் மாணிக்கவாசகரை யாதும் இடையூறு வராமல் இருக்க காலையும் மாலையும் வணங்குவோம் இந்த மாதம் எங்கும் திருவாசகம் ஓதுவோம்.

திருவிசைப்பா ஆசிரியர் முன்னோர் வாழ்ந்த மடம் மாளிகை மடம் என பெயர் பெறும் அம் மடத்தின் சார்பாய் திருமாளிகைத் தேவர் என்ற பெயருடன் துறவி திருவாவடுதுறையில் ஆலயம் அருகே தமக்கென மடாலயம் அமைத்து இறைவழிபாட்டில் சிவ யோகத்தில் அமர்ந்திருந்து சித்தரான போகர் நாதரின் ஞானோபதேசம் பெற்றவர். இவர் தனது திருவிசைப்பாவில் தில்லைப் பெருமானிடத்தும் அடியாரிடத்தும் அன்பு செய்யமாட்டாதவரது இழிவு உணர்த்தி காணுதலும் அவரோடு பேசுதலும் ஆகாமையை உணர்த்தி அருள் கோயில் திருப்பதிகத்தில் 35-45 வரை திருவிசைப்பாவில் 40 ஆவது திருப்பாட்டில்

ஆடர(வு) ஆட ஆடும் அம்பலத் (து)
அமிர்தே என்னும்
சேடர்சே வடிகள் சூடத் திருவிலா
உருவினாரை
சாடரைச் சாட்கை மோடச் சலக்கரை
பிழுக்கப்பிட்கப்
பேடரைக் காணா கண்வாய் பேசா (து)
அப்பேய்களோடே

கூத்தனைத்துதிக்கின்ற பெருமை பொருந்திய சிவனடியார்களுடைய செம்மையான பாதங்களை தலையில் சூடிக் கொள்வதற்கு பாக்கியமில்லாத வீண் உடம்பு எடுத்தவர்களையும் கோள் பேசித் திரிபவர்களையும் வம்பர்களையும் உறுதியற்ற பொய் பேச்சை உடைய பேடியர்களையும் 36 ஆவது திருப்பாட்டில் இழிந்த வார்த்தைகளை பேசிக் கொண்டு திரியும் குற்றேவல் செய்பவர்களையும் 37 ஆவது திருப்பாட்டில் கூச்சலிட்டு பொறாமையுடைய வார்த்தைகளை பேசுபவர்களையும் 38 ஆவது பாட்டு இழிவு செயல் புரிவோரையும் 41 ஆவது திருப்பாட்டில் கூத்தப்பெருமானிடம் சென்றடையும் மனப் போக்குடன் பாவங்களை பெருகச் செய்பவர்களையும் 44 ஆவது திருப்பாட்டில் கூத்தப் பெருமானிடத்து அன்பு இல்லாத அறிவிலிகளையும் வம்புச் சொற்கள் பேசும் பெண் தன்மை உடையவர்களையும் எனது கண்கள் காண மாட்டா: எனது வாயும் அப் பேய்த்தன்மை உடையவர்களோடு பேசாது என திருமாளிகைத் தேவர்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு
முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்
பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார்
அச்சோவே.

அன்பே- சிவம் அன்பு நெறியையும் தெளிவித்த ஈழத்து சிதம்பரம் கும்பாபிஷேகம் கண்டு என்னை ஆண்டருளிய அப்பன் அருள் செய்வான்.

**க.கு.க. சிவபாலன்**
**போசகர்,**
**மாணிக்கவாசகர்**
**மடாலயம்,**
**காரைநகர் ஈழத்துச்**
**சிதம்பரம்.**



# இராசிபலன்

**20.12. 2024**
**மார்கழி 05, வெள்ளிக்கிழமை**
**பஞ்சமி பிற்பகல் 1.51 மணிவரை**

**மகம் முழுவதும்**
**சுபநேரம் -6.24-7.54 மணிவரை**
**இராகுகாலம் 10.54-12.24 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**பூராடம்.**

**வளவன்**




அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு திருப்தி தரும்.




நன்மைகள் நடைபெறும் நாள்,குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், உடல்நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பயணங்களால் பலனுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் வளர்ச்சி கூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள்.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டுவரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு.




உடல்நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டும் எண்ணம் உருவாகும்.

**கெட்டவர்களுக்கு உறவும் கிடையாது நட்பும் கிடையாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் நோய்

## விலங்குகளிலும் பரவும் அபாயம்

## வைத்தியர் வசீகரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் பரவியுள்ள லெப்டோஸ்ப்ரைசிஸ் எனப்படும் எலிக் காய்ச்சல் நோயானது மனிதர்கள் உள்ளிட்ட விலங்குகளிலும் பரவக் கூடிய சாத்தியம் உள்ளதாக வட மாகாண கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். திருநெல்வேலியில் உள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நோயானது லெப்டோஸ்ட் ரைசிஸ் எனப்படும் ஒரு வகை பக்றீறியாவினால் ஏற்படுத்தப்படுகின்ற தொற்று நோயாகும்.

இந்த பக்றிறீயாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற விலங்குகளின் மலம், சிறுநீர் போன்ற கழிவுகளில் இந் நோய்க்கிருமி வெளியேறி இவ் விலங்குகள் வாழும் சூழலில் நெருங்கி பழகும் மனிதர்களிலும் இந் நோய்க் கிருமி பரவி நோய்ப் பாதிப்பை ஏற்படும் சாத்தியம் உள்ளது.

இந்நோய் பரவாது தடுப்பதற்கு கொதிக்க வைத்த நீர் பருகுதல், சுகாதாரம் பேணப்படாத உணவு நிலையங்களில் உண்பதை தவிர்த்தல், செருப்பு அல்லது பூட்ஸ் அணிந்து வெளியில் செல்லல், கை, கால்களை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல், மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் கால்நடைகளை நீர் தேங்கியுள்ள பிரதேசங்களில் கட்டி வைத்தல் மற்றும் மேய்ச்சலுக்கு அனுப்புதல் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளல் அவசியம் எனத் தெரிவித்தார்.

மனிதனின் குருதியில் நோய்கிருமிகள் உள்ளதை இரத்தப்பரிசோதனைகள் மேற்கொண்டு உறுதிப்படுத்துவதை போலவே வளர்ப்பு விலங்குகளின் குருதி, சிறுநீர் ஆகியவற்றை ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தி நோய்கிருமியின் பிரசன்னத்தை உறுதிப்படுத்த முடியும்.

இதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்கள நோய் ஆராய்ச்சி நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். (6-8-33)

## நெடுந்தீவு-குறிகாட்டுவான்

# படகு சேவையை கடற்படையினர் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான அம்புலன்ஸ் படகு சேவையை கடற்படையினர் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் கடற் படையினரிடம் கோரியுள்ளார்.

ஹியூமெடிக்கா நிறுவனத்தால் நடத்தப்படும் அம்புலன்ஸ் படகுச்சேவை தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதன் போது நெடுந்தீவிலிருந்து நோயாளர்களை கொண்டுவரும் சேவை ஹியூமெடிக்கா நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகுச் சேவை மூலம் மாதாந்தம் 15



இலிருந்து 20 நோயாளர்கள் வரை இவ்வாறு அம்புலன்ஸ் படகுச் சேவை மூலம் கொண்டு வரப்படுகின்றார்கள். இதேவேளை கடற்படையினராலும் தற்போது அம்புலன்ஸ் படகுச்சேவை நடத்தப்பட்டு வருகின்றமையையும் குறிப்பிட்ட ஆளுநர் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரண, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ் வரன் மற்றும் ஹியூமெடிக்கா நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (6-8-33)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பின்வரும் கற்கைநெறிகளிற்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கட்டட நிர்மானத்துறை, கணனி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழிநுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துநர், படவரைஞர், மின்னியலாளர், கணனி வன்பொருள் திருத்துநர், முன்பள்ளி ஆசிரியர், தாதியியலாளர், முதியோர் பராமரிப்பாளர், பொதுப் பராமரிப்பாளர் ஆகிய க்றகை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமை க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல், தொழில் சார் தகைமை- மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ 5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல், சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழிற் துறை அனுபவம் இருக்க வேண்டும்.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 24.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 7949 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென யாழ்.தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)

# ஸ்மார்ட் போர்ட் பயன்பாடு வடமாகாணத்தில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பிரண்டிக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட "ஸ்மார்ட் போர்ட்களின்" பயன்பாடு மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

பிரண்டிக்ஸ் நிறுவனத்தின் சமூகப்பொறுப்பு வேலைத்திட்டத்தின் (சி.எஸ்.ஆர்.) கீழ் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு 387 "ஸ்மார்ட் போர்ட்கள்" வழங்கப்பட்டுள்ளன.

அவற்றின் பயன்பாடு வடக்கில் சராசரியாக 76 சதவீதமாக உள்ளதாகவும் அத்துடன் வடக்கு மாகாணமே இலங்கையில் முதலிடத்தில் உள்ளதாகவும் பிரண்டிக்ஸ் நிறுவனப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவதன் தேவைப்பாடு மற்றும் அடுத்த ஆண்டு சராசரியை 90 சதவீதமாக நிர்ணயித்து வேலைகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் ஆகியோருடன் பிரண்டிக்ஸ் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (6-8-33)

# எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடும் நிலையில்

## உற்பத்தியாளர்கள் கவலை

(தருமபுரம்)

தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பண்டிகைக்காலம் ஆரம்பமாகும் பொழுது தமக்கு ஓய்வின்றி தொடர்ச்சியாக இரவு பகலாக எண்ணெய் உற்பத்தி செய்து வந்த நிலையில் தற்பொழுது பல தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடும் நிலையில் காணப்படுவதாகவும் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வறட்சி காரணமாக தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு கிலோ தேங்காய் 200 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படுவதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பட்டாசுகளை பயன்படுத்தும்போது

# அவதானத்துடன் செயற்படுங்கள்!

### சிறுவர்கள் தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)

**பண்டிகைக் காலங்களில் சிறார்கள் பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடிகளைப் பயன்படுத்தும் போது பெற்றோர்கள் அவதானத்துடன் செயற் படுமாறு விசேட வைத்தியர் சமித்த சிரிதுங்க தெரிவித்துள்ளார்.**



பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடிகளைப் பயன் படுத்தும் போது தீ விபத் துக்கள் ஏற்படலாம்.

பண்டிகைக் காலங்களி னால் ஏற்படும் விபத்துக்களி லிருந்து பாதுகாக்கும் நட வடிக்கை தொடர்பில் விள க்கமளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்தி ப்பிலேயே விசேட வைத் தியர் சமித்த சிரிதுங்க இதனைத் தெரிவித்துள் ளார். (நி-8)

## முன்பள்ளி மாணவர்களின்

# காலை உணவுக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

முன்பள்ளி மாணவர்க ளுக்கு வழங்கப்படும் காலை உணவு வேலைத் திட்டத்தி னூடாக ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் 60 ரூபாவை 100 ரூபாவாக அதிகரிக்க அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

எடை குறைந்த பிள்ளை கள் அதிகமாகவுள்ள முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களால் முன் பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கும் வேலைத் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வரு கின்றது.

தற்போது ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு 60 ரூபா வழங்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டில் 155,000 பிள்ளைகள் பயனடையவுள் ளனர்.

சமகாலத்தில் உணவுப் பொருட்களின் விலை அதி கரித்துள்ளமையால் ஒரு பிள் ளைக்கு நாளொன்றுக்கு ஒதுக்கப்படுகின்ற 60 ரூபா தொகை போதுமானதாக இன்மையால் குறித்த தொகையை 100 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது. (நி-8)

## தடைகள் தளர்வு

# நாட்டை வந்தடைந்த ஒரு தொகுதி வாகனங்கள்




(கொழும்பு)

நாட்டிற்குள் வாகனங்களை இறக்கு மதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு பல வருடங்களின் பின்னர் தடைகள் தளர்த்தப்பட்டு முதல் தொகுதி வாக னங்கள் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள் ளன.

சுற்றுலாவிற்குத் தேவையான வாக னங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் வழங்கிய அனுமதியின் அடிப்படையில் டொயோட்டா லங்கா நிறுவனம் அந்த வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது.

டொயோட்டா லங்கா தனியார் நிறு வனம் இதுவரை பஸ்கள் மற்றும் வான்கள் உட்பட 26 வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது.

இதேவேளை எதிர்காலத்தில் ஜனா திபதியைச் சந்தித்து வாகன இறக்குமதி தொடர்பில் விரிவாகக் கலந்துரையாட வுள்ளதாக இலங்கை வாகன இறக்கு மதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே தெரிவித்துள் ளார். (நி-8)

# வைத்தியர்களின் ஓய்வு வயதை நீட்டிக்க அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளின் ஓய்வு வயதை 63 வயது வரை நீட்டிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சுகாதார, ஊடகத்துறை அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, மாகாண மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்ச ரினால் கொண்டுவரப்பட்ட அமைச் சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்பு வைத்திய அலுவ லர்கள், தர வைத்திய அலுவலர்கள், சிறப்பு பல் வைத்திய அலுவலர்கள், அனைத்து பல் அறுவை சிகிச்சை அலு வலர்கள் மற்றும் நிர்வாக மருத் துவ அலுவலர்கள் உட்பட அனைத்து அரசு பதிவு மருத்துவ அலுவலர்களின் ஓய்வு வயது 63 ஆக உயர்த்தப்பட்டுள் ளது.

முன்னதாக வைத்தியர்களின் ஓய்வு வயது 65 ஆக இருந்தது. பின்னர் அது 60 ஆக குறைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 - இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: O/L, Aluminum Fitting.<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15027 | பிறப்பு -1998 - இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கிபா- 14 1/4<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: MBBS (Final Year).<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer.<br>தொ.இ: G/15023 |
| பிறப்பு: 1996 - இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 8 இல் செவ்<br>கிபா- 37<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Msc, Australia, Engineer (PVT).<br>எதிர்பார்ப்பு: IT, Engineer.<br>தொ.இ: B/15028 | பிறப்பு-1998 - இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1 இல் செவ்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில் - Unani Medical Student (3rd Year, Colombo University)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, உயர் தொழில்<br>தொ.இ: G/15025 |
| பிறப்பு:1996 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 12 இல் செவ்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: A/L, Accountant (Shop)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15029 | பிறப்பு - 1991 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 7 இல் செவ்<br>கிபா- 15<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: London<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு UK மட்டும்.<br>தொ.இ: G/15030 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


# உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

உப்பு இறக்குமதிக்கு அமைச் சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ள தாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் துள்ளார்.

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், அம்பாந் தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட் டது.

இந்நிலையில் அதற்குத் தீர்வாகப் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கு மாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரி க்கை விடுத்தனர்.

அதற்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை ஜன வரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நீர் தேங்கி நிற்கும் பகுதியை பார்வையிட்ட அதிகாரிகள்




(சாவகச்சேரி)
யாழ்.தென்மராட்சி கொடிகாமம் நாவலடி பகுதியில் வெள்ள நீர் வடிந்தோடாது தேங்கி நிற்கும் பிரதேசத்தை ரயில்வே திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் காலை பார்வையிட்டனர்.

அதேவேளை அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்க வெள்ளநீர் தேங்கிய இடங்களை பார்வையிட்ட அதிகாரிகள், மக்களுடன் கலந்துரையாடியதுடன் இனிவரும் காலப் பகுதியில் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளனர். (6-8)



பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறுகின்ற பால்நிலை சார் வன்முறைகளை தடுக்கும் விதமாக அண்மையில் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை முன்றலில் வைத்து பொதுப்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. (படம்: சுபேசன்)



ஓரங்கட்டப்படும் சிறுவர்களின் உரிமைக்காய் எங்கள் குரல் எனும் தொனிப்பொருளில் சிறுவர்கள் மற்றும் பெரியோருக்கான பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு நேற்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

# மின்சாரம் தாக்கியதில் சிறுமி உயிரிழப்பு

(புத்தளம்)
புத்தளம், நவகத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரன கஹவெவ பகுதியில் மின்சாரம் தாக்கி 14 வயதுடைய சிறுமி யொருவர் உயிரிழந்துள் ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பற்ற மின் கம்பியில் இருந்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முயன்ற போது குறித்த சிறுமி மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

அதன் பின்னர் அவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# எலிக்காய்ச்சல் இதுவரை 121 பேர் பாதிப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 32 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 8 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர். கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 6 நோயாளர்களும் யாழ் போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. நேற்று முன்தினம் வரை ஏறத்தாழ 8300 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங் காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்தது. இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று கால்நடைகளிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டு குருதி மாதிரிகளை எடுத்துள்ளனர் என அவர்மேலும் தெரிவித்தார். (நி-8)

# கஜகஸ்தானிலிருந்து இலங்கைக்கு புதிய விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)
சோவியத் ரஷ்ய கூட்டமைப்பு நாடுகளில் ஒன்றான கஜகஸ்தானில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதற்காக புதிய விமான சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குளிர்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், கஜகஸ்தானின் அல்மாட்டா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிய முதலாவது விமானம் நேற்று முன்தினம் மாலை இலங்கையை வந்தடைந்தது.

கஜகஸ்தானின் தேசிய விமான நிறுவனமான அல் அஸ்தானா எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான KC167 இலக்கம் கொண்ட குறித்த விமானத்தில் 150 பயணிகளும் 8 பணியாளர்களும் வருகை தந்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் வாரத்தின் முதல் 4 நாட்கள் கஜகஸ்தான் விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-8)



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு நேற்று முன்தினம் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டது.


**நல்லூர் பிரதேச சபை**
**வழங்குநர்களை பதிவு செய்தல்**
**2025 - காலநீடிப்பு**

13.11.2024 ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 30.12.2024 வரை நீடிக்கப்படுகின்றது.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை. (சி-1856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்


# பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

661





லாரும் பரபரப்புடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பிள்ளையும் இருந்ததாகத் தோன்றியது. "அங்கே!" "இங்கே" "அதோ!" "இதோ!" என்ற கலவரமான குரல்கள் கேட்டன.

இடிந்த மண்டபத்தைக் கூட்டத்தில் ஒருவன் பார்த்துச் சுட்டிக் காட்டினான். அவ்வளவுதான்! எல்லோரும் அம்மண்டபத்தை நோக்கி ஓட்டம் பிடித்து ஓடி வந்தார்கள்.

"அதோ வருகிறார்கள், பல்லக்கும் வருகிறது. எனக்குப் பல்லக்கில் ஏறப் பிடிக்கவில்லை. என்னை உன் குதிரையின் மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்று சிறுவன் கேட்டான்.

அந்தக் குழந்தையின் முகமும் தோற்றமும் பேச்சுக்களும் வந்தியத்தேவனுடைய மனத்தைக் கவர்ந்தன. அவனைக் கட்டி அணைத்துத் தூக்கிக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆனால் மனத்திற்குள் ஏதோ ஒரு தடங்கலும் கூடவே ஏற்பட்டது.

எனக்கு வேறு அவசர வேலை இருக்கிறதே? என்றான் வந்தியத்தேவன். நீ எங்கே போகப் போகிறாய்? காஞ்சிக்கு! காஞ்சிக்கா! அங்கேதான் என்னுடைய முக்கியமான சத்துரு இருக்கிறான்!

வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவ்விதம் அந்தப் பிள்ளையின் அருகில் தான் நிற்பது கூடப் பிசகு என்று எண்ணினான். ஆனால் குதிரையின் மேல் ஏறிப் போவதற்கும் அவகாசம் இல்லை. கூட்டம் வெகு அருகில் வந்து விட்டது. ஓடினால் சந்தேகத்துக்கு இடமாகும். இவ்வளவுடன் என்னதான் நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் வந்தியத்தேவனைப் பற்றியிருந்தது. ஆகையால் சற்று ஒதுங்கிச் சென்று இடிந்த சுவர் ஓரமாக இருட்டில் நின்றான்.

"இதோ நான் இருக்கிறேன்" என்று முன்னால் போய் நின்றான் சிறுவன். வந்தவர்களிலெல்லாம் முதலில் வந்தவள் ஒரு பெண்பிள்ளை. அவளுக்கு ஓடிவந்ததினால் இளைத்துக் கொண்டிருந்தது. அதை அவள் பொருட்படுத்தாமல் தாவி வந்து குழந்தையை எடுத்து வாரி அணைத்துக் கொண்டு, பாண்டியா இப்படிச் செய்து விட்டாயா? என்றாள்.

அவளுக்கு அடுத்தபடியே வந்தவன் ரவிதாஸன். அவன் சிறுவனின் பக்கத்தில் வந்து நின்று சக்கரவர்த்தி! இப்படி எங்களைப் பயமுறுத்தி விட்டீர்களே? என்றான். சிறுவன் சிரித்தான் அப்படித்தான் பயமுறுத்துவேன். நான் குதிரை வேண்டும் என்று கேட்டேன். பல்லக்கு கொண்டு வந்திருக்கிறீர்களே! என்றான்.

நாம் முன்னம் பார்த்திருக்கும் சோமன், சாம்பவன், இடும்பன்காரி, தேவராளன் முதலியவர்கள் சிறுவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள். "சக்கரவர்த்தி! ஒரு குதிரை என்ன? ஆயிரம் குதிரை, பத்தாயிரம் குதிரை கொண்டு வருகிறோம் இன்றைக்கு இப்பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!" என்றான் சோமன் சாம்பவன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## திருடனைக் கண்டுபிடிப்பது எப்படி?



(நேற்றைய தொடர்ச்சி...)

அப்பொழுது சட்டென பீர்பாலின் ஞாபகம் வந்தது. பொழுது விடிந்ததும் அவசரமாக பீர்பாலைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை பீர்பாலுக்கு விளக்கி, நீங்கள் தான் எப்படியாவது குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டார்.

காவல் தலைவரிடம் மூன்று அடி நீளமுள்ள நான்கு குச்சிகளை எடுத்துக் கொண்டு சிறைச்சாலைக்கு செல்லுங்கள். பிறகு நான் அங்கு வந்து அந்த நால்வரையும் சந்திக்கிறேன் என்றார்.

பீர்பால், அந்த நால்வரிடமும் உங்களுக்காக இந்த மந்திரம் ஜெபித்த குச்சிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஆளுக்கொன்றாகக் கொடுத்த பீர்பால் யார் திருடியவனோ அவன் கையிலுள்ள குச்சி இரவில் அவன் உறங்கும் போது மூன்று அங்குலம் வளர்ந்து விடும் என்று சொல்லிவிட்டு பீர்பால் விடைபெற்றார்.

மறுநாள் பீர்பால் சிறைச்சாலைக்கு வந்ததும் அந்த நால்வரும் தங்களுடைய குச்சிகளைக் கொண்டு வந்து கொடுத்தனர். பீர்பால், வரிசையாக அனைவரது குச்சியை யும் பரிசோதித்து பார்த்து விட்டு மூன்றாவதாகக் குச்சியைத் தந்தவன் தான் தங்கத்தைத் திருடியவன் என்றார் பீர்பால்.

மூன்றாமவன் பீர்பால் சொன்னதைப் பலமாக மறுத்தான்.

உனக்குக் கொடுத்த மந்திரக்குச்சி மூன்று அங்குலம் அதிகமாக வளர்ந்து விடும் என்று நம்பிக்கொண்டு நேற்றிரவு சிறையில் மூன்று அங்குல நீளத்துக்கு உன் குச்சியை வெட்டி விட்டாய்.

இதோ பார்! உன்னுடையது மற்ற குச்சிகளை விடக் குட்டையாக இருக்கிறது என்று குச்சியைக் காண்பித்தார். பிறகு வேறு வழியில்லாமல் மூன்றாமவன் திருடியதாக ஒப்புக் கொண்டான். அவனிடமிருந்து பிறகு தங்கத்தை மீட்டு பஜ்ரி தாசிடம் கொடுத்தனர்

அக்பரிடம் பீர்பால் தான் தனக்கு உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதற்கு உதவியதாக நகர தலைவர் கூறியதைக் கேட்டு, அக்பர் மகிழ்ந்து பீர்பாலைப் பாராட்டி தன் கையிலிருந்த தங்க வளையம் ஒன்றைக் கழற்றி பரிசாகத் கொடுத்தார்.

நீதி : நீ ஒரு குற்றம் செய்தால் உன் மனமானது செய்த குற்றத்தை எண்ணி மனதில் பயம் இருந்து கொண்டே இருக்கும். அந்த பயத்தினாலே நீ மாட்டிக் கொள்வாய். மேலும், நம் மீது நம்பிக்கைக் வைத்து கொடுக்கும் பொறுப்பை நீ தவறாக பயன்படுத்தக் கூடாது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் படகு மீது மோதிய கடற்படை படகு!

## ❖13 பயணிகள் பரிதாபமாக உயிரிழப்பு
## ❖101 பேர் பத்திரமாக மீட்பு-மும்பையில் சோகம்

(டில்லி)

**மும்பை கடற்கரைப் பகுதியில் சுற்றுலா படகு மீது, கடற்படையின் அதிவேக ரோந்து படகு ஒன்று மோதியதில் 13 பேர் உயிரிழந்தனர். 101 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.**





அங்கு தேடும் பணியில் கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மும்பை அருகேயுள்ள எலிபென்டா தீவில் புகழ் பெற்ற கர்பரி குகைகள் உள்ளன.

இதைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகள் மும்பை கடற்கரையிலிருந்து படகுகளில் செல்வது வழக்கம்.

சுற்றுலா பயணிகள் 100 இற்கும் மேற்பட்டோருடன், நீல்கமல் என்ற படகு மும்பையின் கேட்வே ஆப் இந்தியா பகுதியிலிருந்து எலிபென்டா தீவு நோக்கி நேற்று முன்தினம் மாலை புறப்பட்டது.

அப்போது அந்த வழியாக கடற்படையின் ரோந்துப் படகு சென்றது.

அந்தப் படகு கட்டுப்பாட்டை இழந்து பயணிகள் படகு மீது அதி வேகத்தில் மோதியது.

இதில் பயணிகள் படகு பலத்த சேதம் அடைந்து, ஒரு பக்கமாக சாய்ந்தது. இதனால் படகில் இருந்த பயணிகள் சிலர் கடலில் விழுந்தனர்.

இத்தகவல் அறிந்ததும் கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் படகுகளில் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். கடலில் விழுந்த 13 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர். படகில் சென்ற பயணிகள் 101 பேர் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டனர். காயம் அடைந்தவர்கள், உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (நி-8)

# இந்தியாவுடன் பணியாற்றத் தயார் சீன அரசாங்கம் அறிவிப்பு

(பீஜிங்)

இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற தாம் தயாராக இருப்பதாகவும் இரு நாடுகளின் ஒற்றுமையை அதிகரிக்க தாம் தீர்மானித்துள்ளதாகவும் சீன அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு கால்வான் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட மோதல் சம்பவம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகளை கடுமையாகப் பாதித்திருந்தது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையேயும் முக்கிய பேச்சுவார்த்தைகள் எதுவும் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

அத்துடன் எல்லை பகுதிகளில் பதற்றமான சூழல் காணப்பட்டது. இந்திய அரசாங்கம் சீனாவின் புகழ் பெற்ற செயலிகள் மற்றும் சில தயாரிப்புக்களைப் புறக்கணித்தது. இதனால் இரு நாடுகளுக்கு இடையேயும் பனிப்போரொன்று நிலவி வந்தது.

எனினும் கால்வான் சம்பவம் நடந்து 4 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அது போன்ற சம்பவமொன்று மீண்டும் பதிவாகவில்லை. பெரியதாக எந்த பிரச்சினையும் வெடிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பிரச்சினைக்கு தீர்வு காண தாம் முன்வந்துள்ளதாகவும், இது போன்ற விடயங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் சீன அரசு தெரிவித்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் சீனாவின் மன மாற்றத்திற்கு வேறு காரணம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தியாவும், சீனாவும் ஏறத்தாழ ஒரே காலத்தில் தான் விடுதலை அடைந்தன. எனினும் உலகப் பொருளாதாரத்தில் சீனா முதலாவது இடத்திலும், இந்தியா 5 ஆவது இடத்திலும் உள்ளன.

குறிப்பாக இலத்திரனியல் உபகரணங்களின் உற்பத்தியில் சீனா அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. குறித்த வளர்ச்சியானது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக அந்நாடுகள் சீனாவின் தயாரிப்புகளை பாரிய அளவில் புறக்கணித்து வருகின்றன.


இதனையடுத்து உலக சந்தையில் சீன பொருட்களுக்கான கேள்வி கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைந்து கொண்டு வருகின்றது. எனவே தமது பொருளாதார சந்தையை மேலும் வலுப்படுத்தும் கட்டாயத்துக்கு சீன அரசு தள்ளப்பட்டுள்ளது.

ரஷ்யாவும் ஆபிரிக்காவும் சீன பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தாலும் அது சீனப் பொருளாதாரம் வலுவடைய போதாது என்பதே உண்மையாகும். இந்நிலையிலேயே சீனாவின் பார்வை இந்தியாவின் மீது திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் இதன் முதற்கட்டமாக இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் வாங் யீ ஆகியோர் பீஜிங்கில் சந்தித்து உரையாடவுள்ளனர். (நி-8)

# பிரபல ஸ்டண்ட் மாஸ்ரர் கோதண்டராமன் காலமானார்

(சென்னை)



தமிழ் திரைத்துறையில் பிரபல ஸ்டண்ட் மாஸ்ரராக மற்றும் நகைச்சுவை நடிகராக இருந்த கோதண்டராமன் காலமானார்.

65 வயதாகும் இவர் உடல் நலக்குறைவினால் சென்னை - பெரம்பூரில் உள்ள அவருடைய இல்லத்தில் நேற்று காலமானார்.

இவர் கடந்த 25 வருடங்களாக தமிழ் திரைத்துறையில் ஸ்டண்ட் மாஸ்ரராக பணிபுரிந்து வந்துள்ளார்.


அத்துடன் கலகலப்பு என்ற திரைப்படத்தில் நடிகர் சந்தானத்துடன் இணைந்து நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

அவருடைய மறைவுக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகிறார்கள். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் கரையொதுங்கிய மியன்மார் நாட்டு கப்பல்

- மயக்கமுற்று இருந்த பயணிகள்
- உலர் உணவுகள் வழங்கிய முல்லை மீனவர்கள்





(நெளுக்குளம்)

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் மேற்கு கடற்கரையில் சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளடங்கலாக சுமார் 100 இற்கு மேற்பட்ட பயணிகளுடன் மியன்மார் நாட்டு கப்பல் ஒன்று நேற்றுக் கரை ஒதுங்கிய சம்பவமொன்று இடம்பெற்றது.

குறித்த கப்பலில் இருப்பவர்களுக்கு உணவுகள், உலருணவுகளை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கியிருந்தனர்.

அதன்போது குறித்த படகில் சிலர் மயக்க நிலையிலும் சுகயீனமுற்றும் காணப்பட்டனர்.

குறித்த பயணிகளை மீட்பதற்கான நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டு இருந்தனர். (6-8-299)

## வெள்ள அனர்த்த ஒத்திகை ஸ்கந்தபுரத்தில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

வேள்ட் விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றின் ஆதரவோடு வெள்ள முன்னாயத்த ஒத்திகை ஸ்கந்தபுரம் கிராமத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மணியங்குளத்தை மையப்படுத்தி அதன் கீழ் உள்ள மக்கள் மணியங்குளம் உடைப்பெடுத்தால் முன் ஆயத்தமாக எவ்வாறு செயற்பட வேண்டும் என தெளிவுபடுத்தப்பட்டது.

குறித்த அனர்த்த முன் ஆயத்த ஒத்திகையில் இராணுவத்தினர், பொலிஸார், பிரதேச சபையினர், சுகாதார துறையினர் என அனர்த்தத்தின் போது செயற்படும் அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டனர். (6-8-316)

## ஜனவரி-ஒக்டோபர் வரை 45 பேர் மாரடைப்பால் மரணம்

### வவு.சுகாதார திணைக்களம்

(குருமன்காடு)


வவுனியா பொது வைத்திய சாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையுமான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருப்பதாக வவுனியா சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாரடைப்பால் இறந்தவர்கள் தொடர்பில் கேட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயது வரையானவர்களில் ஒருவரும் 40 தொடக்கம் 60 வயது வரையானவர்களில் 13 பேரும் 60 தொடக்கம் 100 வயது வரையானவர்களில் 31 பேருமாக 45 பேர் இவ்வாறு மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

அண்மைக்காலமாக வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் தொகை அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கான பல்வேறு காரணங்களும் சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8-250)

## இலவச உர விநியோகம் முல்லையிலும் முன்னெடுப்பு




(முல்லைத்தீவு)

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையில் வழங்கப்படும் MOP இலவச உர விநியோகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.பரணீகரன் நெறிப்படுத்தலில் ஆரம்பமானது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பதினொரு கமநல சேவை நிலையங்களிற்குட்பட்ட 26676 ஹெக்டயர் விவசாய செய்கை நிலங்களுக்கான 891.97 மெற்றிக் தொன் MOP இலவச உரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முள்ளியவளை மற்றும் உடையார்கட்டு கமநல சேவை நிலையங்களில் வழங்கப்பட்டது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய 1 ஹெக்டயர் பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசன விவசாய செய்கைக்கு 30kg உரமும் மானாவாரி பயிர்ச் செய்கைக்கு 25kg உரமும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)



வவுனியா மாவட்ட விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் சிறுவர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற 2024ம் ஆண்டுக்கான "சித்துவிலி சித்தம்" ஓவியப் போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் து.கோதை தலைமையில் நடைபெற்றது.

## யானை-மனித மோதலினை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சபையில் சத்தியலிங்கம் எம்.பி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் யானை- மனித மோதல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில்,

பொருளாதாரத்தில் வவுனியா மாவட்டம் ஏனைய மாவட்டங்களை போலவே, விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. இங்கு வாழும் விவசாயிகள் யானைகளின் தொல்லையினால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றார்கள். கடந்த மாதம் எமது மாவட்டத்தில் மாத்திரம் 11 பேர் யானைத்தாக்குதலுக்கு உள்ளாகி இறந்திருக்கின்றார்கள். ஆகவே எமது பகுதிகளுக்கு யானைவேலி அமைப்பதற்கான நிதியினை அரசாங்கம் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தெரிவித்தார். (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறிய ஜோ ரூட்




டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை ஐசிசி வெளியிட்டது. இதில் பட்ஸ்மேன்களின் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் 895 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமாக செயற்பட்டதால் சக வீரரான ஹாரி புரூக்கை பின்னுக்குத் தள்ளி ஜோ ரூட் முதலிடத்திற்கு முன்னேறி அசத்தினார்.

ஹாரி புரூக் 876 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் 867 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளார் .

அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் 5ஆவது இடத்தில் உள்ளார். இலங்கை வீரர் கமிந்து மெண்டிஸ் 6ஆவது இடத்திலும் உள்ளார்.

இந்திய வீரர்கள் ஜெய்ஸ்வால் 4ஆவது இடத்திலும் ரிஷப் பண்ட் 9ஆவது இடத்திலும் சுப்மன் கில் 16ஆவது இடத்திலும் விராட் கோலி 20ஆவது இடத்திலும் ரோகித் சர்மா 30ஆவது இடத்திலும் உள்ளனர். (6-8)

# சைம் அயூப், சல்மான் அதிரடி வெற்றி பெற்றது பாகிஸ்தான்




முதல் ஒருநாள் போட்டியில் சைம் அயூப், சல்மான் கைகொடுக்க பாகிஸ்தான் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி பார்ல் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"டாஸ்" வென்று முதலில் "பட்" செய்த தென்னாபிரிக்க அணிக்கு டோனி டி ஜோர்ஜி (33), ரியான் ரிக்கெல்டன் (36) நல்ல தொடக்கம் கொடுத்தனர். கப்டன் மார்க்ரம் (35) ஓரளவு கைகொடுத்தார். அபாரமாக ஆடிய ஹெய்ன்ரிச் கிளாசன் 86 ரன் விளாசினார்.

தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 239 ரன் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு அப்துல்லா ஷபிக் (0), கப்டன் முகமது ரிஸ்வான் (1) ஏமாற்றினர். பாபர் ஆசம் (23) சோபிக்கவில்லை. அபாரமாக ஆடிய சைம் அயூப் (109) சதம் விளாசினார். மறுமுனையில் அசத்திய சல்மான் அரைசதம் கடந்தார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 2 ரன் தேவைப்பட்டது.

மார்கோ யான்சென் பந்து வீசினார். மூன்றாவது பந்தை பவுண்டரிக்கு அடித்துவிட பாகிஸ்தான் அணி 49.3 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 242 ரன் எடுத்து வெற்றி பெற்றது. (6-8)

# தலைமை பயிற்சியாளராக டேரன் சமி நியமனம்





மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் டேரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் இயக்குநர் மைல்ஸ் பாஸ்கோம்ப் இதுதொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

40 வயதான டேரன் சமி கடந்த 2023 ஆம் ஆண்டு மேற்கிந்திய அணியின் ஒயிட்-பால் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றார்.

முன்னதாக 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் டேரன் சமி தலைமையிலான மேற்கிந்திய அணி ரி-20 உலகக் கிண்ணத்தை வென்று சரித்திரம் படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# அஷ்வினுக்கு நினைவுப்பரிசு வழங்கிய பட் கம்மின்ஸ்




இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது.

இதில் முதல் இரு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் இடம்பெற்றது.


மழையால் பாதிப்புக்கு உள்ளான இந்த ஆட்டம் டிராவில் முடிந்த உடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ரவிச்சந்திரன் அஷ்வின் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற அஷ்வினுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையில், ஓய்வை அறிவித்த அஷ்வினுக்கு நினைவுப் பரிசு வழங்கியுள்ளார். அவுஸ்திரேலிய வீரர்களின் கையொப்பம் அடங்கிய ஜெர்சியை அஷ்வினுக்கு பட் கம்மின்ஸ் வழங்கியுள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் – 2024



## மக்கள் மனங்களில் இடம்பிடித்த நாளிதழ்

தமிழ் மண்ணில் கால் பதித்து நடுநிலை தவறாமல் மக்களுக்குச் செய்திகளை வழங்கி வரும் வலம்புரி நாளிதழானது 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்பதையிட்டு வலம்புரி நாளிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

25 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் சோர்ந்துவிடாமல், தனக்கே உரித்தான பாணியில் செய்திகளை வெளியிட்டு மக்கள் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டது வலம்புரிப் பத்திரிகை.

சிறப்புச் செய்திகளோடு மட்டுமல்லாது விளையாட்டுச் செய்திகள், வணிகச் செய்திகள், உலகச் செய்திகள், விவாத அரங்குகள், விவசாயம் மற்றும் அரசியல் ஆய்வுக் கட்டுரைகள் போன்ற அம்சங்களுடன் சிறுவர்களுக்கான கதைகள் மற்றும் அவர்களது ஆக்கங்களையும் பிரசுரித்து அனைவரது பாராட்டையும் பெற்றது வலம்புரி பத்திரிகை. குறிப்பாக வலம்புரி பத்திரிகையில் வெளிவரும் ஆசிரியர் தலையங்கம் நாட்டு நடப்புக்களை அலசி ஆராய்ந்து நாள்தோறும் அவைபற்றிய விமர்சனங்களுடன் வெளிவருவது சிறப்பம்சம் ஆகும்.

இந்நிலையில் வெள்ளிவிழாக்காணும் வலம்புரி மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் மேலும் பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி வெளி வந்து மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**நா.வேதநாயகன்,**
ஆளுநர், வடக்கு மாகாணம்.



## பொதுநலன் பேணும் ஊடகம்

வலம்புரி நாளிதழின் வெள்ளி விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நாளிதழின் வளர்ச்சியை ஆரம்ப நாளிலிருந்து இன்று வரை நான் அறிவேன்.

இப்பத்திரிகை தெளிவான தூர நோக்கு, அர்ப்பணிப்பான பணி, நல்ல குறிக்கோள், வினைத்திறனான முகாமைத்துவம், நல்வழிகாட்டும் செல்நெறிகள் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றுடன் செயற்பட்டு மக்களின் நன் மதிப்பைப்பெற்று இன்று நிலைபேறான ஊடகமாக நெடிது வளர்ந்து நிற்கின்றது.


வலம்புரி ஒரு பிராந்திய நாளிதழாக வெளிவருகின்ற பொழுதும் இது தேசிய, சர்வதேச, பிராந்திய உள்ளூர்ச் செய்திகள் யாவற்றிற்கும் உரிய இடம் கொடுத்து வருகின்றது.

அரசியல், அபிவிருத்தி, சமூகநலன், விளையாட்டு, சிறுவர் பகுதி, ஆன்மிகம், சோதிடம், கட்டுரை எனப் பலவகை விடயங்களுடனும் மற்றும் கனதியான தலைப்புச் செய்தியுடனும் காத்திரமான ஆசிரிய தலையங்கத்துடனும் வெளிவருவது பாராட்டிற்குரியது.

வலம்புரி நாளிதழானது ஜனநாயகம் மக்கள் உரிமைக் காவலாகவும் பொதுநலன் பேணும் ஊடகமாகவும் விளங்கி வருவது இதன் சிறப்பாகும்.

இப்பத்திரிகை மென்மேலும் வளர எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

வாழ்நாள் பேராசிரியர்,
**பொ.பாலசுந்தரம்பிள்ளை.**



## நம்பிக்கைக்குரிய நாளிதழ் வலம்புரி

ஒரு பத்திரிகை நிறுவனத்தினை ஸ்தாபித்து அதனை செல்வனே இயக்கி உண்மையான செய்திகளையும் தகவல்களையும்அவற்றின்பின்னணிகளையும் ஆராய்ந்து நடுநிலைத்தன்மையோடு பிரசுரித்து மக்களிடையே அவற்றின் வினைத்திறன்மிக்கதும் பயனுள்ளதுமான விளைவுகளை மக்கள் மத்தியிலும் சமூகங்களிலும் உண்டாக்கத்தக்க வகையில் நம்பிக்கைக்குரியதும் நாணயம் மிக்கதுமான ஒரு பத்திரிகையாக விளங்குவது என்பது ஒரு சவாலான பயணமேயாகும். கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் வெளியீடு செய்யப்பட்ட தமிழ் நாழிதழ்களின் பின்னணியை நோக்கிப்பார்க்கையில் இன்று சிலவற்றின் தொடராக்கத்தைக் காண முடியாதுள்ளது.

ஊடகத் துறையில், 1999 ஆம் ஆண்டு தனது பிரசுரிப்புப் பயணத்தினை மேற்கொண்ட வலம்புரி - சங்குநாதம் நாளிதழ் பல சவால்களின் மத்தியில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் பத்திரிகைச் சுதந்திர கொள்கை தொடர்பில் முகங்கொடுக்கின்ற நெருக்கங்களுக்குள் தனது தொடர் பயணத்தினூடாகக் கடந்து, ஒரு கால் நூற்றாண்டிற்குள் பிரவேசிப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியதும் ஊக்குவிக்கப்பட வேண்டியதுமான ஒரு விடயமாகும்.

இப் பத்திரிகை ஒரு செய்தி பிரசுரிப்பு ஊடகமாக மட்டும் செயற்படாது, மக்களின் தேடல்களை-தேவைகளை வெளிக் கொணரும் ஒரு பதிவேடாகவும் ஊடக ஒழுக்க விதிகளுக்கமைய நேரியதும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதுமான முற்போக்கான சமூகசார் விடயங்களில் சிந்தனைத் தூண்டல்கள் மக்களிடையே உண்டாகவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் ஏற்படவும் தக்கதான தகவல்களை, விபரங்களை வழங்கி வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக வலம்புரியின் ஆசிரியர் தலையங்கப் பகுதியானது காலத்திற்ககேற்ப நடப்பு விடயங்களை உதாரணங்களுடனும் குறிப்புகளுடனும் விளக்கியும் விளித்தும் மக்களின் சிந்தனைக்கும் ஆற்றல் அறிவுக்கும் தீனியாக வழங்குவது குறிப்பிடத்தக்கது.

பல்சுவை அம்சங்களையும் துல்லியமாக, தரத்தோடு பிரசுரித்து வரும் வலம்புரி பன்னாட்டு, சமய, கலை, கலாசார பண்பாடு தொடர்பிலான விடயங்களையும் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் தெளிவாக அறியத் தருகின்றது. இத்தகைய வலம்புரி-சங்குநாதத்தின் ஸ்திரத் தன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் முன்னின்று உழைக்கும் அதன் இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் இந் நிறுவனத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களின் நம்பிக்கை, நாணயமிக்கதான சேவைக்காக எனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு அனைவரும் சௌபாக்கியங்கள் நிறைந்த சுகவாழ்வு வாழ வேண்டுமென இறைவனின் நல்லாசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்,**
பிரதம செயலாளர் வடக்கு மாகாணம்.



## வலம்புரியின் சிறப்பு அதன் ஆசிரியர் தலையங்கம்

"வலம்புரி" அதன் பய ணத்தில் 25 ஆண்டு களைக் கடந்து வெள்ளி விழாவைக் கொண்டா டும் இந் நேரத்தில் வலம் புரியின் நிர்வாக இயக்குநர்கள், பிரதம ஆசிரியர், ஆசிரியர் பீட உறுப்பி னர்கள், மற்றும் அத்தனை பணியாளர்களுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

இலங்கையின் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழ்களில் ஒன்றான "வலம்புரி"யின் வெற்றிப் பயணத்தில் இவர்கள் அனைவரதும் பங்கு அளப்பரியது. ஒரு பிராந்தியப் பத்திரிகை தனது 25 ஆண்டுகளைக் கடப்பதென்பது ஒரு வரலாற்றுச் சாதனை. அது ஒரு மைல்கல். அர்ப்பணிப்பின்றி அது சாத்தியமாகாது. வலம்புரி பணிக்குழாமின் தொலை நோக்கும் கடின உழைப்புமே அதற்குக் காரணமாகும்.

"வலம்புரி" இலங்கை ஊடக வரலாற்றில் காத்திர மானதொரு வகிபாகத்தைக் கொண்டுள்ளது. கடந்த இரண்டரை தசாப்தங்களாக, யாழ்ப்பாணத்திலும், அதற்கப்பாலும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் தகவல் களை வழங்குவதில் "வலம்புரி" தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. சமூக, அரசியல், கலாசார மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் அதே வேளையில் நன்னெறி, நடுவு நிலை, உண்மை மற்றும் பத்திரிகைச் செல்நெறி ஆகியவற்றின் அடிப்படையில் "வலம்புரி" தான் பெற்ற நற்பெயரைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டு வருகிறது.

"வலம்புரி" தனது ஆசிரியர் தலையங்கங்களின் ஊடாக மக்களுக்கான முக்கிய பிரச்சினைகளின் போது குரல் கொடுத்ததுடன் எளிய நடையிலும் அனைவருக்கும் விளக்கக்கூடிய வடிவமைப்பிலும் வெளிவருவது அதன் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

"வலம்புரி" அதன் அடுத்த அத்தியாயத்தை நோக்கி நகரும் இவ் வேளையில், அது தொழில்சார்ந்த தன் உயர்தரத்தை நிலைநிறுத்தி, எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்த முக்கியமான தருணத்தில், ஒட்டுமொத்த "வலம்புரி" குழுமமும் தொடர்ந்து முன்நகர்ந்து வெற்றி பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள் கிறேன். நாளிதழ் இன்னும் பல ஆண்டுகளுக்கு இடைவிடாத அர்ப்பணிப்புடன் வளர எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் எல்லை யில்லாப் பெருங்கருணை கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

**கணிதவியல் பேராசிரியர்,**
**சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா,**
துணைவேந்தர்,யாழ்.பல்கலைக்கழகம்.

## வளர் பிறையாய் வளர்க நீ வலம்புரியே!!



உலவுகின்ற சூரியனாய் ஊரெங்கும் சென்றே
அளவிறந்த சேவைதனை ஆற்றுபவன் நீ
பலருடைய பாராட்டும் வாழ்த்துகளும் வாங்கியே
களமதிலே உயர்வுற்றாய் வலம்புரி நீ!
தரமான தரணிக்கு உரமான உண்மைகளை
கனமாகப் பொதிந்து நற்றமிழில்
சிரமாய செய்தியெனச் சிந்திக்கத் தருகின்றாய்
தனியான துணிச்சலது வலம்புரிக்கே!
ஆலடியின் அன்றாட அலசலும் அரசியலும்
காலத்தின் சோதிடமும் கலைகளும்
ஞாலத்து நிகழ்வுகளும் பகுத்தறிவு விடயமுமாய்
காலையிலே கைகளிலே துலங்குவது
தினவிதழாய் வாராந்தப் பெருமலராய் மலரும்
திகழறிவுச் சுரங்கமெனும் வலம்புரியே!
இன்னமும் வளர்க நீ இமயமாய் இடரின்றி
மன்னவனாய் மக்களிடம் விளங்கியே!
திண்ணமாய் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்
வலம்புரியே வாழ்க நீ வாழிவாழி!!

**-இரா.தில்லைராஜனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் – 2024

## வலம்புரி தமிழ் மக்களின் குரல்



அன்புள்ள வலம் புரி குடும்பத்தினரே! தமிழ் மக்களின் குர லாக யாழ்ப்பாணத்திலி ருந்துதொடர்ந்து ஒலித்து வரும் "வலம்புரி" நாளி தழ் தனது 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண் டாடும் இனிய தருணத்தில், பொன்விழாவை நோக்கிய தனது முதலாவது அடியை எடுத்து வைக்கும் இத்தருணத்தில், வாழ்த்துரை வழங்கு வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த தருணம் யாழ்ப்பாணத்தின் மண்ணில் ஊடகத் துறையில் கிடைத்துள்ள ஒரு சிறப்பான சாதனையாகும்.

"நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் உங் கள் நாளிதழ் என்ற மகுட வாசகம், உங்கள் நாளிதழின் செயல்பாடுகளைத் துல்லியமாக பிரதி பலிக்கிறது. குறிப்பாக ஆசிரியர் தலையங்கம் என்பது ஒருநாளிதழின் ஆன்மா போன்றது. வலம்புரி நாளிதழின் ஆசிரியர் தலையங்கங்கள் யாழ்ப் பாணத்தின் மண்ணில் எழும் கேள்விகளுக்கு பதிலளிப்பதோடு, சமூக நியாயம், மனித உரிமைகள் போன்ற முக்கிய விடயங்களில் மக்களின் குரலாகவும் ஒலித்து வருகின்றன.


அந்தந்த காலகட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப, மக்கள் மனதின் கண்ணாடியாகச் செயற்பட்டு, தீர்க்கமான நடவடிக்கைகளுக்கான வழிகாட்டியாக வலம்புரி நாளிதழ் திகழ்ந்து வருவது பாராட்டுக் குரியது.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான வரலாற்றுப் பின்னணி மற்றும் பகிரப்பட்ட கலாசாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இலங் கையில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் நடை பெறும் நிகழ்வுகள் எங்களுக்கு மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தவை. வலம்புரி நாளிதழ் போன்ற ஊடகங்கள், இவ்விரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் செயல்படுவது மகிழ்ச்சியளிக்கிறது.

பொன்விழா நிகழ்வை நோக்கி தனது முதலா வது அடியை எடுத்து வைக்கும் இத்தருணமானது, வலம்புரி நாளிதழின் எதிர்கால முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என நம்புகிறேன். தொடர்ந்தும் நடுநிலையாக பொறுப்புணர்வுடன் செயல்பட்டு தமிழ் மக்களின் குரலாக ஒலித்திட வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீமான். சாய்முரளி,**
இந்தியத் துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்.

## வலம்புரியை ஏன் மக்கள் மதிக்கிறார்கள்!




வெள்ளிவிழாக் காணும் வலம்புரி ஒரு பெறுமதி மிக்க மக்க ளின் மனங்கவர்ந்த நாளிதழாக 25 ஆண் டுகளை இன்று (20. 12.2024) நிறைவு செய் கிறது. இவ்வாறு வெற்றி நடைகொண்டு வரும் வலம்புரியின் தகைமைகள் என்ன? அதனிடமுள்ள சிறப்புத்தன்மை ஒன்று என்ன வெனில், பத்தி எழுத்துக்களுக்கு கூடிய வாய்ப்பளிக்கும் இதழாக அமைவது. ஈழத்துத் தமிழ் பத்தி எழுத்துக்கள் பற்றிய ஒரு கலாநிதிப்பட்ட ஆய்வு ஒரு பல்கலைக்கழகத்திலே ஒருவரால் மேற் கொள்ளப்படுகின்றது. இலங்கை முழுவதையும் இந்த ஆய்வுக்குள்ளே அடக்க முடியாத காரணத்தால் கிழக்கிலங்கைப் பத்தி எழுத்துக்களை மட்டும் ஆய்வுசெய்கிறார். வடஇலங்கை உட்பட்ட வெளி யீடுகளில் பத்தி எழுத்துகள் பற்றி இன்னொருவர் ஆய்வு மேற்கொள்ளும் போது வலம்புரி நல்ல தரவுகளை வழங்கவுள்ளது.

வலம்புரியின் இன்னொரு தகைமை அது தன்னுடைய செய்திகளூடாக வாசகர்களைப் பெரு மளவு அச்சப்படுத்தாத தன்மையினை உடையதாக இருத்தலாகும். அதற்காக உண்மையை மறைப் பதில்லை. ஊடகக் கூறுகளை நம்முடைய பண்பாட் டுப் பின்னணியிலே நோக்கும் பாங்கு வலம்புரியிலே பலர் நயந்ததொன்றாகும். நம்முடைய இலக்கியம், பண்பாட்டு வரலாறு, நாட்டார் கதைகள், பாடல்கள் பழமொழிகள் ஆகிய செய்திகளை, தலையங்க எழுத்துகளை அணி செய்கின்றன. ஆசிரியர் தலையங்கம் தான் சரியெனக் கண்டதை எளிமையாகவும் விரிவாகவும் கூறும் பண்பு டையது. அங்கும் இதிகாசக் கதைகளும் பழமொழி களும் பொருத்தமாகக் கையாளப்படுகின்றன.

பூடகமாகக் கூறவேண்டியவை அமைதியாகக் கூறப்பட்டன. உரப்பிக் கூறவேண்டியன அந்தத் தொனியிலேயே கூறப்பட்டன. இவ்வாறான அருட் பார்வை, ஆய்வுப் பார்வை, நக்கீரப் பார்வை போன்றனவற்றை வலம்புரி, ஆலடி மாநாடு போன்ற பகுதிகளூடாகச் சாதித்துவந்துள்ளது. 25 ஆண்டுகளாக வலம்புரியை ஏற் றங்கள், இடர்கள் என எல்லாவற்றையும் எதிர்கொண்டு சங்குநாத ஒலியுடனும் சீரு டனும் செருக்குடனும் வெளிவர உழைத்துவரும் வலம்புரி குழுமத்துக்கு என் னுடைய வாழ்த்துக்களைக் கூறி வலம்புரி பொன்னாண்டு காண வாழ்த்துகிறேன்.

**தகைசால் வாழ்நாள் பேராசிரியர்,**
**அ. சண்முகதாஸ்,** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## மனச்சாட்சியின் அரண்




வலம்புரி நாளிதழின் வெள்ளி விழாவைக் கொண் டாடும் இத்தரு ணம் பெறுமதியானது. எங்கள் சமூக வரலாற் றின் மிக முக்கியமான காலப்பகுதியில் தோற்றம் பெற்றது வலம்புரி நாளிதழ். சூழமைவின் நெருக் கடிகளுக்குள் அமிழ்ந்து போகாமல் வரலாற்றின் சாட்சியாகவும் எங்கள் மனச்சாட்சியின் அரணாகவும் விளங்குகின்றமை அதன் தனித்துவம் என்பேன். காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீ தான். இந்தப் பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீ தான்! எனும் பாரதிதாசன் கவிதா வரிகளுக்கு அர்த்தம் தரும் வலம் புரிக்கான காலக்கடமைகள் நிறையவே காத்திருக்கின்றன.

நேற்றைய சாதனைகளை மீட்டி மகிழவும் சவால்களை மதிப்பிட்டு எதிர்காலத்தை திட்டமிடவும் வாய்த்த பொற்காலமாக இவ்வெள்ளி விழாக்காலம் அமைந்திட எல்லையிலா அன்புடன் வாழ்த்து கின்றேன்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்,**
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

## காலத்தின் கண்ணாடியாக மிளிரும் வலம்புரி - சங்குநாதம்




பல சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தொடர்ச்சியாக வளர்ச்சிப்பாதையில் நிதானமாகப் பணியாற்றி வரும் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகை இன்று வெள்ளி விழாக் காணுகின்றது. அதன் சேவைகளுக்கு தலை வணங்கி, வாழ்த்துக்களையும் பாராட்டு தல்களை யும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்து எங்கும் தமிழ் மணம் வீசிநிற்கும் இந்த பத்திரிகையின் சேவைகள் இன்னும் வளர்ச்சி பெறவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இப்பத்திரிகையின் நிர்வாகக் குழுவினரும் பணியாளர்களினதும் ஊக்கமும் திறமையும் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும் என்ற நம்பிக் கையை விதைத்து நிற்கிறது.

வலம்புரி-சங்குநாதம் பத்திரிகை சமூக சுகாதார மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் பங்களிப்பு பெரியது. கடந்த **415 வாரங்களாக நித்திலம் கலையகம்** தொகுத்து வழங்கும் **சுகமான விடியல்** என்ற மருத்துவ மலருக்கு வாராவாரம் ஒரு முழுப்பக் கத்தை ஒதுக்கி மக்களின் சுகாதார நிலை மேம்பட உதவிவரும் இந்த பத்திரிகைக் குழுமத்திற்கு நித்திலம் கலையகம் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளிவிழாக் காணும் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகையின் சேவைகள் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**Dr. [illegible]**
பொதுவைத்திய நிபுணர். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## பத்திரிகா தர்மத்தை பேணுகின்ற நாளிதழ்



வலம்புரி நாளிதழ் வெள்ளிவிழாக் காண்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்திற்கும் பத்திரிகைகளின் தோற்றம் வளர்ச்சிக்கும் நெருங்கிய உறவு உண்டு. 19 ஆம் நூற்றாண்டிலே கிழமை, மாதம், பூரணை முதலான நாட்களிலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பத்திரிகைகள் வெளிவந்தமை குறிப் பிடத்தக்கது. தமிழிலும் ஆங்கிலத்திலும் வந்த இப்பத்திரிகைகள் பற்றிய பல ஆய்வுகள் அண்மைக் காலத்திலே வெளிவந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. வாசகர் தொகை இங்கு பெருகியிருந்தமையே இப்பத்திரிகைகளின் வரு கைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

நவீன தொடர்புச் சாதனங்கள் பெருகியிருக்கின்ற இக்காலத் திலேயேயும் வடபகுதியிலே பத்திரிகைகள் பலவெளிவருவது பாராட்டிற்குரியது. இந்தவகையி லேதான் வலம்புரியின் வரு கையையும் நிலை பேற்றையும் நோக்கவேண்டியுள்ளது.

கால்நூற்றாண்டுக்குள் வலம்புரி தமிழ்மக்கள் மத்தியிலே காலூன்றி நிற்பதற்கு அதன் தரும நெறியே காரணம் எனலாம். நமது பண்பாட்டு மரபிலே பலவகையான தர்மங்கள் உண்டு. அவற் றிலே பத்திரிகா தர்ம மும் ஒன்று. வலம்புரி பத்திரிகா தர்மத்தைப் பேணிவருவதை அனை வரும் அறிவர். உண்மை, நேர்மை, பக்கம்சாராமை, விருப்பு வெறுப்புக்கு இடம் கொடாமை முதலிய வற்றை வலம்புரி கடைப்பிடிப்பதை நான் நன்கு அறிவேன். அந்தவகையிலேயும் வலம்புரிக்கு என் வாழ்த்துக்கள்.

வலம்புரி-சங்குநாதம் வாசகர் தேவையை மனங் கொண்டு சமூக ஈடுபாட்டுடன் வெளிவருகிறது. இலக்கிய, இலக்கண, சமூக, பண்பாடு, அரசியல் முதலான விடங்களை நீதிவழுவா நெறி முறை யிலே வெளியிடு வதில் வலம்புரி மகத்தான வெற்றியைப் பெற் றுள்ளது. வலம்புரி ஆசிரியத் தலையங்கத்திற்கு ஒரு தனிமதிப்பு உண்டு. ஆசிரியத் தலையங்கத்திற்காக வலம்புரிப்பத்திரிகையைப் பாராட்டுகின்ற பலருள் நானும் ஒருவன்.

இருபத்தைந்து ஆண்டு நிரம்பி இளமை, அழகு, இனிமை பொலிய வெளிவரும் வலம்புரி வெள்ளி விழாக் காணப்பதையிட்டு மட்டிலா மகிழ்ச்சி அடை கிறேன். என்றும் எனது இனிய வாழ்த் துக்கள்.

**பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபின்ஸ் வைத்தியசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
# රූබින්ස් රෝහල (පෞද්ගලික) සීමාසහිත
# RUHBINS HOSPITAL (PRIVATE) LIMITED

RUHBINS HOSPITAL
10
2015 - 2025




## வடமராட்சியில்...
## மக்கள் நலன் பேணும் ஆரோக்கிய ஆலயம்

### 24 மணிநேர சேவைகள்

வெளிநோயாளர் பிரிவு (OPD)
அவசர சிகிச்சைப்பிரிவு (ETU)
சிறுநீர், இரத்தப் பரிசோதனைகள்
மருந்தக சேவை (Pharmacy)
ECG பரிசோதனை
நோயாளர் காவு ஊர்தி (Ambulance)

### ஏனைய வசதிகள்

ஸ்கானிங் (Ultra Sound), ECHO
கதிர்ப்படப்பிரிவு (x-ray)
சத்திரசிகிச்சை பிரிவு (Operation Theatre)
நோயாளர் விடுதி வசதிகள் (Ward)

### சகல துறைசார் வைத்திய நிபுணர்களின் சேவைகள்...

பொது வைத்திய நிபுணர்கள், பொது சத்திர சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் வைத்திய நிபுணர்கள், மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்கள், தோல் வைத்திய நிபுணர்கள், கண் வைத்திய நிபுணர்கள், காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்கள், பல்வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள், இருதய வைத்திய நிபுணர்கள், உளநல வைத்திய நிபுணர்கள், கதிரியல் வைத்திய நிபுணர்கள், நீரிழிவு அகம் சுரக்கும் தொகுதியியல் வைத்திய நிபுணர்கள், சுவாசப்பாதை நுரையீரல் வைத்திய நிபுணர்கள், குடும்ப நலவைத்திய நிபுணர்கள், சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள், மூட்டுவாத மற்றும் மீளமைப்பு நிபுணர்கள், நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்கள்

### SERVICES/FACILITIES

- Out Patient Services - OPD
- In Patient/ In ward services - IPD
- Emergency treatment unit - ETU
- Medical laboratory Services
- Pharmacy
- Ambulance Services
- Blood transfusion Serives
- Expert subfertility care and IUI services
- Channeling / Clinics
- labour Room & Neonatal care
- Operation theatre
- Physiotherapy
- Speech Therapy
- Counselling

### INVESTGATIONS

- Digital x ray
- Dental x ray
- Ultra sound Scan
- ECG - Electro Cardiogram
- Echo Cardiography
- ETT - Treadmill Stress Test
- Histopathology & Laboratory Tests
- Colonoscopy / Endoscopy
- Eye Tests
- Hearing Tests
- Lung Function Tests
- Audiometry

(C-1824)

## LAPAROSCOPIC SURGERIES
லப்ராஸ்கோபிமுறை அறுவை சிகிச்சைகள்



FOLLOWING LAPAROSCOPIC PROCEDURES ARE BEING DONE AT OUR HOSPITAL
எமது மருத்துவமனையில் பின்வரும் லப்ராஸ்கோபிமுறை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன

- APPENDIX REMOVAL - குடல்வளரியை அகற்றுதல்
- HERNIA REPAIR - குடலிறக்கத்தை சரிசெய்தல்
- GALLBLADDER REMOVAL - பித்தப்பையை அகற்றுதல்
- WOMB REMOVAL - கருப்பையை அகற்றுதல்
- BIOPSY
- ANY DIAGNOSTIC LAPAROSCOPY PROCEDURE & DYE TEST
- FIBROIDS REMOVAL - நார்த்திசுக்கட்டிகளை அகற்றுதல்




LESS HOSPITAL STAY
வேகமாக குணமடைதல்

LESS SCAR
குறைவான வடு

LESS PAIN
குறைந்த வலி

160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம், இலங்கை.
160, පෙදුරුතුඩුව පාර, නෙල්ලියඩි, යාපනය, ශ්‍රී ලංකා.
160, Point Pedro Road - Nelliady, Jaffna - Sri Lanka.
+9421 226 1500 / +9421 492 7232
www.ruhbinshospitals.com
admin@ruhbinshospitals.com

Ruhbins Hospital

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர் வணிக நிலையம்

# ASEER VANIGA NILAIYAM



ஸ்தாபகர்
சி.யோ.செல்வநாயகம்

அனைத்துவிதமான காகிதாதிகள் மற்றும்
பாடசாலை உபகரணங்களையும்
மொத்தமாகவும் சில்லறையாவும் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்

**உலகெங்குமுள்ள தமிழர்களின் இதயம் கவர்ந்த
வலம்புரியே உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்.**

Atlas Homerun Write NATARAJ LINC

(C-1846)



## மாபெரும் விலைக்கழிவுகளுடன்

**டிசம்பர் 20 முதல் – பெப்ரவரி 15 வரை**

(நிபந்தனைக்கு உட்பட்டது)

### Exercise Book

| | |
|---|---|
| Atlas | - 20 % |
| Homerun | - 25 % |
| Write | - 27.5% |



### Stationery

| | |
|---|---|
| Natraj | - 20 % |
| Linic | - 2 0% |



**T.P: 021 222 5485 ,
Fax:- 021 222 2842**

**202, 204, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் - 2024


Rube Since 1982 Jewellery

**வெள்ளிவிழா காணும் வலம்புரிக்கு வாழ்த்துகள்**

தங்கநகை உலகில் 39 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.*

## ரூபி ஜுவல்லரி

இலங்கையில் எமது ஜுவல்லறி
இல: 227, 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். என்னும் முகவரியைத் தவிர
வேறு எங்கும் கிளைகள் எமக்கு இல்லை
என்பதைவாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.






www.rubejewellery.com

இல: 227 - 229,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 6919
0777 344 074
0777 396 176

(C-1838)



**வெள்ளி விழாவில் காலடி பதிக்கும்**
**வலம்புரி நாளிதழுக்கு**
**எமது நல்வாழ்த்துக்கள்!**

## தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்கான

## யாழ் எக்ஸ்பிரஸ்
YARL EXPRESS

தெளிவான அச்சமைப்பு அனுபவமிக்க ஆசான்களின் ஆக்கம்.

## ஒவ்வொரு தவணைக்குமான
பயிற்சி வினாத்தாள்கள்

*Published By:*
**Unilanka's Publication & Book Depot**
No. 326, Sea street. Colombo - 11. Tel : 011 401 4438
Hotline / Whatsapp / Viber : 077 625 8778
unilankas@gmail.com facebook : Unilankas Books & Calendars

(C-1842)

எமது நிறுவனத்தில்,
ஆரம்பக்கல்வி தொடக்கம் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான
தமிழ், ஆங்கில மொழிமூல பாடப்புத்தகங்கள், பயிற்சி புத்தகங்கள்,
போட்டி பரீட்சை புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள்,
கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக உபகரணங்கள்
மற்றும் தமிழ் பஞ்சாங்க மாத நாட்காட்டிகள்,
தினத்தாள் நாட்காட்டிகள், அலுவலக நாட்காட்டிகள்,
தினக்குறிப்பு புத்தகங்கள் உட்பட அனைத்து அச்சு வேலைகளும்
செய்து தரப்படும்.

சிறந்த விலைக்கழிவுகளுடன்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
தேவையான தனிப்பிரதிகள் தபால் மூலம் நாடெங்கிலும்
அனுப்பி வைக்கப்படும்.



## நத்தார் பண்டிகையை முன்னிட்டு
## சிறப்பு விலைக் கழிவு

## K.S.T TEX
## கே.எஸ்.ரி ரெக்ஸ்

பண்டிகையை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட
பட்டு, Cotton சாறிகள்
10% தொடக்கம் 70 % விலைக்கழிவு



Formal சாறிகள், அனைத்துவிதமான
சாறிகள், பட்டு வேட்டி வகைகள்,
இருபாலாருக்குமுரிய திருமண
ஆடைகள் சிறுவர்களுக்குரிய ஆடைகள்.

எம்மிடம் நியாயமான
விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

புதிய ஆடைகளின்
வரவுகளை அறிந்து கொள்ள
எமது பேஸ்புக் தளத்தை பின்தொடரவும்

Follower on faceBook-KST Tex
What'app-077 532 6239

இல.127/31, 1 ம் மாடி,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P-021 222 9170

(C-1839)



## Millennium
## Guest House & Restaurants
## மிலேனியம் கெஸ்ட் ஹவுஸ்





TP: 021 222 5876/ 077 601 6310
No.76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.

(C-1830)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



நடுவுநிலையோடு நன்னெறி காக்கும் பத்திரிகைத் தர்மத்தோடு வெள்ளிவிழாக் காணும் வலம்புரிப் பத்திரிகையின் வளர்ச்சி மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன். இந்நாழிதழ் தமிழ் மண்ணில் கால்பதித்து தர்மத்தின் குரலாக ஒலியெழுப்பி 25 ஆண்டுகளைக் கடந்து நிற்பது உண்மையில் சாதனைப் பயணம். வெள்ளி விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்தினைத் தெரிவித்து, பத்திரிகைக் குழுமத்தின் நிர்வாகத் திறத்தையும் பாராட்டி மகிழ்கிறேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன குரு முதல்வர்.**

## வெள்ளிவிழா ஆண்டில் வீறுநடைபோடும் வலம்புரி



எமது பிரதேசத்தின் கலை, கலாசார, சமூக, ஆன்மிக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளின் செல்நெறிகளை வாசகர்களுக்கு நம்பகமான-உறுதியான செய்திகளாக உடனுக்குடன் வழங்குவதில் வலம்புரி முன்னிலை வகிக்கின்றது.


பாமரன் தொடக்கம் பண்டிதன் வரை அன்றாடம் நாடுகின்ற தினசரியாக வலம்புரி விளங்குகின்றது. துறை சார்ந்த ஆக்கங்கள், கட்டுரைகள் என்பவை பெறுமதி மிக்கவையாய்த் திகழ்கின்றன.

நடுநிலை தவறாத ஆசிரியதலையங்கங்களால் வாசகர்களிடையே தனக்கென ஒரு தனியிடத்தை தக்க வைத்துள்ளது. மிகக் குறைந்த கட்டணத்தில் விளம்பரங்கள் செய்ய முடிவதனால், வாசகர்களின் பொருளாதார சுமை பெருமளவில் எளிதாகின்றமை மேலும் வலம்புரிக்கு வலுச்சேர்க்கின்றது.

மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு ஆதாரமான சமய நல்லொழுக்கங்களையும் மானிட விழுமியங்களையும் கட்டியெழுப்புவதனைத் தனது தலையாய பணியாக வலம்புரி செயற்பட்டு வருவது போற்றுதற்குரியது. காலாதிகாலமாய் மக்களின் மனங்கவர்ந்த பத்திரிகையாக மிளிரும் "வலம்புரி" வெள்ளி விழாவில் சிறப்புற்று ஓங்க எமது நல்லாசிகள். சூரியர்-சந்திரர் மிளிர்கின்ற காலம்வரை "வலம்புரி" வானுயர் புகழ் பெற்று வளமான பத்திரிகையாக சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்,**
தலைவர், சர்வதேச இந்துமதக்குருமார் ஒன்றியம்.

## மக்கள் சமூகத்தின் துணிச்சல்மிக்க குரல்



சமூகத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரி நாளிதழ் தனது 25ஆம் வருடத்தில் வெள்ளி விழா நிறைவு கண்டு 26 ஆவது ஆண்டில் கால் பதிப்பதையிட்டு இன் நன்னாளில் எமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

காலத்திற்கேற்ற கருத்தாழம்மிக்க ஆசிரியர் தலையங்கம் வலம்புரியின் சங்குநாதமாய் மிளிர்வது கண்கூடு. புராண இதிகாச கதைகளை நாசுக்காக வெளிப்படுத்தி, மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லும் பணியினை வலம்புரி ஆற்றி வருவது சிறப்பானது.

இன்றைய அரசியல் புறழ்வு நிலைமைகளிலும் செய்திகளை நடுவு நிலை தவறாமல் - எதிர்விளைவு எப்படி இருக்கும் என கவலை கொள்ளாமல் உடனுக்குடன் செய்திகளை வெளிக்கொணருதல் வலம்புரியின் வழமை.


இவ்வாறான செயற்றிறனே வலம்புரியின் வாசகர் வட்டம் விரிந்து செல்லக் காரணமாகின்றது.

சமூகத்தின் குரலாக துணிச்சலுடன் செயற்படும் வலம்புரி நாளிதழின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றும் அனைத்து உள்ளங்களையும் நாம் வாழ்த்துகின்றோம். 25 ஆவது ஆண்டில் வெள்ளி விழாக் காணும் வலம்புரியின் பணி தொடர எமது நல்லாசிகள்.

**செ.மோகனதாஸ் சுவாமிகள்,**
சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# 25 ஆவது ஆண்டு நி

## வலம்புரி நாளிதழின் யௌவன திசை ஆரம்பமாகின்றது



வலம்புரி நாளிதழ் தமிழ் மண்ணில் கால்பதித்து 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 26 ஆவது ஆண்டைத்தொடங்குகின்றது. ஒரு மனிதனுடைய வாழ்நாளில் பால, யௌவன, வார்த்தக்யம் எனும் 3 பருவங்கள் உள்ளன. அதில் வலம்புரி நாளிதழ் இப்பொழுது யௌவனத்தை அடைந்திருக்கின்றது. யௌவன காலம் சந்தோஷத்தை தருகின்ற காலம். இக்காலத்தில் அதனுடைய பெருமை அழகுற வளர்ச்சியடையும் என நம்புகின்றோம். மேற்கொண்டு இந்நாளிதழ் சிறப்பாக வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,**
அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்,
காயத்ரீ பீடம், இணுவில்.

## உன் குரல் பாரெங்கும் பேரொலியாய் ஒலிக்கட்டும்




அகவை 26 இல் கால்பதிக்கும் வலம்புரியே வாழ்க! பல்லாண்டு. தமிழ் பேசும் மக்களின் குறைகளை உலகிற்கு உணர்த்தும் உன்பணிகண்டு உவகை கொள்கிறது தமிழ் உலகு. ஸ்ரீகிருஷ்ணன் கரத்திருக்கும் பாஞ்சஜன்யத்தின் ஒலி எப்படி தீமையை அழித்ததோ அவ்வாறு உன் ஒலி கொண்டு தமிழர் துயர் துடைத்திடுவாய்.

தனித்தன்மையுடன் நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் நாளிதழாய் வலம்புரி-சங்குநாதம் தனது 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழா காண்கிறது.

மேன்மேலும் சிறந்து வாசகர் மனதில் உயர்வு பெற்று வலம் வரவேண்டும். பல்வேறு அம்சங்களுடன் அதாவது மருத்துவம், ஆன்மிகம், அரசியல், சிறந்த ஆசிரியர் தலையங்கம், விழிப்புணர்வு என சிறந்த நாளிதழாய் மக்கள் கைகளில் தவழும் வலம்புரிப் பத்திரிகை தன் சிறப்பை மேலும் மேன்மை கொள்ளச் செய்து தடையின்றி மக்கள் பணி புரிய வேண்டும். வலம்புரியின் பணி பல்லாண்டு காலம் தொடர வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளின் திருவருளையும், குருமார்களின் குருவருளையும் பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்,**
எட்டாவது குருபீடாதிபதி, ஸ்ரீசிவகுருநாத குருபீடம்,
வேதாந்தமடம், கந்தர்மடம்.

## அறம்காக்கும் நடுநிலைப் பத்திரிகை




வெள்ளிவிழாக்காணும்வலம்புரி பத்திரிகை யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு துணிச்சலுடன் அறம் காக்கும் நடுநிலை பத்திரிகையாகும்.

இன்றைய ஊடக யுகத்தில் மிகவும் இன்றியமையாததும் நம்பகமானதுமான தகவல்கள், அறிக்கைகள், கருத்துக்களை வாசகர்களுக்குக் கொண்டு செல்வதில் கால் நூற்றாண்டு காலமாக வலம்புரி வீறுநடை போடுகின்றது.

வலம்புரியின் முகாமைத்துவம், ஆசிரியர்கள், பணிக்குழுவினர் பத்திரிகையின் வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களுக்கு வாசகர்கள் சார்பில் வாழ்த்துக்கள் உரித்தாகுக. வெள்ளி விழாக் காணும் வலம்புரி வாழ்க! வளர்க! மேலும் பொன்விழா, வைரவிழா, பவள விழா, நூற்றாண்டு விழா கொண்டாட வாழ்த்துகிறோம்.

**[illegible]ரீட் இக்பால், யாழ்ப்பாணம்.**


## தா
## ஒ



தர்
யெழுப்
நாதம்
கின்
ஊடகங்
ணாங்க
லும் ப
பத்திரி
பையும் சிறப்பையும் என்றும் இ
வகையில் சிறப்புமிக்க பத்திரிகை உ
பிறப்பெடுத்த வலம்புரி-சங்குநாத
ஐந்தாவது ஆண்டு நிறைவு வெள்
நான் மகிழ்வடைந்து வாழ்த்துகின்
செய்திகளை மாத்திரம் கொடுப்ப
குரலாக அர்ப்பணிப்புடனும், ச
வலம்புரி-சங்குநாதம் நாளிதழ் செ
இப் பத்திரிகையின் வெற்றிக்கு
இருக்கின்ற ஆசிரியர் மற்றும் அ
ளர்கள், எழுத்தாளர்களுக்கும் என
நன்றிகளையும் தெரிவித்துக் கொள்
காலத்திலும் இப் பத்திரிகை மேலும்
ஆசித்து வாழ்த்துகின்றேன். இறை
உங்களோடு இருப்பதாக.

**யஸ்ரின் பேன**

## வலம்
## தர்



வல
வெள்ளி
டாடுவ
வதில்
கின்றே
படி-நட
எடுத்து
தர்மம் என்பார்கள். அதனை நன்
யாகும். அதற்கும் அப்பால் எவர்
அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், உ
ஆராய்ந்து தெளிந்து அதனால் மக்
நன்மை தீமைகளை எடுத்தியம்
தனிச்சிறப்புண்டு.
வலம்புரி கடந்த சில வருட கா
அட்டமத்து சனி பிடித்து ஆட்டியது போ
சோதனைகளையும் சந்தித்தது
இருந்தபோதிலும் அவற்றையெல்
பால் நின்ற நற்பலனினாலும் அதா
காத்தால் தர்மம் எம்மைக்காக்கும் (
என்னும் தர்மத்தின் வழியை கடை
ருளாலும் மக்கள் வலம்புரியில் 
நம்பிக்கையினாலும் வென்றெடுத்
காணுகின்றது என்றால், அது தர்மத்
விழாவாகும்.
கலியுகத்தில் நல்லது செய்து
மிகப்பெரிய சாதனையாகும். வ
தின்பால் நின்று வழுவாது மற்றவ
பால் நிற்கவைக்கும் திறமை இ
உரித்தான ஆசிரிய தலையங்கத்
வலம்புரி வெள்ளி விழாக் கொண்
பிரதமஆசிரியர் மற்றும் வலம்பு
வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றேன். இ
கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வ**
குருமுதல்
சரஸ்வதி அம்பாள் உபதேச திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் – 2024

## தர்மத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரி

தர்மத்தின் குரலாக ஒலி
யெழுப்பும் வலம்புரி-சங்கு
நாதம் நாளிதழ், நவீன உல
கின் தொடர்பாடலுக்கேற்ப
ஊடகங்கள் இன்று பல பரிமா
ணங்களை எடுத்துள்ள போதி
லும் பாரம்பரிய ஊடகமான
பத்திரிகை தனக்குரிய இயல்
றும் இழக்கவில்லை. அந்த
ரிகை ஊடகமாக அக்காலத்தில்
ங்குநாதம் நாளிதழ் இருபத்து
வு வெள்ளி விழா வேளையில்
த்துகின்றேன்.
காடுப்பதற்கு அப்பால் தர்மத்தின்
வும், சமூகப் பொறுப்புடனும்
ரிதழ் செயலாற்றி வருகின்றது.
றிக்கு காரணகர்த்தாக்களாக
றும் அனைத்து ஊடகவியலா
ம் எனது பாராட்டுக்களையும்,
கொள்கின்றேன். தொடர்கின்ற
மேலும் வளர வேண்டும் என்று
. இறைவனின் ஆசி என்றும்

**பேரருட்திரு கலாநிதி**
**ன் பேனாட் ஞானப்பிரகாசம்,**
யாழ்.ஆயர்.

## வலம்புரியின் வெள்ளி விழா தர்மத்தின் வெற்றி

வலம்புரி நாளிதழ் தனது
வெள்ளி விழாவினை கொண்
டாடுவதையிட்டு வாழ்த்து
வதில் நான் பெருமகிழ்வடை
கின்றேன். நடந்ததை நடந்த
படி-நடப்பதை நடக்கும்படி
எடுத்துரைப்பது பத்திரிகைத்


னை நன்கு செய்வது வலம்புரி
ம் எவர் எதைச்சொன்னாலும்
மல், உண்மை எது என்பதை
ால் மக்களுக்கு ஏற்படக்கூடிய
த்தியம்புவதில் வலம்புரிக்கு

வருட காலத்தில் ஏறக்குறைய
டியது போல் பல இடர்களையும்
தித்ததைக் காண முடிந்தது.
றயெல்லாம் தனது தர்மத்தின்
ம் அதாவது தர்மத்தினை நாம்
ாக்கும் (தர்மோ ரக்சதி ரக்ஷித),
ய கடைப்பிடித்ததாலும், இறைய
ரியில் வைத்த அபரிமிதமான
றெடுத்து இன்று வெள்ளிவிழா
து தர்மத்திற்கு கிடைத்த வெற்றி

சய்து வெற்றியடைவது என்பது
ம்.. வலம்புரி தானும் தர்மத்
மற்றவர்களையும் தர்மத்தின்
மை இருக்கின்றது. தனக்கே
யங்கத்தினால் பிரகாசிக்கும்
கொண்டாடும் இவ்வேளையில்
வலம்புரிக் குடும்பத்தினரை
ன். இறைவனைப் பிரார்த்திக்

**சபா.வாசுதேவக் குருக்கள்,**
ருமுதல்வர், வீணாகானகுருபீடம்,
தேச திருக்கோவில், சண்டிலிப்பாய்.

## மக்கள் சமூகத்தின் மதிப்பைப் பெற்ற நாளிதழ்



ஊடக அறங்காக்கும் உன்னதப் பத்திரிகை வலம்புரி. இப்பத்திரிகையின் வெள்ளி விழாக் குறித்து அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். வலம்புரியின் வாழ்விற்காக அயராது உழைத்த நிர்வாகிகள், பிரதம ஆசிரியர், துணை ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நிறைந்த ஆசிகள் உரித்தாகுக!

யுத்த சூழலில் எழுந்த இப்பத்திரிகை இருபத்து ஐந்து ஆண்டுகளாக மக்களால் மனதார நேசிக்கப்பட்டு வெள்ளி விழாக் காண்கிறது. சுயநலமின்றி பொதுநலத்தைக் கருத்திற்கொண்டு நாளும் வலம் வரும் வலம்புரியின் சிறப்பு அறியாதவர்களில்லை.

சத்திய வழியில் நின்று, நீதி நூல்களை உதாரணம் காட்டி தினமும் ஆசிரியர் தலையங்கம் எழுதப்படுகிறது. கற்ற சமூகத்தால் இன்று மதிக்கப்படுகின்ற பத்திரிகையாக வலம்புரி திகழ்கிறது. இப்பத்திரிகையில் வரும் விடயங்கள் மிகவும் நிதானமாகச் சிந்தித்து வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம்.

நாகரிகமான வார்த்தைகளால் தவறுகளைச் சுட்டிக் காட்டும் வலம்புரியின் தனித்துவமான செயற்றிறனைப் பலரும் பாராட்டி வருகிறார்கள்.

ஈழத்தமிழர்களிடையே ஒற்றுமைப்பலத்தைக் கட்டியெழுப்புங்களென அரசியல் தலைவர்களுக்கு வலம்புரி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மையால் ஏற்படப்போகும் இடையூறுகளை முன்கூட்டியே தீர்க்க தரிசனமாக எடுத்துரைத்து வந்தது.

ஆத்மீகம், இலக்கியம், அரசியல், சமூகப் பிரச்சினைகள் அனைத்தையும் உள்ளடக்கித் தன்பணி தொடரும் வலம்புரியின் நற்பணி தொடரட்டும்.

இருபத்து ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ இடையூறுகளைச் சந்தித்த போதிலும் இறையருளால் வலம்புரி தன் தூய பணியை தொடர்ந்த வண்ணம் வருகின்றது. இப்பத்திரிகை சூரியர்-சந்திரர் உள்ளவரை நிலைத்து நிற்க துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன். வெள்ளிவிழாக் காலத்தில் சொந்த நிலம் வாங்கி அழகான கட்டடம் அமைத்து வலம்புரி மிளிர்வது போற்றுதலுக்குரியது.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்.**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.


## ஊடகத்தின் இமயம்



ஊடகத்தின் இமயம் வலம்புரி நாளிதழ் என்றால் அது மிகையாகாது. வலம்புரி நாளிதழ் 25 ஆவது அகவையை பூர்த்தி செய்து 26 ஆவது ஆண்டில் தடம்பதிப்பதையும் அதற்கு ஆசிச் செய்தி வழங்குவதையும் இட்டு மகிழ்வடைகின்றேன். வலம்புரியின் செய்திகள் காத்திரமான ஆசிரிய தலையங்கத்துடன் வெளிவருவதையிட்டு பேருவகை அடைகின்றேன். வலம்புரி நாளிதழ் ஞாயிற்றுகிழமைகளில் சங்குநாதம் என்ற பெயரில் வெளிவருதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். வலம்புரி எதிர்காலத்தில் பொன்விழா, பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றையும் கொண்டாட எல்லாம் வல்ல வல்வைஸ்ரீ முத்துமாரியை தியானித்து எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்** J.P.
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்,
ஆதீனகர்த்தா, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

## தமிழர் வரலாற்றின் முதல்நிலைச் சான்று வலம்புரி



யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு நீண்டவரலாறு உண்டு. 1841 ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரிமார் "உதயதாரகை" என்ற பத்திரிகையை ஆரம்பித்து விட்டனர். கடந்த 183 வருடங்களில் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறைந்துவிட்டன.

1999 ஆம் ஆண்டு வலம்புரி தோன்றியது. இந்தக் குழந்தை பிழைக்குமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. ஆனால் வலம்புரி பேதை-பெதும்மை- மங்கை-மடந்தை என்ற பருவங்களைத்தாண்டி இப் பொழுது அரிவையாகி பூரணப்பொலிவுடன் தமிழ்பேசும் இடம் எங்கும் உலாவி வருகின்றாள்.

மார்க் ருவைன் என்ற அறிஞர்; பத்திரிகைகள் செய்திகளை அறிவிப்பதோடு இருந்து விடக்கூடாது. அச் செய்திகளைப் பிரசுரிப்பதன் மூலம் அவற்றைக் குறித்து ஏதாவது செய்யவேண்டும் என்ற வெறியை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வலம்புரிப்பத்திரிகை சமுதாயத்தின் பச்சை உண்மைகளைப் பிளந்து காட்டுகின்றது. ஆலடி மாநாடு நாட்டு நடப்புக்களைப் பாமரமக்களின் மொழிநடையில் துல்லியமாக விளக்குகின்றது.


வியாசர் பதில்கள் அரசியல்வாதிகளினதும் உயர் அதிகாரிகளினதும் சுயநலப்போக்குகளை துல்லியமாக எடுத்து விளக்குகின்றன. பொது மக்கள் வலம்புரியை தமது காலை உணவைப் போல முக்கியமானதொரு விடயமாகக் கருதி வருகின்றனர்.

இதற்குக் காரணம் உலகநடப்புக்களையும் உள்ளூர் செய்திகளையும் உடனடியாகத் தருவது தான். 25 வருடத்தை பூர்த்தி செய்துவிட்ட வலம்புரிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதன் ஆசிரியர் விஜயசுந்தரம் வலம்புரியை கண்மணிபோல் காத்து வருகின்றார்.

இலங்கை வாழ்தமிழ் மக்களின் கடந்த கால நூற்றாண்டு வரலாற்றை எழுதுபவர்களுக்கு முதல் நிலைச் சான்றுகளில் ஒன்றாக விளங்கப்போவது வலம்புரி என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**பேராயர், எஸ்.ஜெபநேசன்.**

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனை



வலம்புரி பத்திரிகை நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற மகுட வாக்குடன் ஒரு கால் நூற்றாண்டை கடந்து விட்டது என்ற செய்தி நிச்சயம் ஒரு மகிழ்வான அதே வேளை பாராட்டப்பட்டு கொண்டாடப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

இந்த சாதனைமிக்க சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நேரத்தில் வலம்புரி பத்திரிகை ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரம், பத்திரிகை நிர்வாக இயக்குனர் சிவஞானம் வெற்றிவேலாயுதம், நிர்வாகப் பணிப்பாளர் கணேசன் திருமாலழகன், முகாமையாளர் மாவை நா.கஜேந்திரன் மற்றும் துணை ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் - ஊடகப் பணியாளர்கள் வலம்புரி பத்திரிகை வாசக அன்பர்கள் ஆகியோர் அடங்கிய வலம்புரிக் குடும்பத்தினரைப் பாராட்டி வாழ்த்துவது மனதிற்கு மகிழ்வளிக்கிறது.

இறைவனின் வல்லமையால் வலம்புரி பத்திரிகை தமிழர் தாயகத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்று நின்று நிலைக்க வேண்டுமென மனம் நிறைந்த இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கலாநிதி. ரூபன் மரியாம்பிள்ளை,**
பிஷப் சௌந்தரம் மீடியா சென்ரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் – 2024

UNITY COMPUTERS




ALL-IN-ONE
IT SOLUTION

HOT LINE
**077 344 6194**

- PRINTERS / SCANNERS / ACCESSORIES
- CCTV & SECURITY ALARM SYSTEMS
- UPS & COMPUTER ACCESSORIES
- DESKTOP & LAPTOP COMPUTER
- MULTIMEDIA & OTHER


UNITY COMPUTERS

### UNITY PC SYSTEMS

No. 74, Illupayady Junction, Palali road Jaffna
Tel: 021 222 0666, 077 344 6194
Email: yathu31@gmail.com

(C-1827)

இடர்கண்டு மனம் தளராது போராடி
இமயம் தொட்ட வலம்புரிக்கு வாழ்த்துக்கள்




### A1 RAJAH CREAM HOUSE

#37, Sir Pon Ramanathan Road, Jaffna. 021 221 6085 / 077 223 4176

(C-1832)

இடர்கண்டு மனம் தளராது போராடி
இமயம் தொட்ட வலம்புரிக்கு வாழ்த்துக்கள்

## லைடன் புடவை நிலையம்

வாடிக்கையாளர் அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
நத்தார், புதுவருட பிறப்பு பண்டிகைகளை முன்னிட்டு

**10%** சிறப்பு விலைக்கழிவு

கீழே காணப்படும் தினங்களில்
**22.12.2024/29.12.2024**
திறக்கப்படும்



எமது நண்பர்கள்,
அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவரும் சகல வகையான
துணிவகைகள், ரெடிமெற்
ஆடைகள்,
மகப்பேற்றுத் தாய்மார்கள்,
குழந்தைகளுக்கான
பொருட்கள் மற்றும் மாணவர்
களுக்கான சீருடைத்
துணி வகைகள் போன்ற
அனைத்து விதமான
பொருட்களையும்
10% விசேட விலைக்கழிவில்
பெற்றுக்கொள்ள
உடனே விரையுங்கள்.

(C-1836)

410, Hospital Road, Jaffna.
**021 222 2381**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IVA NURSING SCHOOL

IVA NURSING SCHOOL · Making You Success · MY HOPE GROUP

## Diploma in Nursing Assistant
## Diploma in Care Giver



GATEHOUSE AWARDS · BRITISH COUNCIL · SCE

**Approved by ministry of foreign affairs**

தாதிய உதவியாளர் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு O/L பரீட்சையில் 5 பாட சித்தி பெற்ற இருபாலரும் விண்ணப்பிக்கலாம் (வயது 17-36 வரை)





**சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்**

**அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலையில் உடனடி வேலைவாய்ப்பு**

(C-1833)


TP: 071 872 2350 / 071 872 352
No.154, A/01, Navalar Road,
Jaffna.

TP: 071 872 2351 / 071 077 0770
No.28, Baar Road,
Batticaloa.

# RHINE RESTAURANT
# ராகினி உணவகம்

RHINE RESTAURANT




(C-1840)



- ரைய்ஸ்
- கறி வகைகள்
- நூடில்ஸ் வகைகள்
- பிறை சிக்கின்
- டெவல் சிக்கின்

இவை அனைத்தையும் தரமான, இயற்கை சுவையூட்டிகள் சேர்த்து சுவையான விதத்தில் நாங்கள் உங்களுக்கு வழங்குகிறோம்

இல 46 2D, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P–077 740 6300

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் - 2024



## தமிழ் மக்களின் தனிப்பெரும் குரல்

"ஊடகத் துறையில் புதிய அகவையில் உயரக் கால் பதித்து உயர்ந்து சென்றிட உவகையோடு வாழ்த்துகின்றேன்"

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனும் மகாகவியின் கூற்றுக்கிணங்க தமிழ் மொழியின் சிறப்பினையும் தமிழர் நம் இருப்பையும் நிலை நிறுத்துகின்ற நோக்கிலே ஈழ மண்ணிலிருந்து தமிழ் பேசும் மக்களின் தனிப் பெருங்குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரியானது, சமுத்திரம் போன்ற ஆழமான பல தடைகளைத் தகர்த்தெறிந்து தனது வெற்றிப் பயணத்தில் பத்திரிகைத் துறையில் இருபத்து ஐந்து ஆண்டுகளைக் கடந்து புதியதோர் அத்தியாயமாகிய இருபத்து ஆறாவது ஆண்டில் காலடி பதிப்பதை முன்னிட்டு மலரவுள்ள வெள்ளி விழாச் சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமிதமும் பூரிப்புமடை கின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் மக்களுக்குத் தகவல் களை வழங்கும் அளப்பரிய பணிகளை ஆற்று வதில் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. அவ்வகையில் மக்களுக்குள்ள தகவலறியும் உரிமைச் சுதந்திரம் போலவே நியாயமானதும் சமநிலைத் தன்மையுடையதுமான செய்திகளைத் துல்லியமாக ஆராய்ந்து வழங்குவது பத்திரி கைகளின் தலையாய பொறுப்பாகும். அத்தோடு அகிலமெங்கும் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வு களைச் செய்திகளாக்கி அவற்றை மக்களிடையே கொண்டு சென்று அவர்களை அறிவுள்ள, ஆரோக் கியம் மிக்க சமூகமாக மாற்றுகின்ற குறிக்கோளுடன் வீறுநடை போடுகின்ற பணியில் பத்திரிகைகள் ஈடுபடுகின்றன எனக் கூறின் அது மிகையாகாது.

கருத்துச் சுதந்திரமானது சனநாயகத்தின் அத்தி வாரமாகவும் அடிச்சுவடாகவும் அமைந்துள்ளது. இதன் பின்னணியில் வலம்புரி நாளிதழானது தமிழ் சமுதாயத்தை நடுவுநிலையுடன் வழி நடத்தவும் அறிவு, ஆற்றல் ஆளுமையை வளர்த்திடவும் சனநாயக விழுமியங்களை அடியொற்றி தொடர்ந்தும் வெளிவர வேண்டு மென வாழ்த்தி நிற்கின்றேன்.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலே ஆதிக்கம் செலுத்துகின்ற இணையத்தளங்கள் மற்றும் ஏனைய சமூக வலையமைப்புக்களினூடாக மிக வேகமாக செய்திப் பரிமாற்றம் இடம்பெறுகின்ற போதிலும் ஒவ்வொரு தமிழ்ச் சமூகத்தினரிடை யேயும் செய்திகளை சொல்வடிவிலே சுமந்து செல்லுகின்ற ஆற்றல் பத்திரிகைகளுக்கேயுரிய தெனலாம்.

எனவே புதிய அத்தியாயத்தில் சுவடு பதிக்கும் வலம்புரி நாளிதழின் சேவைகள் யாவும் செவ் வனே தொடரவும் தமிழ் மண்ணிலே அகலக்கால் பதித்து அனைவரது கைகளிலும் தவழ வேண்டு மெனவும் இப்பத்திரிகையின் வளர்ச்சிப் படியிலே தொடர்ந்து பயணிக்கும் அனைத்து குழுமத்திற்கும் எனது வாழ்த்துக்களை அன்போடு பகிர்வதோடு, இப் பத்திரிகையானது தொடர்ந்தும் வளர்ச்சிப் படியினை எட்டிச் செல்ல எனது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

**அ.உமாமகேஸ்வரன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.

### வெற்றி நடைபோட்டு நீடூழி வாழ்க பல்லாண்டு

ஆதவன் உதயமாவதற்கு முன்பதாக
அதிகாலை வேளைதனில் - எம்
கைகளில் கிடைத்திடுவாய்
உடன் செய்திகள், உண்மைச் செய்திகள்
உலகச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள்
ஆலயச் செய்திகள், சோதிடச் செய்திகளை
உன்னதமாய் என்றும் தந்திடுவாய்
நடுநிலை தவறா நன்னெறி ஏடு. உனது
ஆசிரியர் தலையங்கத்திற்கு நிகர் நீதான்
உன்னைப் போற்றுவார்கள். ஏசுவார்கள்
அதற்காக நீ அஞ்சவேண்டாம் - துணிவோடு
உள்ளதை உள்ளபடி இன்றும்போல என்றுமே எழுதிவா!
வெற்றி நடைபோட்டு நீடூழி வாழ்க பல்லாண்டு!

**- நயினை விசு - இரசநாயகம்**



## சரியான தகவல்களை சிறப்பாக வழங்கும் நாளிதழ்

யாழ்ப்பாணத்தில் இரு ந்து கடந்த 25 வருடங்க ளாக வெளிவரும் வலம் புரி நாளிதழ் வடபகுதி மக் களால் விரும்பி வாசிக்கப் படும் பத்திரிகைகளில் ஒன் றாக விளங்குகின்றது.


தினசரி அச்சில் வெளிவரும் பத்திரிகை தொடர்ச்சி யாக 25 வருடங்களாக வெளிவருவது சவால் மிக் கது. இதற்குப் பங்களித்த ஊடகப்பணியாளர்கள் அனை வரும் பாராட்டுக்குரியவர்கள். பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களைக் கட்டுரைத் தொடர்களாகப் பிரசுரித்து, மக்களுக்கு சரியான தகவல் களை வழங்குவதும் அறிவூட்டு வதும் இன்றிய மையாத பணி. வலம்புரி இதனைச் சிறப்பாகச் செய்து வருகிறது. வலம்புரிப் பத்திரிகை தனித்துவமான கட் டுரைகளாலும் ஆசிரியத் தலையங்கங்களாலும் தனக் கான ஒரு வாசகர் வட்டத்தை தக்கவைத்துள்ளது.

இன்று மருத்துவத் துறையானது ஊடகங்களால் சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது. எழுத்து என்பது வன்மத்தை ஏற்படுத்துவதாக மாறிவருகிறது. எவற்றை எழுத்தில் அல்லது பொதுவெளியில் பகிர முடியும் என்ற அடிப்படையான அறவுணர்வின்றி குறுகிய நோக்கங்களுக்காக மருத்துவத்துறை இலக்கு வைக்கப்படுகிறது. ஒரு சம்பவம் எமக்கு ஏற்படுத்தும் உணர்வுகள் பல சந்தர்ப்பங்களில் உண்மையைக் கண்டறிவதைத் தடுத்து விடுகிறது.

சமூக ஊடகச் செய்திகள், அச்சு ஊடகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தனி நபர்களது விருப்பு வெறுப்புக்கள் செய்திகளாகக் கட்டமைக் கப்படுகின்றபோது அது சமூகத்தில் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி ஜனநாயத்தின் மீது அவ நம்பிக்கையை ஏற்படுத்தும்.

எமது நாட்டில் அச்சு ஊடகங்கள் பொறுப்புடன் செயற் படுவது பாராட்டுக்குரியது. இவ்வகையில் வெள்ளி விழா ஆண்டில் தடம் பதிக்கும் வலம்புரி நாளிதழ் முன்னுதாரணமாகத் திகழ்ந்து தனது ஊடகப் பணியை மேலும் சிறப்பாகத் தொடர வேண்டும் என்று வாழ்த்துவதில் உளம் மகிழ்கின்றேன்.

**மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி,**
பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை.



## அனைவருக்கும் முன்மாதிரியான பத்திரிகை

வலம்புரி-சங்குநாதம் பத்திரிகையானது இவ்வரு டம் தனது 25 ஆண்டுகால சிறப்பான பயணத்தை நிறைவு செய்து வெள்ளி விழா கொண்டாடுவது மகிழ்ச் சியும் பெருமையும் அளிக்கிறது. சிந்தனையைத் தூண்டும் செய்திகள், சமூக விழிப்புணர்வுக் கட்டுரை கள், மற்றும் மக்கள் நலனுக்கான முயற்சிகள் அனைத்தும் இந்த 25 ஆண்டுகளின் பயணத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளன. இக் கால் நூற்றாண்டுப் பயணத்தில், சமூக நீதிக்கு உறுதுணையாக இருந்து, மக்களின் கருத்துகளை வெளிப்படுத்திய மேம்பாட்டு முயற்சிகள் நினைவுறுத்தப்பட வேண்டியவை. செய்தி சேகரிப்பு, சிந்தனை மாற்றம், சமூக ஒத்து ழைப்பில் நீங்களாற்றிய பணி அனைவருக்கும் முன் மாதிரியாக திகழ்கிறது.

நேர்மை, நம்பிக்கை, முற்றுப்புள்ளி இல்லாத ஆர் வம் ஆகியவற்றுடன் செய்திகளை மக்கள் முன்னி லையில் சமர்ப்பித்துடன் பத்திரிகைத்துறையில் நீங்கள் ஏற்படுத்திய மைல்கல் குறிப்பிடத்தக்கது. உழைப்பை யும் தாராள மனப்பான்மையையும் வெளிப்படுத்தும் உங்கள் சாதனை, சமூகத்தை முன்னேற்ற வழியில் கொண்டு செல்கிறது. உங்கள் பத்திரிகையின் வெள்ளி விழா வரலாற்றில் நினைவில் நிற்கும் பொற் காலமாகவும் இனிமையான தொடக்கமாகவும் மேலும் பல வெற்றிகளை தனதாக்கிக்கொள்ளவும் எம் மினிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**ச.கிருஷ்ணேந்திரன்,**
ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.



## நிலையான இடத்தை தனதாக்கிய நாளிதழ்

காலம் எனும் பெரு வெளியில் தனது பய ணப் பாதையில் இன் றையதினம் 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 26 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பேருவகையடை கின்றேன்.

இன்றைய அதிவேகத் தொழில்நுட்ப யுகத் தில் ஒரு பத்திரிகையானது மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதென்பது மிகவும் கடினமான விடயமாகும். அதுவும் 25 ஆண்டுகள் ஊட கப்பரப்பில் நிலைத்திருப்பதென்பது மிகவும் சிறப்பான பாராட்டப்படக்கூடிய விடயமாகும். நவீன ஊடகங்களின் வருகையிலும் கால மாற்றத்திற்கேற்ப தன்னை வடிவமைத்து வாசகர் மத்தியில் தனக்கென ஒரு நிலையான இடத்தை வலம்புரி தக்கவைத்துக் கொண்டி ருக்கின்றது.

மேலும் ஊடக தர்மத்தைப் பின்பற்றி வலம்புரிப் பத்திரிகையானது பல நூற்றாண் டுகள் தமிழ் ஊடகப் பரப்பில் நிலைத்து நிற்க வேண்டுமென வெள்ளி விழாக் காணும் இந் நாளில் வாழ்த்துவதுடன் வலம்புரிப் பத்திரி கைக் குடும்பத்தின் ஆசிரியர் குழுவினர், செய்தியாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**சு.முரளிதரன்,**
அரசாங்க அதிபர் (பதில்),
கிளிநொச்சி மாவட்டம்.



## தமிழ் மக்களின் அடையாளம்

தனது 25 ஆவது வய தினில் காலடி எடுத்து வைத்து வெள்ளி விழாக் காணும் வலம்புரி பத்திரி கைக்கு வவுனியா மாவட் டச்செயலாளர் என்ற வகை யில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

வலம்புரி பத்திரிகையானது தமிழ் பேசும் மக்கள் மனதில் தனக்கென ஒரு தனியான அடையாளத்தை பெற்றுள்ளதுடன் நடுவு நிலை தவறா நன்நெறி காத்தல் எனும் கருப்பொருளுடன் இன்றுவரை தனது சமூகத்திற்காக ஆற்றிவரும் பணிகள் மிகவும் பாராட்டுதற்குரியவை.

25 ஆண்டுகளாக சமூக, அரசியல், பொருளா தார, கலாசார மற்றும் ஏனைய துறைகள் சார் பல்வேறு அம்சங்களை தன்னுள் தாங்கி அவற்றைத் தமிழ் பேசும் மக்களிடம் சேர்த்துவருவதுடன், தனக்கென தனியான வாசகர் வட்டத்தை உருவாக்கி பல வகைகளிலும் முன்னின்று செயற்பட்டு வரு கின்றது.

அந்தவகையில் 2024.12.20ஆம் திகதியன்று வெள்ளி விழாக் காணும் வலம்புரி பத்திரிகைக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பத்திரிகைக் குழு மத்தினை வாழ்த்துவதுடன், மக்கள் பணியில் தனக்குள்ள பொறுப்பினை தொடர்ந்து ஆற்று வதற்கும் மென்மேலும் வளர்ச்சி பெறவும் எனது நல்வாழ்த்துக்களையும், ஆசிகளையும் மகிழ்ச் சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்

**பீ.ஏ.சரத்சந்ர,**
அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் - 2024



## எமது பிரதேசத்தின் முதல்நிலை நாளிதழ்

உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்திலே வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணங்களை பிரதிபலிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி நாளிதழ் ஆரம்பத்தில் பலவிதமான இடையூறுகளையும் மற்றும் இடர்களையும் சந்தித்த போதிலும் அவற்றையும் தாண்டி தனது இருபத்தைந்து ஆண்டுகளை இன்று நிறைவு செய்தமை மகிழ்ச்சிக்குரியது. இன்று இப் பத்திரிகை எமது பிரதேசத்தில் முன்னணிப் பத்திரிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறது.

இப் பத்திரிகை பக்கச்சார்பின்றி நடுவு நிலையில் நின்று அனைத்துவிதமான செய்திகளிலும் உள்ளவற்றை உள்ளவாறு பொது மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு மிகுந்த அடக்கத்தோடும் துணிவுடனும் பிரசுரித்து வருவது போற்றத்தக்க சிறப்பம்சமாகும். அதன் பெயரில் கூட அதன் சிறப்பம்சம் தொனிக்கிறது.

இன்றைய சமூக அமைப்பில் சமூகத்தின் பார்வைகள் பல்வேறு கோணங்களிலும் செலுத்தப்படுகின்ற இவ் வேளைகளில், எம் பாரம்பரிய விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்து மிகவும் துல்லியமாகவும் ஆணித்தரமாகவும் செய்திகளை வெளியிட்டு வருவதினால் வாசகர்களின் உள்ளத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

இச் சிறப்புமிக்க நாளில் இந் நாளிதழின் இயக்குநர்கள், ஆசிரியர், நிருபர்கள், பணிபுரிவோர் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கலாநிதி. க.தவலிங்கம்,**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



## வாசகர்களின் இதயங்களை வென்ற நாளிதழ்

ஊடகத் துறையிலே ஆல விருட்சம் போல வேரூன்றி நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் வலம்புரி நாளிதழ் தனது பயணத்தில் 25 வருடங்களைக் கடந்து இன்றைய தினம் (20.12.2024) வெள்ளி விழாவில் தடம் பதிக்கின்றமையை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

வலம்புரி பத்திரிக்கையானது கடந்த 25 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும், வாசகர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் திகழ்ந்தது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை

இன்றைய நவீன இலத்திரனியல் ஊடக தளத்தின் மத்தியில் தனித்துவமாக மிளிர்ந்து சமூக, அரசியல், பொருளாதாரச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், உண்மையும் நேர்மையும் ஒருமித்தே விளங்கும் ஆசிரியத் தலையங்கம், காவியத் தொடர்கள், சிறுவர் அரங்கம், மக்களின் மனதிலே சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் இன்று ஓர் தகவல் கனதியான காலத்திற்குப் பொருத்தமான கட்டுரை கள், தமிழர் மருத்துவத்தைப் பறைசாற்றும் வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை, மேலைத்தேய மருத்துவக் கட்டுரைகள் போன்ற காத்திரமான படைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு வாசகர்களின் இதயங்களை வென்று வெற்றி நடை போடுகின்றது.

இந்த சிறப்பான நாளில், உங்கள் குழுவிற்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு வலம்புரி நாளிதழ் தனக்கே உரித்தான நடுவுநிலை தவறாத பாதையில் தொடர்ந்து வெற்றி நடை போட்டு முழங்க எனது மனமார்ந்த ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உங்கள் அர்ப்பணிப்பு புதிய உயரங்களைத் தொட்டு அடையட்டும்.

**வைத்திய கலாநிதி**
**திருமதி விவியன் சத்தியசீலன்,**
பீடாதிபதி, சித்த மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகை

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டில் தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற நாளிதழாக மல ருகின்ற வலம்புரிப் பத் திரிகை தனது வெள்ளி விழாக் காணுவதை யிட்டு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே- அதைத் தொழுது படித்திடடி பாப்பா"

என்ற புரட்சிக் கவி பாரதியின் உணர்ச்சிக் கவி வரிகளுக்கமைய ஆக்கபூர்வமான விடயங்களை அழகு தமிழில் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற ஒரு பத்திரிகையாக வலம்புரிப் பத்திரிகையை நான் காண்கின்றேன்.

எமது நாட்டில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள், அசம்பாவிதங்கள், அனர்த்தங்கள், உண்மைச் சம்பவங்கள், வணிகச் செய்திகள் போன்ற தகவல் களை மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் இடம் பெறுகின்ற- அனைவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள், பயனுள்ள விளம்பரங்கள், அரசியல் செய்திகள் போன்ற பல்வேறு விடயங் களை உடனுக்குடன் மக்களுக்கு வெளிக் கொண்டு வருவதன் மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு நாளிதழாக இப் பத்திரிகை காணப் படுகின்றமை பாராட்டத்தக்கது.

மாணவ சமுதாயத்திற்கு பயன்தரக் கூடிய அறிவியல், ஆன்மிகம் மற்றும் கல்வி தொடர்பான விடயங்கள், சிறப்புக் கட்டுரைகள் போன்ற பயன் தரும் ஆக்கங்கள், பொது அறிவை வளர்க்கும் கருத்துக்கள், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளமிடும் விடயங்கள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் வலம்புரி பத்திரிகை வெள்ளி விழாக் காண்பத னையிட்டு மிகவும் புளகாங்கிதம் அடைகின்றேன்.

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான் - இந்தப் பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீ தான்! ஊரினைக் காட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே"

என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடலுக்கு அர்த்தம் கூறும் ஓர் நாளிதழாக வலம்புரிப் பத்திரிகை மிளிர்கின்றது என்றால் அது மிகையாகாது.

இப் பத்திரிகையின் ஓர் அங்கமாக "சங்குநாதம்" வாரத்தின் இறுதி நாளில் ஆய்வுக் கட்டுரைகள், நாட்டு நடப்புகள், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கி வெளிவரு கின்றமை வரவேற்கத்தக்கது.

வலம்புரிப் பத்திரிகையின் இருபத்தைந்தாவது அகவை நிறைவுச் சிறப்பிதழ் மணங்கமழ மலரவும், இப் பத்திரிகை மேலும் பல்லாண்டுகள் நேர்த்தியான தன் பணியைத் தடையேதுமின்றித் தொடரவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்,**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.



## Valampurii plays a crucial role in promoting coexistence and integrity among the different races and religions in Sri Lanka

Appreciation for Valampurii Newspaper on 25 Years of Excellence

We are writing to extend our heartfelt congratulations on Valampurii Newspaper's 25th anniversary. This remarkable milestone is a testament to its unwavering commitment to delivering exceptional journalism.

Valampurii has truly set itself apart as a beacon of excellence in the world of Tamil journalism. The use of simple yet creative language, coupled with thought-provoking editorials, has not only engaged readers but also sparked critical thinking among them. The publication's excellent sentence structure makes it accessible and engaging to both young and old alike.

The diverse range of articles it publishes, including insightful features, and informative content showcase its commitment to serving the interests of a wide readership.

The commendable visual presentation that makes Valampurii stand out is the captivating photographs that enhance the news smart and rich.

Valampurii's layout is marvellous effectively attracting the interest of its readers. The visual presentation of the layout is elegant and reader-friendly. Furthermore, its commitment to covering a variety of news topics with a particular emphasis on Catholic news and articles, showcases its dedication to community and faith.

True to the role of mass media Valampurii informs educates and unites its audience contributing significantly to society's intellectual and cultural growth. Valampurii keeps the community informed and engaged on various issues. Valampurii has established itself as a vital source of information.

Valampurii: A Milestone of 25 Years of Excellence

We would like to extend our heartfelt congratulations to Valampurii Newspaper on its 25th anniversary. This remarkable milestone is a testament to the paper's unwavering commitment to delivering exceptional journalism.

Valampurii has established itself as a beacon of excellence in Tamil journalism. Its use of simple yet creative language, combined with thought-provoking editorials, engages readers and encourages critical thinking. The publication's excellent sentence structure makes it accessible and appealing to audiences of all ages.

The diverse range of articles published, including insightful features and informative content, showcases Valampurii's dedication to serving the interests of a wide readership. The commendable visual presentation is highlighted by captivating photographs that enrich the news content.

Valampurii's layout is marvelous and effectively attracts the interest of its readers. The design is both elegant and reader-friendly. Furthermore, its commitment to covering a variety of news topics, with a particular emphasis on Catholic news and articles, reflects its dedication to community and faith.

True to its role as a mass media outlet, Valampurii informs, educates, and unites its audience, contributing significantly to the intellectual and cultural growth of society. By keeping the community informed and engaged on various issues, Valampurii has firmly established itself as a vital source of information.

It is heartening to know that Valampurii attracts readers of all ages, from children to the elderly, truly reflecting its broad appeal and influence in the community. The comprehensive coverage of a wide array of news topics and informative articles, presented with well-structured sentences, has made Valampurii a trusted source of information for many.

As Valampurii celebrates this significant milestone, we want to express our gratitude for the dedication, hard work, and passion that the entire team has put into producing high-quality journalism over the past 25 years. Their efforts have not gone unnoticed.

Valampurii plays a crucial role in promoting coexistence and integrity among the various races and religions in Sri Lanka. Its commitment to fostering understanding and harmony in a multicultural society is commendable.

Congratulations on reaching this significant milestone. May Valampurii continue to inspire, inform, and engage its readers for many more years of outstanding journalism to come.

**Warm regards**
**M.Francisk**
**Catholic Freelance Journalist**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலம்புரி நீடு வாழ்க!

நடுநிலை தவறாது நன்னெறிதனில் நடக்கும்
நல்லிதழாய் நாளும் செய்திகள் பல தாங்கி
திடம்மிகு கொள்கை நிறை ஆசிரியத் தலையங்கம்
தரம்மிகு தகவல்தரும் ஆடி மாநாட்டுடனே
விடியலுக்கு வழிகாட்டும் சுகநலக் கருத்துகள்
வியாசரது விளக்கமிகு தக்க பதில்களுடன்
தடம்பதித்துத் தனித்துவமாய்த் திகழ்கின்ற வலம்புரியே!
தரணியெங்கும் நீடூழி வாழ்க! வாழ்க!!

-நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்


தர்மத்தின் குரலாய் ஓங்கி ஒலிக்கும் வலம்புரிப் பத்திரிகை
வெள்ளிவிழா ஆண்டில் வெற்றி நடை போடுவதையிட்டு
மிக்க மகிழ்வு கொண்டு வாழ்த்துகின்றோம்

# சதாபொன்ஸ் நிறுவனம்

மாலிசந்தி, அல்வாய்.
கல்வி நிலையம் (ஒழுக்கம் சார் கல்வி)

077 309 5176, 021 226 3206
076 126 0105

(C-1823)



தர்மத்தின் குரலாய் ஒலிக்கும் வலம்புரியே
உன் சேவை மக்களுக்கு என்றும் தேவை

# த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள் உங்கள்
அழகிற்கு இன்னும் அழகு சேர்க்கும்
நவீன ரக ஆடைகளின் சாம்ராஜ்ஜியம்



(C-1829)

21, நவீன சந்தை
மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
021 222 9965



வலம்புரி சங்குநாதம் மேலும் சிறப்பம்சங்களுடன்
மக்கள் மனதில் என்றும் ஒலிக்கட்டும்

# ஸ்ரீ முருகன்
## SRI MURUGAN
Communication Agency post office

WESTERN UNION MONEY TRANSFER · DHL · Ria · Enriching Your Life · aramex · MMBL Money Master · Dialog · MoneyGram

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.

(C-1834)

No.303, K.K.S Road,
Jaffna, Srilanka
Tel: 0094 21 222 2690 / 5392
Fax: 0094 21 222 3214
Email: Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com



25 ஆவது வெள்ளி விழா ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரி
பத்திரிகை மென்மேலும் பல்லாண்டு மக்கள் பணி செய்ய
வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

# சித்தா ஹெஜியோம் டிசைன்ஸ்






தொடர்புகளுக்கு
075 039 4357
075 544 5901

(C-1822)

இல.49A அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



25 ஆவது அகவைதனில் கால்பதிக்கும் வலம்புரியே நீ வாழ்க பல்லாண்டு

# சாயிராம் பல்பொருள் அங்காடி



எங்களிடம் யாழ்ப்பாணம் மற்றும்
கொழும்பு புதினப் பத்திரிகைகளும்
அவற்றுக்கான விளம்பரங்களும்
பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...

எம்மிடம் யாழ்–கொழும்பு செல்வதற்கு உங்கள் வீட்டிற்கு வந்து ஏற்றி நீங்கள் கொழும்பிற்குச் செல்லவேண்டிய இடத்தில் இறக்கிவிடுவோம்.

வாழ்த்துக்கள், கோவில்
விளம்பரங்கள், மரண
அறிவித்தல்கள், அந்தியேட்டி
கிரியைகள் மற்றும் கண்ணீர்
அஞ்சலிகள்

தொடர்பு: 076 839 9108 சங்கத்தானை, சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் – 2024



## நடுவுநிலையாகச் செய்திகளை நற்றமிழில் வழங்கும் வலம்புரி

எங்கள் மண்ணில் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் தற்போது அருகி வருகின்றது என்ற கவலையைப் பலர் குறிப்பிட்டாலும் வலம்புரியை வாசிக்கும் பழக்கம் பெருகி வருகின்றது என்பதே யதார்த்தம். பிரதம ஆசிரியரின் வழிநடத்தலில் இணைந்து செயற்படும் பத்திரிகைக் குழுமத் தினரதும் முகாமைக் குழுவினரதும் சிறந்த ஆளுமைசார் வெளிப்பாடே வலம்புரியின் எழுச்சி.

எந்தவித அரசியல் பொருளாதார பின்புலமும் இன்றி வேலை வாய்ப்புக்காகக் காத்திருந்த பட்டதாரி இளைஞர்களின் சிந்தனையில் எழுச்சிபெற்று வெற்றி கண்ட நாளிதழ் வலம்புரி என்பது குறிப் பிடத்தக்கது. இன்று வடபுல மக்களின் குரலாக உலகெங்கும் ஓங்கி ஒலிக்கின்றது.

வலம்புரி வெளிவந்த நாளில் நீர்வைமணி ஐயா எனக்கு அதனை அறிமுகம் செய்தார். அன்று தன்னுடன் என்னையும் சேர்த்து பத்திரிகை முகவரிடம் சந்தாதாரர் ஆக்கினார். நடுவுநிலையான செய்திகளை நற்றமிழில் நவிலும் வலம்புரி தனது ஆசிரியர் தலையங்கங்கள் ஊடாகப் பலரது மனங் களை அன்றே வென்றது. பத்திரிகை வாங்கியவுடன் ஆர்வத்துடன் ஆசிரியர் தலையங்கம் வாசிக்கும் வாசகர்களே இதற்குச் சான்று.

ஆசிரியர் கல்வியை வழங்கும் மூத்த நிறுவனமாகிய எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய பல செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியையும் வலம்புரி ஆற்றுகின்றது. அதிலும் கடந்த ஆண்டு, எமது நூற்றாண்டு பற்றிய செய்திகளையும் கட்டுரைகளையும் கல்விச் சமூகத்திடம் கொண்டு சென்று சேர்த்து கலாசாலைக் கென ஒரு கணிப்பை உண்டு பண்ணியமையை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். தமிழ் மக்களின் எண்ணவோட்டத்தைக் காய்தல், உவத்தல் இன்றி வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாகிய வலம்புரிக்கு வெள்ளிவிழா நல்வாழ்த்துகள்.

**செந்தமிழ்ச் சொல்லருவி**
**சந்திரமௌலீசன் லலீசன்**
முதல்வர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.



## புதிதாய் புதுமையாய் வலம்புரியாள் வலம் வருவாள்!

அகவை இருபத்தைந்தை அளவில்லா சிறப்புடன் இன்றுமென்றும்
ஆளுமையின் முழுமதியாய் ஆரவாரமின்றி எளிமையினுருவில்
இளையவளாய் அனைவரையும் இழுத்தெடுக்கும் இளவலாய்
ஈரமான நெஞ்சுடையோய் இரவுப்பூச்சிகளாய் நடுநிசியில்
உருக்கொண்டு விடியமுன் மனைகளில் வாசகசாலைகளில்
ஊடகத்துறையின் மொத்தவுருவமாய் ஊகங்களுக்கும் பதிலளித்து
எழுத்துகளை நிதானமாய் வலிமைமிகு ஆசிரியசெய்தியுடன்
ஏதிலிகளின் காவலனாய் எங்குமெதிலும் இடைவெளியின்றி
ஐந்தெழுத்து மந்திரமொலிக்க குரல்கொடுக்கும் ஐயனாருருவில்
ஒவ்வொருநாளும் புதிதாய் புதுமையாய் அணிகலனிட்டு
ஓங்கியேயொலித்து ஓய்வின்றியுழைக்கும் மக்களின் நலன்காத்து
ஔவையின் சுட்டபழஞ் சுவைத்த முருகனின் முத்தமிழை
ஓங்காரத்து அகரமும் உகரமும் மகரமுமாய்க் கலந்து
ஒன்றாய் நூறாய் பலவாய் செய்திகளை அழகான சரமாக்கி
ஐம்பூதங்கள் வாழ்த்திநிற்க ஜயமிட்டுண்ட அவனியிலே
ஏரோடும் வீதியிலே பலர்பார்க்க பவனிவரும் வலம்புரியாள்
எதிலும் குறையின்றி எண்ணியதை எழுத்தாக்கி அதிலும்
ஊடகதர்மத்தின் உரத்தஒலியை உண்மையாய் உதிரவிட்டு
உத்தமராய் ஊருக்கு நாளும் நல்லதை நினைந்து செய்யும்
ஈசனின் வலதுகையான் திருமுருகன் துவண்டபோது
இறுக்கமாய் பதிலிறுத்தி இகமதில் இடர்களைந்து என்றும்
ஆறுதல் தந்திடும் உற்றதோழனாய் எம்குடும்பத்தினனாய்
அவனிதனில் இன்னும் நலமாய் பல்லாண்டு பரிணமிக்க
அடியேன் பேராசான் மனமார்ந்து வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் கு.மிகுந்தன்,**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்


**TECHNO WORLD**
TECHNO WORLD

**A/L தொழிநுட்பப் பிரிவு**

- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
- விவசாய விஞ்ஞானம்
  தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
  புவியியல்
  கணிதம் (7)



**செயன்முறை வகுப்புகள் மற்றும் மாதாந்த பரீட்சைகள் என்பன நடைபெறுகின்றன.**

(C-1831)

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
**077 017 5343**



தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரிக்கு **வெள்ளி விழா**
வாழ்த்துகள்



OS **ஒலிம்பியா ஸ்போட்ஸ்**

இல.273, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3490, 077 8060 267
0776751646, 077 533 5004

(C-1835)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# வலம்புரி வெள்ளி விழாவில்

## வலம்புரி விருது பெறும் ஊடகத்துறையினர்


திரு.எஸ்.கலாமோகன்


திருமதி.பி.உமாராணி


திரு.க.வியாசர்மணி


திரு.ந.சிவகுலசிங்கம்


திரு.எம்.சத்தியசீலன்


திரு.வி.நித்தியானந்தன்



திரு.க.சர்வலோகராஜா


திரு.ப.லோரன்ஸ்


திரு.ஆ.ஜெயபாலசிங்கம்


திரு.கு.முருகவேள்


திரு.எஸ்.சதீஸ்கரன்


திரு.எஸ்.கே.சதீபன்


திருமதி.கோ.பகிஜா


திருமதி.செ.சத்தியப்பிரியா


திருமதி.அ.சர்மிளா


திரு.ச.அருணன்


திரு.சே.சயந்தன்


திரு.பொ.ஜெகசோதி


லொறைன் சிந்தியா


செல்வி.அ.சர்திஜா


திரு.அ.ரம்சன்ராஜ்


திரு.உ.பாலமுருகன்


திரு.மு.கௌரிகாந்தன்


திரு.எஸ்.ராஜேஸ்கரன்


திருமதி.சு.வனிதா


திருமதி.ஜெ.சந்திரிகா


திருமதி.ர.விமலா


திரு.சி.சுரேந்திரா



திரு.கு.விஜயகுமார்


திரு.வே.ஆனந்தராசா


திரு.கு.முருகதாஸ்


திரு.சீ.ஞானேஸ்வரன்


திரு.சா.தயாபரன்


திரு.சி.சசிகரன்


திரு.சி.விமலேஸ்வரன்


திரு.இ.ஆனந்தராஜா


திரு.சொ.விமலதாசன்

வலம்புரிக் குடும்பத்தில் இணைந்து அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்ட ஊடகத் துறையினருக்கான வலம்புரி விருது வலம்புரி நாளிதழின் 25 ஆண்டு நிறைவின் வெள்ளி விழா நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் 20.12.2024 (வெள்ளிக்கிழமை) நடைபெறும் வேளையில் இவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியை வாழ்த்திய



# வானுறையும் தெய்வங்கள்

## உள்ளதை உள்ளபடி எழுதும் வலம்புரி

**வலம்புரியின் முதலாவது (2000) ஆண்டு நிறைவில் சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய ஆசி**

வலம்புரி என்ற நாமம் மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு நாமமாகும். இந்தப் புனிதமான நாமத்தைக் கொண்டு வெளிவரும் செய்தித்தாள் யாழ். மக்களின் விடியலுக்குரிய கருத்துக்களைத் தாங்கி வருவது கண்கூடு. அதிகாலையில் எம்மவர்களால் ஆவலுடன் எதிர்பாக்கக் கூடியதாக வெளிவந்து கொண்டு இருக்கிறது இப்பத்திரிகை. இதனை எடுத்தவுடன் நான் முதலில் படிப்பது "இன்று ஒரு தகவல்" எனும் நிகழ்ச்சியாகும். படிப்பது மாத்திரமல்ல அந்தப் பகுதியை வெட்டி ஒட்டி வைப்பதும் அதனை மற்றவர்களுக்குப் பயன்பட எடுத்துக்கூறுவதும் எனது இன்றியமையாத கடமையாகும்.

ஆத்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அறிவியல் தலைவர்கள் ஆகியோருடைய அரிய கருத்துக்களை இப்பகுதியிலிருந்து நாங்கள் அறியக் கூடியதாக உள்ளது. வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு இது ஒரு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளது.

பொதுவாக தமிழ் மக்களின் வரவேற்கத்தக்க கருத்துக்களையும் சமயநிகழ்வுகளையும் மற்றும் பலதரப்பட்ட செய்திகளையும் தாங்கி வருகின்ற இச் செய்தித்தாள் மேலும் மேலும் எழுச்சி பெற்று உயர்வடைய வேண்டும் என்றும் பத்திரிகைத் தருமத்தினின்றும் வழுவாது வெளி வரவேண்டும் என்றும் திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

## நிறை வலம்புரியே வாழி

**வலம்புரியின் முதலாவது (2000) ஆண்டு நிறைவில் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா வழங்கிய ஆசி**

பொன்னுயர் யாழ்ப்பாணத்தில்
பொருந்திய புவனந்தன்னில்
மன்னிய செய்தியெல்லாம்
மக்களின் நன்மைக்கேற்ப
உன்னிய கலை விளக்காய்
உதவிடும் சிகரிபோல்
நன்னெறி விளங்க நல்கும்
நம் வலம்புரியே வாழி!
தூயசீர் இலக்கியங்கள்
சொற்பதக் கதைகள் மக்கள்
நேயநற் காவியங்கள்
நிகரில் விஞ்ஞானக்கல்வி
ஆயவை அனைவருக்கும்
அறிவுற வழங்குகின்ற
மாயனின் கரத்திலங்கும்
வலம்புரி நீயே வாழி!
ஆண்டொன்றின் பூர்த்தி கண்டாய்
ஆயிரமாண்டு வாழ்வாய்
தாண்டிடும் தமிழ் சிறக்க
துதிபெறு சமய நீதி
பூண்டிடும் மக்கட் பண்பு
பொலிந்திடப் புனிதம் நல்கி
நீண்ட கற்பகத்தைப் போல
நிறை வலம்புரியே வாழி!!
சுபம்.

## மனமகிழ்ந்த ஆசிகளும் வாழ்த்துக்களும்

**வலம்புரியின் 21 ஆவது (2020) ஆண்டு நிறைவில் பிரம்மஸ்ரீ. ச.மகேஸ்வரக்குருக்கள் வழங்கிய ஆசிச்செய்தி**

எமது காக்கும் தெய்வமாகிய விஷ்ணு பகவானின் கரங்களில் இருக்கும் "வலம்புரி" சங்குநாத ஒலி சப்த லோகங்களுக்கும் பரவுவது போல எம்மண்ணிலும் வலம்புரி - சங்குநாதம் பத்திரிகை மூலமாக வெளிவந்து ஒவ்வொருவருக்கும் கிடைக்கப்பெறுகிறது.

தனது இருபத்தொரு வருட சேவையை மிகக் கச்சிதமாக மேற்கொண்டு மக்களுக்குத் திருப்திகரமாகவும் நேர்மையாகவும் செயற்பட்டு 20.12.2020 இல் தனது இருபத்திரெண்டாவது ஆண்டை எதிர்கொள்கின்றான்.

இக்காலப் பகுதியில் மேலும் பல தொழில்நுட்ப சாதனங்களுடன் மக்களைக் கவரும் விதத்திலும் அரச செய்திகளை நேர்மையாகவும் மற்றும் புதினச் செய்திகளையும் ஆன்மீகக் கருத்துக்களையும் புராண, இதிகாசக் கதைகளையும் நாள், நட்சத்திரப் பலன்களையும் விளையாட்டுத்துறைச் செய்திகளையும் வழமைபோல் தவறாது வெளியிட வேண்டுமென்றும் பணிமனையில் பணிபுரியும் முகாமையாளர்கள், ஆசிரியர்கள், பதிவாளர்கள், விநியோகத்தர்கள் எல்லோரும் நலமுடனும் சீரும் சிறப்புடனும் தமது சேவையைத் திறம்பட நடத்தி சிறப்புடன் வாழ வேண்டும் என அம்பிகையைப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வளர்மதி போன்று வளர்க

**வலம்புரியின் 6 ஆவது (2005) ஆண்டு நிறைவையொட்டி செல்லத்துரை சுவாமிகள் (சிவதொண்டன் நிலையம்) வழங்கிய ஆசிச் செய்தி**

ஆண்டுகள் தோறும் அரிய கட்டுரைகளுடன் அவசியமான செய்திகளையும் நடு நின்று கூறி நலம் பல புரியும் வலம்புரி ஏடே!
மேலும் பல்லாண்டு நிலவுக! பரமன் அருளால் நற்செய்திகளுடன் நல்லுணர்வூட்டி வளர்மதி போன்று வளர்க வளர்கவே...

# மின்சாரத்திற்காக இந்தியாவிடம் கையேந்தும் நிலை ஏற்படும்

## விமல் வீரவன்ச எதிர்வு கூறல்

(கொழும்பு)

எட்கா ஒப்பந்தத்தின் ஊடாக எதிர்கால சந்ததியினரின் தொழில் வாய்ப்புக்களை பறிப்பதற்கான சதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உயர் வலு மின் தொகுப்பை நிறுவ இணக்கம் காணப்பட்டதாக இரு தலைவர்களதும் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அவசர நிலைமையின் போது அதானியிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்தது. பின்னர் மின் கட்டணத்தை செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதால், முழு நாடும் இருளடைந்தது. இலங்கையிலும் தற்போது வலுசக்தி துறையுடன் விளையாட ஆரம்பித்துள்ளனர். இது மிகவும் பாரதூரமானதாகும்.

எதிர்காலத்தில் மின்சாரத்துக்காக இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலைமைக்கு உள்ளாக்குவதற்கான நடவடிக்கைகளே இதன் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.

மலிவான, நம்பகமான எரிசக்தியை வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பல்பொருள் குழாய் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான ஒத்துழைப்பு என்ற ஒரு விடயமும் அந்த கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக எரிபொருளுக்காகவும் நாம் முழுமையாக இந்தியாவை தங்கியிருக்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

எனவே மேற்குறிப்பிடப்பட்ட இந்த குழாய் திட்டம் ஒரு போதும் இலங்கையின் எரிபொருள் துறைக்கு பாதுகாப்பானதாக அமையப்போவதில்லை. அது மாத்திரமின்றி தோல்வியடைந்த வலுசக்தி துறையை தோற்றுவிப்பதாகவும் இத்திட்டம் அமையும்.

எதிர்காலத்தில் இந்தியாவுக்கு சாதகமான ஆட்சி முறை இலங்கையில் ஏற்படாவிட்டால்,



அதில் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு இந்த குழாய் திட்டங்களைப் பயன்படுத்தக் கூடும்.

இந்திய ஆக்கிரமிப்பு தொடர்பில் இலங்கைக்கு கற்றுக் கொடுத்த ரோஹண விஜேவீரவின் நாமத்தைப் பயன்படுத்துபவர்களின் ஆட்சியின் கீழ் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையே பாரிய பேரிடராகும்.

இலங்கையின் வலுசக்தி துறையில் தலையிடுவதற்கு யாருக்கும் இடமளிக்கப் போவதில்லை எனக் கூறியவர்கள், இன்று இந்தியாவுக்கு சென்று வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையை காட்டிக் கொடுத்துள்ளனர். இதேவேளை எட்கா ஒப்பந்தம் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் இந்திய தொழிலாளர்கள் இலங்கையின் தொழில் சந்தைகளுக்குள் கட்டுப்பாடின்றி பிரவேசிக்க முடியும். தமிழ்நாட்டிலுள்ள ஒருவர் எவ்வாறு கடவுச்சீட்டு இன்றி டில்லிக்கு சென்று தொழிலில் ஈடுபட முடியுமோ, அதே போன்று இலங்கைக்குள்ளும் பிரவேசிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

பொது மக்கள் இது தொடர்பில் ஆழமாக சிந்திக்க வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கான தொழில் வாய்ப்புக்களை பறிப்பதற்கான ஆரம்பமே இதுவாகும். இதற்கு எதிராக நாம் குரல்கொடுப்போம் என்றார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான மனிதரை உருவாக்குவோம்

இன்று மனித வாழ்க்கை மிகவும் வேகமாகக் கழிந்து கொண்டிருக்கின்றது. மனிதன் தன்னுடைய நாளாந்த கடமைகளை செய்வதற்கே பெரிதும் துன்பப்படுகின்றான். அவனுக்கு ஓய்வில்லை. அதனால் உடல் நலமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளத்திலும் அமைதியில்லை. முகத்திலும் மகிழ்ச்சியில்லை. ஒரு யந்திரம் போலவே அவன் இயங்கிக் கொண்டிருக்கின்றான். இந்த வாழ்க்கை தொடர்ந்தால் மனிதன் ஒரு நிரந்தர நோயாளி ஆகிவிடுவான். அப்படி அந் நோய்வாய்ப்படாமல் இருப்பதற்கு ஒரு வழியை நாம் தேட வேண்டும். அவவாறு தேடுகின்ற போது தான் நமது முன்னோர்களுடைய வாழ்க்கையைப் பற்றி ஒரு முறை நினைத்துப் பார்க்கவேண்டியுள்ளது.

இன்றைய காலம் தொழில்நுட்பத்தால் புதிய செயற்பாடுகளைக் கொண்டு வேகமாகவே கழிகிறது. மின்சாரத்தின் பயன்பாடு மனிதனுடைய செயல்களை எளிதாகச் செய்வதற்கு பேருதவி புரிகிறது. அதனால் இயற்கையின் கொடைகளைப் பற்றி நினைக்காமல் பொறிகளின் துணை யோடு மகிழ்வாக வாழலாம் என்ற நம்பிக்கையும் நம்மிடையே தோன்றிவிட்டது. ஆனால் திடீரென மின்சாரம் நின்றுவிட பொறிகளின் இயக்கமும் தடைப்பட்டுப்போகிறது. அப்போது மனிதன் படும் துன்பம் அவலமாக உள்ளது. இயற்கையின் கொடைகளை மதிக்காது வாழ்ந்த நிலையை எல்லோரும் எண்ணும் நிலையும் தோன்றுகிறது. பெருமழை, இடி, மின்னல், புயல், காட்டுத் தீ, தொற்று நோய், பஞ்சம் என்பவற்றால் பல்வேறு துன்பங்கள் தொடரும் போது மனித வாழ்க்கையே நரக வாழ்க்கையாக மாறிவிடும்.

இந்தத் துன்ப நிலையை மாற்ற என்ன செய்யலாம். இது எமக்குள்ளே அடிக்கடி எழும் கேள்வி. இக் கேள்விக்குரிய விடைகளையே இக்கட்டுரை எடுத்துக் கூற முனைகிறது. நமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் மின்சாரம் இல்லை. இயற்கையின் இரு சுடர்களான கதிரவனையும் நிலவையும் கண்டு ஒளியைப் பெற்றனர். இச் சுடர்களின் தோற்றத்தையும் மறைவையும் பார்த்து காலத்தையும் கணித்தனர். இரவு, பகல் என்ற கால வேறுபாட்டை இயற்கையின் தோற்றத்தைக் கொண்டே உணர்ந்தனர். அதற்கு ஏற்றவாறு தமது வாழ்க்கைக்கான செயற்பாடுகளையும் நன்கு திட்டமிட்டு வாழ்ந்தனர். பருவமாற்றங்களை கூர்மையாகக் கவனித்து காலப்பகுப்பையும் ஆக்கினர். ஓராண்டு காலத்தை ஆறு பருவங்களாக வகுத்தனர். அவையாவன கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். இப்பகுப்புப் பற்றிய விளக்கமான செய்திகள் பழைய தமிழ் இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இப் பருவமாற்றங்களைப் பழந்தமிழர் மிகக் கவனமாகக் கருத்தில் கொண்டு வாழ்க்கை நடைமுறைகளையும் மேற்கொண்டனர்.

அந்த வகையில் நிலத்தின் தன்மைக்கேற்றவாறு தமது வாழ்வியல் நடைமுறைகளையும் செயற்படுத்தினர். மலைப்பகுதி, காட்டுப்பகுதி, வயற்பகுதி, வரண்ட பகுதி, கடற்கரைப்பகுதி என ஐவகையான நிலத்தைப் பகுத்து அவர்கள் வாழ்ந்த முறையையும் பழைய தமிழ் இலக்கியங்கள் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் பதிவு செய்துள்ளன. அந்தந்த நிலத்து வாழ்வு அங்குள்ள விளைபொருள் தேட்டத்திற்கேற்ப வேறுபட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்குமுரிய மரம், செடி, கொடி, பறவை, விலங்கு, விளைபொருள் என்பவற்றைப் பற்றிய செய்திகள் பாடல்களிலே மிக விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

நிலத்திற்கேற்ப வாழ்வியலும் வீட்டுவாழ்வு, வெளி வாழ்வு என இருவகை வாழ்வு இருந்துள்ளது. உணவுத் தேட்டத்திற்கான தொழில்களை ஆண் வெளியே சென்று செய்தான். பெண் வீட்டிலிருந்து உணவு பதமாக்கல், குழந்தை பராமரிப்பு, வழிபாட்டு நடைமுறை போன்றவற்றை செய்தாள். இத்தகைய கூட்டு வாழ்க்கை ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையாக இருந்தது. ஆண் வேட்டையாடும் தொழிலைச் செய்த போது அதற்கு உதவிய விலங்குகளையும் பயிற்றி வளர்த்தான். உழவுத் தொழிலில் மாடுகள் பெரிதும் பயன்பட்டன. காட்டு நிலத்தில் பசுக்களை வளர்த்துப் பயன்பெற்றனர். தமது உணவுத் தேட்டத்தில் மிகுதியானதை மழைகாலத்திற்கென பதப்படுத்தியும் வைத்தனர். திணை, சாமை, வரகு, உழுந்து, பயறு போன்ற தானியங்களையும் பயிரிட்டு வாழ்ந்தமைக்குச் சான்றாக பல பாடல்கள் உள்ளன.




விளைபொருட்களின் வளத்தால் மக்கள் மனமகிழ்வோடு வாழ்ந்தனர். விளைபொருளைத் தந்த இயற்கையை வணங்கி வழிபாடு செய்தனர். இயற்கையின் பேராற்றலை தம்மால் வெல்ல முடியாது என்று நன்கு உணர்ந்த போது அதை வழிபட்டு வாழ முற்பட்டனர். அதனால் பெருமரம், பெரிய மலை, பெரிய ஆறு, கடல், பெருங்காடு என எல்லாவற்றையும் வழிபட்டனர். இயற்கையின் கொடைகளான விளைபொருட்களையும் மலர்களையும் படையல் செய்து வழிபட்டனர். இயற்கையின் சீற்றங்களால் துன்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் படையல் செய்து வழிபாடு செய்வதை நடைமுறையாக்கிக் கொண்டனர். இன்னும் வாழ்க்கையில் மகிழ்ச்சியான வேளைகளில் இசையையும் ஆடலையும் இணைத்துக் கொண்டனர். அவர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகளே யாழ், குழல், முழவு என்பன பற்றிய குறிப்புகள் பழைய தமிழ் இலக்கியங்களிலே உள்ளன. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடி மற்றவரை மகிழ்விக்க பாணரும் விறலியரும் இருந்துள்ளனர். 'அகவன் மகளிர்' எனக் குறிப்பிட்ட சிறப்புத் தன்மை உடைய பெண்கள் மக்களுடைய உள்ளத்தை சீர்மியம் செய்யப் பாடல்களைப் பாடினர். குரவை, துணங்கை, வெறியாடல் போன்ற ஆடல்களை ஆடி தமது உள, உடற்சோர்வை நீக்கினர்.

இத்தகைய இயற்கையோடு இயைந்த பண்பட்ட வாழ்வியல் இன்று பலர். அறியாதது எனவே அத்தகைய வாழ்வியலை இன்றைய மனிதர்கள் அறியும் வகையில் பல்வேறு பயிற்சிக்களங்கள் உரு வாக்கப்பட வேண்டும். இலக்கியமும் கலையும் ஒரு அழகான மனிதனை உருவாக்கும் தன்மையா னவை. எனவே அத்தகைய மனிதனாக ஒரு வனை உருவாக்குவது இன்று பலருடைய கடமை யாக உள்ளது. வீடு, சமூகம், நாடு என்று மூன்று நிலைகளிலும் இந்த உருவாக்கத்திற்கான செயற் பாடுகள் நடைபெற வேண்டும்.

முதலிலே வீடு என்ற நிலையில் குடும்பமாக எல்லோரும் இணைந்து தொழிற்பட வேண்டும். பெற்றோரும் உறவினரும் அழகானதொரு வீட்டுச் சூழலை முதலில் உருவாக்க வேண்டும். வீட்டைச் சூழ இயற்கையான அழகை ஏற்படுத்தப் பொருத்தமான மரம், செடி, கொடிகளை நாட்டி வளர்க்க வேண்டும். தென்னை, பனை, வேம்பு, கொன்றை, மா, பலா, வாழை, கமுகு போன்ற மரங்கள் வீட்டின் சுற்றுப் புறங்களிலே செழித்து வளர்ந்து நிற்கும் போது வீட்டை அழகான இடமாக மாற்றிவிடும். மலர்ச்செடிகளையும் மூலிகைச் செடிகளையும் வீட்டின் முன்புறம் நட்டு வளர்த்தால் அவை நல்ல மணம் பரப்பி வீட்டில் உள்ளவரை மகிழ்ச்சிப்படுத்தும்.

(தொடரும்...)

முனைவர் ச.மனோன்மணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## நாள் தோறும் வாசகர்களை தன்வசப்படுத்தும் வலம்புரியின் ஆற்றல் ஆச்சரியம் தரவல்லது

வலம்புரி பத்திரிகை தனது 25 ஆண்டுகளை நிறைவு செய்து 26 ஆவது ஆண்டில் கால் பதிப்பதனை எண்ணி மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் கிளிநொச்சி ஊடக அமையத்தின் சார்ப்பில் தெரிவிப்பதில் நான் மனநிறைவடைகின்றேன்.

ஒரு பிராந்தியப் பத்திரிகை இந்த நவீன தகவல் தொடர்பாடல் உலகத்தில் வெள்ளி விழாக் காண்பது என்பது சாதனையே. அசுர வளர்ச்சி கண்டுள்ள தகவல் தொடர்பாடல் உலகில் இலத்திரனியல் ஊடகங்களின் எழுச்சியின் மத்தியில் ஓர் அச்சு ஊடகம் தனது வெற்றிகரமான பணியை 25 ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கின்றமை பாராட்டுக்குரியது.

இன்றைய சமூகத்தை பெருமளவுக்கு சமூக ஊடகங்களே கட்டுப்படுத்தி வைத்திருக்கின்ற சூழ்நிலையில், வலம்புரி நாளுக்கு நாள் அதிகரித்த வாசகர்களை தன்வசப்படுத்தி வருகின்ற ஒரு பத்திரிகையாக இருப்பது ஆச்சரியப்பட வைக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை ஒரு தமிழ்ப் பத்திரிகை தனது பயணத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டும், அரசியல் ரீதியாக, பாதுகாப்பு ரீதியாக, பொருளாதார ரீதியாக என பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தே பயணிக்கவேண்டும். இந்தப் பயணம் என்பது அமைதியான கடலில் படகோட்டுவது போன்றதல்ல.

விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற ஓர் இனத்தின் அபிலாசைகளையும், அவர்களின் எண்ணங்களையும் தாங்கி நின்று பயணிப்பது சவாலானது. அச்சு ஊடகங்கள் இன்றைய நிலையில் அக,புற சவால்களை சமாளித்து தினமும் வெளிவருவது என்பது ஒரு நெருக்கடியான விடயமே. பரிணாமம் என்பது பழையன மறைந்து புதியவை தோற்றம் பெறுவதே. ஊடகங்களைப் பொறுத்த வரை பரிணாம வளர்ச்சியாக காட்சி ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள், டிஜிற்றல் ஊடகங்கள் எனப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. அச்சு ஊடகத்தில் ஒரு செய்தி ஏறுவதற்குள் சமூக ஊடகங்களில் அச்செய்தி விவாதிக்கப்பட்டு ஓய்வுப்பெற்றிருக்கும், காட்சி ஊடகங்கள் அவற்றை நேரலையாகக் காண்பித்து கடந்து சென்றிருக்கும். இதையெல்லாம் கடந்துதான் அச்சு ஊடகங்கள் வேறு ஒரு கோணத்தில் செய்திகளை வெளிக்கொண்டுவர வேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் இது மிகவும் நெருக்கடியானது. இந்த நெருக்கடியை எதிர் கொள்ளத் தவறுகின்ற போது அந்த ஊடகம் நீடித்து நிலைத்து நின்று பயணிப்பது என்பது கடினமானதே. ஆனால் வலம்புரி இவற்றையெல்லாம் எதிர்கொண்டு வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. எனவே வலம்புரி வெள்ளி விழா மட்டுமல்ல நூற் றாண்டு விழாக்களையும் காண வேண் டும். தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**மு.தமிழ்ச்செல்வன்,**
செயலாளர்,
கிளிநொச்சி ஊடக அமையம்.

## வலம்புரியின் பெருமை

வெள்ளி விழாக்காணும் வலம்புரியின் பெருமை
வெறுஞ் சொல்லில் அடக்கிடின் போதுமோ?

தெள்ளு தமிழில் கரந்தவழ் இதழிதன்
பெயரொன்றே போதுமன்றோ?
அதன் பெருமை சொல்ல.

ஈழவர் மனவோட்டமறிந்து
பாகெனும் தமிழில் பாங்கொடு வரையும்
ஆசிரியர் தலைப்பொன்றே போதுமே!
நாளிதழின் பெருமை சொல்ல.

ஆலடி மாநாட்டில் பேசிடும் விடயங்கள்
ஐ.நா மாநாட்டிலும் பேசாத துயரங்கள்

விகடமுடன் வரும் வியாசர் பதில்கள்
வாழும் வழி சொல்லும் இன்று ஓர் தகவல்

ஞாலம் உய்ய வலம்புரி தாங்கிடும்
அவயவங்கள் அத்தனையும்
அதன் பெருமை சொல்லுமே!

நேசித்து வாசிக்கும் வாசகரும்
வாசித்து நேசிக்கும் வாசகரும்
வான் பிளக்கச் சொல்வர்
வலம்புரியின் பெருமை யன்றோ

தன்னிலை குலையாது
நடுவுநிலை தவறாது
நன்னெறி காத்திடும் பாங்கு போதுமே
வலம்புரியின் பெருமை பேச

வார்த்தைகளுள் அடங்கா வலம்புரிதன் பெருமை
தமிழர்தம் பெருமை சொல்லச் சொல்ல
தரணி எங்கும் பரவுமன்றோ!

இருபத்தைந்தாண்டுகள்
இணையிலாச் சேவையில்
மகிழும் தமிழிதழே தற்பெருமைகொள்
தமிழரின் விடியலுக்காய்
ஒலிக்கும் சங்குநாதம் என...

**-சிரபுரத்தான்,**
**மண்டைதீவு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி வெள்ளி விழாவில்


## பாஞ்சசன்யம் விருது பெறும் எழுத்தாளர்கள்


திரு.என்.சண்முகானந்தன்


பேராசிரியர் கு.மிகுந்தன்


வைத்திய கலாநிதி
திருமதி.விவியன் சத்தியசீலன்


கலாநிதி க.தவலிங்கம்


வைத்திய நிபுணர்
சி.சிவன்சுதன்


கலாநிதி மனோன்மணி
சண்முகதாஸ்


பேராசிரியர்.ப.புஸ்பரட்ணம்


சிவஸ்ரீ.சி.பிறைசூடிக்குரு
(சோழியூரான்)


திரு.க.கு.க.சிவபாலன்

வலம்புரி நாளிதழில் அறிவார்ந்த ஆக்கங்களை எழுதி வரும் எழுத்தாளர்களுக்கான பாஞ்சசன்னியம் விருது வலம்புரியின் வெள்ளி விழாவின் (20.12.2024) போது இவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

# ‘எட்கா’ ஒப்பந்தத்தால் இலங்கைக்கு பாரிய நன்மை

## மத்திய வங்கி ஆளுநர் பகிரங்கம்

(கொழும்பு)

இந்தியா போன்ற உலகின் மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கும் நாட்டுடன் எட்கா போன்ற ஒப்பந்தத்தை செய்வது இலங்கைக்கு மிகப்பெரிய நன்மையாக அமையும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று முன்தினம் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், “என்னைப் பொறுத்த வரையில் இந்தியாவுடனான பொருளாதார, வர்த்தக ரீதியிலான உடன்படிக்கைகள் இலங்கைக்கு பாரிய நன்மை பயக்கும். அதன் தொழில்நுட்ப ஏற்பாடுகள் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்தி தீர்மானிக்க வேண்டும்.

இந்தியா மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற நாடு.

இந்தநிலையில் எட்கா உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு தீர்மானிக்க வேண்டும்.

என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், இந்தியாவுடனான பொருளாதார வர்த்தக உடன்படிக்கையானது எமக்கு நன்மை தருவதாக அமையும். வருடம்தோறும் ஏழு மற்றும் எட்டு வீதங்களின் பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது.

எனவே அது போன்ற ஒரு மிகப்பெரிய சந்தையைக் கொண்ட நாட்டுடன் நாம் வர்த்தக தொடர்பை ஏற்படுத்துவது சிறந்ததாக அமையும்.

அதில் எவ்வாறான தொழில்நுட்பங்கள் இடம்பெறும் என்பதை பேசித் தீர்மானிக்கலாம். ஆனால் அந்த நாட்டுடனான வர்த்தக உடன்படிக்கை எமக்கு முக்கியமானது.

இந்நிலையில், இந்தியா மட்டுமல்ல ஆசிய பசுபிக் நாடுகளுடன் நாம் அதிக வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள வேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# போக்குவரத்து விதிகளை மீற வேண்டாம்!

## எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

நெடுஞ்சாலைகளில் வாகனம் ஓட்டும் போது போக்குவரத்து விதிகளை மீற வேண்டாம் என சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வருடத்தில் நெடுஞ்சாலை விபத்துக்களில் 16 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (நி-8)

# கடனுதவிக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆசிய வங்கி



(கொழும்பு)

150 மில்லியன் டொலர் கடனை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது நேற்று வியாழக்கிழமை கையெழுத்திட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன முன்னிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தகஃபுமி கடோனோ மற்றும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொனால்ட் கொமஸ்டர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையின் மின்சாரத் துறையில் உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கான கடனுதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடந்த நவம்பர் மாதம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த கடனுதவி மூலம் இலங்கை மின்சார சபையின் நீண்ட கால பரிமாற்ற திட்டத்தில் பல அத்தியாவசிய திட்டங்கள் 2025-2027 இல் செயற்படுத்தப்படும்.

இது ஒட்டு மொத்த நம்பகத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்குகளை தாண்டி இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு சுமார் 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது பேசிய மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை தனது வெளிநாட்டு கையிருப்பை வெற்றிகரமாக கட்டியெழுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.


இதன்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர், நாட்டின் பொருளாதாரம் தற்போது ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதால் வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் பாதிப்பு ஏற்படாத வகையில் வாகன இறக்குமதி மேற்கொள்ளப்படும்.

பொருத்தமான நிதிக் கொள்கைகள் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த உதவும் என்பதையும் ஆளுநர் இதன்போது எடுத்துரைத்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசார தேரருக்கு மீண்டும் பிடியாணை



(கொழும்பு)

இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றில் ஆஜராகாததால் அவரைக் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட இருந்தது.

ஆனால் ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

கட்சிக்காரருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதால் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாமல் போனதாக ஞானசார தேரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன வழக்கின் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதன்படி ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஙி-8)

# உகண்டாவில் பதுக்கப்பட்டுள்ள ராஜபக்ஷர்களின் செல்வத்தை பயன்படுத்துங்கள்

## அறிவுரை கூறியது பொதுஜன பெரமுன

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, உகண்டாவில் பதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வத்தை பயன்படுத்துமாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக ஏராளம் பொய்களை அள்ளி வீசியது. உகண்டாவில் ராஜபக்ஷ குடும்பம் பாரிய செல்வத்தைப் பதுக்கியுள்ளதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டும் அதில் ஒன்று.

இந்நிலையில் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறையை நீக்கிக்கொள்ள உகண்டாவில் பதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும், ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வத்தை மீட்டு, அதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு இந்த அரசாங்கத்திடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவித்துள்ளார். (ஙி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 600 | 500 | 600-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 270 | 280 | 250 |
| பச்சைமிளகாய் | 1500 | 1200 | 1200 | 1000-1300 | 1000 |
| தக்காளி | 600 | 500 | 500 | 250 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 | 180 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 280 | 300 | 150 | 300 |
| பூசணி | 200 | 200 | 150 | 160 | 240 |
| புடோல் | 350 | 350 | 300 | 300 | 400 |
| வாழைக்காய் | 150 | 180 | 100 | 80-100 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 320 | 250 | 360 | 250 |
| பாகற்காய் | 1600 | 1800 | 2000 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 400 | 800 | 800 |
| லீக்ஸ் | 380 | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 300 | 480 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2600 | 2000 | -- | -- |
| போஞ்சி | 650 | 500 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 500 | 400 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 180 | 180 | 250 | 180-200 | 250 |
| தேசிக்காய் | 650 | 400 | 400 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 200 | 100-190 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 600 | 750 | 1000 |
| வெங்காயப்பூ | -- | 850 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 200 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 60 |

# இன்று ஒரு தகவல் 288



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பேச்சும் பழக்கமும்

ஒரு பேச்சுவார்த்தை நடந்து முடிந்தது. அதில் கலந்து கொண்ட ஒருவர் வெளியே வந்தார். முகம் ஒரு மாதிரியாக இருந்தது. என்ன சேர் எப்படி இருந்தது பேச்சுவார்த்தை என்று கேட்டேன். அவர் கொஞ்சம் கடுமையாக என்னைப் பார்த்தார்.

அங்கே என்ன சேர் பேச்சுவார்த்தையா நடந்தது. சொற்பொழிவெல்லோ நடந்தது என்றார். ஏன் சேர் அப்படி சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். பிறகு என்ன சேர் எங்களை எங்கே பேசவிட்டார்? அவர் மட்டும் தான் பேசிக் கொண்டிருந்தார். ஒருத்தரே பேசினால் அது எப்படி பேச்சுவார்த்தை ஆகும்? அது சொற்பொழிவுதானே என்றார்.

அவர் சொல்வதும் நியாயம்தான். உரையாடல் என்பது ஒரு கலை. உதைபந்து விளையாடுவார்களே அதை அதற்கு உதாரணமாகச் சொல்லாம்.

அதில் எப்படி ஒருவரிடம் ஒருவர் பந்தைத் தள்ளிக்கொண்டு போய் கடைசியாக இலக்கை நோக்கி ஓங்கி அடிக்கிறார்கள். அதை மாதிரித் தான் உரையாடலிலும் எல்லோரும் பங்குகொள்கின்ற மாதிரி சமமான சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும். அதை விட்டுட்டு ஒருத்தரே பேசுவது என்பது பந்தை தன்னுடைய நாக்கு என்கின்ற மைதானத்திலே வைத்து விளையாடிக்கொண்டு இருக்கக்கூடாது.

அப்படிச் செய்தால் இது உரையாடல் இல்லை. அது சொற்பொழிவு தானே. எதிராளிக்கு அதனால் என்ன இன்பம் இருக்கப் போகிறது. எரிச்சல்தான் வரும். அதனால்தான் அவர் அப்படி என்னிடம் சொன்னார்.

ஒருத்தருக்கொருத்தர் எப்படிப் பேசுவது என்பதைக் கூட இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது சேர்.மனித உறவுகளை மேம்படுத்துவது எப்படி என்பதைப்பற்றிக்கூட நிபுணர்கள் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒருவரிடம் நாங்கள் பேசும்போது அவர்களிடம் நமக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வது மாதிரி பேச வேண்டும். என்ன எப்படி இருக்கிறீர்கள் என்று பிரியமாக ஆரம்பிக்கலாமே. அடுத்தவர்களைத் தாராளமாகப் பாராட்டலாம். அதில் விடயம் இருக்கிறது. அது தான் எல்லாவற்றிற்கும் அத்திவாரம்.

யாரிடம் பேசுகிறோமோ அவருக்கு நாங்கள் ஒரு நல்ல நண்பர் என்பதை காட்ட வேண்டும். அதற்குத் தகுந்த மாதிரிப் பேச வேண்டும். நடந்து கொள்ள வேண்டும். நேரில் நல்ல விதமாகப் பேசிவிட்டு அவர் போன பின்பு அவன் கிடக்கிறான் என்று நினைக்கக்கூடாது. எங்களுடைய அருகிலே இருப்பவர்கள் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ அது சரிதான் என்பதை நாங்களும் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர் சொல்வதை ஆர்வமாகக் கேட்க வேண்டும்.

அதன் பிறகு மெதுவாக நாங்கள் நினைக்கிற கருத்தை வலியுறுத்தலாம். இப்ப எங்களை மற்றவர்கள் புகழவேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுவதில்லை. இதே ஆசை மற்றவர்களிடமும் இருக்குமல்லவா? அதனால் புகழ்வதற்குத் தயங்கக் கூடாது. பொய்யாகப் புகழக்கூடாது அவ்வளவுதான். ஒருவருக்குத் தலையில் முடியே இல்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவரிடம் போய் உங்கள் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று சொன்னால் அதைப் புகழ்ச்சி என்று எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அதைக் கிண்டல் என்றுதான் நினைப்பார்கள்.

ஒரு புதுக் கருத்தை நாங்கள் சொல்லப்போகின்றோம் என்றால் அதற்கு அவசரப்படக்கூடாது. நிலத்தை உழுது பக்குவப்படுத்தியதற்கு பிறகு தானே நாற்று நடுகிறோம். அதுமாதிரி அவர்கள் மனதைப் பக்குவப்படுத்துவது போல பேசி அதற்குப் பிறகு மெதுவாக நாங்கள் நினைத்த கருத்தை எடுத்து வைக்க வேண்டும். குழப்பம் காரியத்தைக் கெடுத்து விடும். அதனாலே நாம் தெளிவாக இருக்க வேண்டியது முக்கியம். நாங்கள் யாரிடம் பேசப்போகின்றோமோ அவருக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட அவருக்கு என்ன பிடிக்காது என்பதை என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நிலைமை சரியில்லை என்றால் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது. எப்போதுமே எங்களை பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு நல்ல பெயர் உருவாகிவிட்டது என்றால் அதைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட நுணுக்கத்தையெல்லாம் புரிந்து கொண்டால் தான் இந்த உலகத்தில் சுமுகமாக இருக்க முடியும். இதுதான் (Human Relationship) மற்றவர்களிடம் சரியாகப் பேசவும் பழகவும் தெரியவில்லை என்றால் என்ன சேர் பிரயோசனம்.ரொம்ப நாகுக்காக பேசத் தெரிந்த ஒருத்தர் இன்னொரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார். கொஞ்சநேரம் உரையாடிவிட்டு வரலாம் என்று நினைத்து. அவர் என்ன செய்தார் தெரியுமா? அவர்கள் வீட்டில் 15 நாளைக்கு முன்னால் செய்து வைத்த பழுதடைந்த பலகாரத்தை இவர் முன்னால் கொண்டு வந்து வைத்தார்கள். எங்கள் வீட்டிலே தயார் செய்தது. இதைச் சாப்பிடுங்கள் சேர். சாப்பிட்டுக்கொண்டே உரையாடுவோம் என்றார். அவரும் சாப்பிட ஆரம்பித்தார் வேறு வழி இல்லாமல்.ஒரு அரைமணிநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர் எழுந்தார். சேர் நான் போய் வருகிறேன் என்று சொன்னார். ஒரு அபிப்பிராயமும் சொல்லாமல் போகின்றீர்களே என்றார் இவர்.


அதற்கு அவர் இன்றைக்கு நமக்குள் ஏற்பட்ட இந்தச் சந்திப்பு ஒரு 15 நாளைக்கு முன்னால் நடந்திருந்தால் நல்லாயிருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று சொல்லி விட்டு வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவசரமாக நடையைக் கட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களின் கல்வித்திட்டத்தில் விஞ்ஞானம்

இன்றைய காலகட்டத்தில் கல்வி இன்றியமையாத ஒன்று. அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்பு ஊடாக மாணவர்கள் தம்மை வளப்படுத்தவும் வாண்மைத்துவம் மிக்க மாணவர்ளாக சமூகத்தில் உருவாகவும் இன்றைய மாணவர்கள் தம்மை செதுக்க வேண்டும்.

இதற்காக பல்வேறுபட்ட துறைகள், தொழில்நுட்ப வளர்ச்சிகள் இன்று புத்தாக்கம் பெற்று வருகின்றன. சில பெற்றோர் தம் பிள்ளைகளை விஞ்ஞானத் துறையில் ஊக்கப்படுத்துகின்றனர். சிலர் பொருளாதார பற்றாக் குறையாலும் வளப்பற்றாக் குறையாலும் வழிகாட்ட முடியாது போகின்றனர்.




உண்மையில் விஞ்ஞானம் ஏன் அவசியம் என நோக்கின், எம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு பிரச்சினைகளையும் தீர்க்க விஞ்ஞானம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

உதாரணமாக வெயிலில் நின்று விளையாடிய பிள்ளை உடனே வீடு வந்தவுடன் குளிர் நீரை அருந்துகின்றது. அந்த பிள்ளைக்கு இதமாகத்தான் இருக்கும். ஆனால் உண்மையில் வெப்பத்தில் இருந்த ஒரு உடலுக்கு குளிர் நீரை கொடுத்த உடன் கலங்களின் செயல்களில் மாற்றங்கள் ஏற்பட உடல் பலவீனமாகும் என்பதை அறியாது சிறிது காலத்தின் பின் நோய்வாய்ப்படும் போது தமது கல்வியை இடைநிறுத்த வேண்டி ஏற்படும். அந்த சமயங்களில் என்ன செய்ய முடியும்.

தற்போது கோழிப்பண்ணைகளில் விற்கும் கோழி வகைகள் நிறைய முட்டைகள், நிறைய தசை வைக்க வேண்டும் என்று ஊசி ஏற்றப்பட்டு விற்கப்படுகின்றன. அதை வாங்கி உண்ணும் சிறு பிள்ளைகள் நேர காலத்தில் பெரிய பிள்ளைகளாக மாறுவதும் திருமண வயதில், பிள்ளை பிறக்கும் தருணங்களில் இனப் பெருக்கத் தொகுதிகளில் சிதைவும் ஏற்படக் காரணமாக அமைகின்றது. போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களினால் இரைப்பை அழற்சியும் சுகாதாரமற்ற இடங்களில் சிற்றுண்டிகள் வாங்கி உண்பது என எந்த அறிவும் இன்றி ஒரு விஞ்ஞான ரீதியான அறிவும் இன்றிய வாழ்க்கைக் கோலத்தில் எம் எதிர்காலங்கள் சென்று கொண்டிருக்கின்றது.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு



முன்னைய காலங்களில் கேள்வரகு, கஞ்சி, உழுத்தம் கூள், பழஞ்சோறு என சத்தான உணவை உண்டு இன்றும் எம் முன்னோர் வாழ்கின்றனர் 90, 100 வயதுகளில். ஆனால் எம் எதிர்காலங்கள் பாஸ்ட் பூட் என்று 10, 20 வயதுகளிலேயே மேலோகம் செல்கின்றனர், நீரிழிவு, கொலஸ்ரோல் என்று நோய் வாய்ப்படுகின்றனர். ஒரு பிரச்சினை ஒன்று தோன்றும் போது நிதானமாக அவதானித்து நின்று நிதானமாக யோசித்து காரணங்களை கையாளாது எடுத்த உடனே அனைத்தையும் செய்து அதில் தோல்வி பெற்று வாழ்வை வெறுத்து தற்கொலைகளிற்குள் நுழைகின்றனர்.

தினம் தினம் மேம்படுத்தப்படும் தொழில்நுட்பப் போக்குகளை பார்க்காது தேவையற்ற விடயங்களில் சிதறுண்டு வாழுகின்றனர். எம் மாணவர்கள் பிரத்தியேகக் கல்வி என்று நண்பர்களுடன் ஊர்சுத்தலும் என வாழ்வை நகர்த்துகின்றனர்.

இவர்களின் இந்த போக்கை நிறுத்தி அறிவாற்றலுடனான சமுதாயத்தினை வளர்க்க அரசாங்கம் கண்ட உத்தி விஞ்ஞானத்தின் மூலம் மாணவர்களை ஒருங்கிணைத்து அதில் தமது கவனத்தை செலுத்தி, யாராலும் ஏமாற்றப்படாத வண்ணம் வாழ்வில் வெற்றியை சுவீகரிக்க விஞ்ஞானக் கல்வித் திட்டத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளது.

விஞ்ஞானம் தெரியாத ஒருவர் ஏனையோர் என்ன கருத்து சொன்னாலும் தான் தன் பாட்டில் சிந்திக்காது ஏனையோரை நம்பி, தன் வாழ்வை இழப்பர். இது பொருட்கள் கொடுக்கல் வாங்கலில், மூடநம்பிக்கைகளில் திளைத்து அதீத நம்பிக்கை வைத்தல் போன்றன சில உதாரணம் ஆகும்.

ஒரு விஞ்ஞான ரீதியில் சிந்திக்கும் மாணவன் எந்த நிலையிலும் தளராது திட்டம் வகுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் தளைத்து ஓங்குவான். விவசாயம் போன்ற கைத்தொழில் ரீதியான தொழில்களில் முன்னேற தனது விஞ்ஞான உத்திகளைக் கையாள்வான். புதுப்புது கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவான், நாட்டின் அபிவிருத்திக்கு வித்திடுவான், நீண்ட நேரம் காலம் எடுக்கும் வேலைகளை குறுகிய காலத்தில் முடிக்க திட்டமிடுவான். பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களிலும் தன்னை ஒரு நிலைப்படுத்தக் கூடிய ஆன்மீகத்தையும் இதன் மூலம் பெற்றுக் கொள்வான். இதனாலேயே அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் விஞ்ஞானம் முக்கியம் என்ற கல்வித்திட்டம் உருவானது.

விஞ்ஞானத்தை ஒரு பாடமாகப் பார்க்காது எமது மூளையை, எமது மனத்தை, அன்றாட வேலைகளுடனான தொடர்பைக் கொண்ட ஒரு நூலகம் போல எண்ணும் போது, எப்போதும் எவ்வேளையும் உற்ற நண்பனாக கைகொடுக்கும்.

**கல்வியின் முக்கியத்தையும் அதன் குறிக்கோளையும் உணர்ந்து விஞ்ஞானத்தின் மேன்மையை போற்றும் சமூகமாக எம் மாணவர் சமூகம் உயர விஞ்ஞானத்தை என்றும் என்றென்றும் மாணவர் மத்தியில் விதைப்போம். நாட்டை வளம் மிக்கதாக மாற்றுவோம்.**

**அஞ்சலோஸ் பெலினி திருக்குமாரன்,**
**விஞ்ஞான ஆசிரியை**
**யாழ்ப்பாணக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடசாலையில் கூட்டநெரிசல்! குழந்தைகள் உட்பட 30 பேர் பலி!

## நைஜீரியாவில் சோகம்

(நைஜர்)

**நைஜீரியாவில் பாடசாலை நிகழ்ச்சியில் திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.**




நைஜீரியா நாட்டின் ஓயோ மாகாணம் பஸொரன் நகரில் பாடசாலை ஒன்று செயற்பட்டு வருகிறது. இந்தப் பாடசாலையில் 100 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் ஆண்டு நிறைவையொட்டி அந்தப் பாடசாலையில் நேற்று முன்தினம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க மாணவ, மாணவியரின் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

நிகழ்ச்சியின்போது பரிசு பொருட்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால் நிகழ்ச்சியைக் காணவும் பரிசுப் பொருட்களை வாங்கவும் பள்ளிக் கூடத்தில் கூட்டம் குவிந்தது. இந்த நெரிசலில் சிக்கி 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இதுதொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (நி-8)

# பறவைக் காய்ச்சல் பாதிப்பு

## கலிபோர்னியாவில் அவசரநிலை பிரகடனம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி நேற்று முன்தினம் அந் நாட்டில் முதலாவது பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட நபருக்கு கடுமையான சுவாச நோய் இருப்பதாகவும் கூறப்படுகின்றதுடன் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான கலிபோர்னியாவிலும் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த மாநிலத்தைச் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையிலான விவசாயிகள் இந்த ஆண்டு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஆபிரிக்காவை தாக்கிய "சிடோ" புயல்

## நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு



(ஆபிரிக்கா)

ஆபிரிக்காவில் ஏற்பட்ட "சிடோ" புயலின் தாக்கத்தினால் இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தியப் பெருங்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றதுடன் இந்த புயலுக்கு "சிடோ" என பெயரிடப்பட்டது.

கடந்த சில நாட்களாகக் கிழக்கு ஆபிரிக்கா அருகே நிலை கொண்டுள்ள இந்த புயலின் தாக்கத்தால், மலாவியில் கனமழை பெய்து வருகின்றது.


இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் மொசாம்பிக்கையும் "சிடோ" புயல் தாக்கியதுடன், நியாஸ்சா, கபோ மற்றும் டெல்கடோ உள்ளிட்ட கடலோர மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

புயல் காரணமாக மொசாம்பிக் நாட்டில் மட்டும் 34 பேர் உயிரிழந்ததுடன் 300 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# 2021 இல் ஈராக்கில் என்னை கொல்ல திட்டமிட்டனர்

## வாழ்க்கை வரலாற்று நூலில் பரிசுத்த பாப்பரசர் தெரிவிப்பு



(வத்திக்கான்)

2021 இல் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டவேளை தற்கொலைக் குண்டுதாரிகள் தன்னை தாக்குதவற்கு திட்டமிட்டனர் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது வாழ்க்கை வரலாற்று நூலில் தெரிவித்துள்ளார்.

எனினும் தன்மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர் அவர்கள் கொல்லப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நான் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டவேளை வெடிபொருட்களுடன் பெண்ணொருவர் மௌசுலை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றார் என பிரிட்டிஸ் பிரான்ஸ் அதிகாரிகள் ஈராக்கிய பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்கள் என குறிப்பிட்டுள்ள அவர், தன்னைக் கொல்லும் நோக்குடன் டிரக் ஒன்றும் அப்பகுதிக்கு விரைந்தது என குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கிய பொலிஸார் விரைந்து செயற்பட்டமையினால் தற்கொலைக் குண்டுதாரிகள் தங்களை தாங்களே வெடிக்க வைத்தனர் என பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

இது யுத்தத்தின் விசக்கனி என பாப்பரசர் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலம் நம்முடையதல்ல, அது கடந்து சென்ற காலத்தினுடையது என உணர்ந்து அதை நாம் கடந்து விட வேண்டும். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

# உங்கள் வலம்புரி மகவுக்கு அகவை இருபத்தைந்து

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 25. நீங்கள் தூக்கி வளர்த்த பிள்ளைக்கு அகவை 25 என்றால், நீங்கள் அடைகின்ற மகிழ்வை வேறு யார் தான் அடைய முடியும்.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வலம்புரியின் ஜனனம்.

வலம்புரிக் குழந்தையைக் காப்பாற்ற இமை மூடாத கண்களோடு காவல் செய்தவர்கள் நீங்கள்.

எனினும் சிலர் அபாண்டமான பழிகளையும் அரசியல் கட்சிப் பெயரையும் சூட்டி வலம்புரிச் சங்கின் ஒலியை அடக்க சகுனித் திட்டம் தீட்டினர்.

ஆம், ஈழுமக்கள் ஜனநாயக் கட்சியின் (ஈபிடிபி) பத்திரிகைதான் வலம்புரி என்ற மிக மோசமான பிரசாரத்தை மேற்குறிப்பிட்ட சிலர் முன்னெடுத்தனர்.

அந்தப் பிரசாரத்தின் மூலம் வலம்புரியின் ஸ்தாபகர்களை முடித்துக் கட்ட முடியும் என்ற மிகக் கொடூரமான பாவச் சிந்தனை அவர்களுக்குள் புரையோடியிருந்தது.

ஆயினும் எதையும் மிக நிதானமாக ஆராய்ந்து முடிவெடுக்க வல்ல விடுதலைப் புலிகள் உண்மையைக் கண்டறிந்தனர்.

இஃது வலம்புரிக்கு எதிரான திட்டமிட்ட வஞ்சகச் செயல் என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டனர்.

தவிர, வலம்புரி நாளிதழின் நடுநிலையான பத்திரிகைத் தர்மத்தை அவர்கள் மதித்தனர்.

அதனாலேயே விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளராக இருந்த தமிழேந்தி அவர்கள், மீட்பு நிதியின் பட்டியலை வலம்புரிக்கு முதலில் தந்து அதனை வலம்புரி நாளிதழ் முன்னதாகப் பிரசுரிப்பதற்கு வாய்ப்பளித்தார்.

இஃது கட்டுக்கதை என்றோ, கற்பனையென்றோ யாரேனும் கருதினால் வலம்புரி நாளிதழின் கடந்த காலப் பிரதிகளை அவர்கள் பார்த்து அதை உறுதி செய்ய முடியும்.

வலம்புரியின் ஓசையை நிறுத்துவதற்காக எத்தகைய கொடுமைகளையெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தும் குறித்த சிலரால் செய்யப்பட்டன.

ஆனால் அவை அனைத்தும் வெறுமையாகின. கண்ண பரமாத்மாவின் திருக்கரத்தில் இருக்கவல்ல வலம்புரி தமிழர் தாயகத்தில் தர்மத்தின் குரலாக ஒலிக்க வேண்டும் என்பதே நியதி.

அது இறைவனால் எழுதப்பட்டாயிற்று. அதைத் தடுக்க வல்லார் யாருளர்.

வலம்புரிக் குழந்தையை நீங்கள் அத்தனை பேரும் உங்கள் நெஞ்சோடு அணைத்துப் பாதுகாத்தீர்கள். உங்களின் பாசமும் நீங்கள் அதன்மீது கொண்ட அன்பும் காரணமாக உங்கள் வலம்புரி மகவு இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாக் கண்டு; 26ஆவது அகவையில் தர்மத்தின் கவசத்தோடும் இறைவனின் துணையோடும் உங்களின் மேலான ஆதரவோடும் தன்பணி தொடர்கிறது.

**உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்** என்ற மணிவாசகரின் வாக்கை மாரி நிறைந்த இம் மார்கழித் திங்களில் மனம் நிறைந்து கூறி; மக்களுக்கான உன்னதப் பணியை என்றும் உங்கள் வலம்புரி தர்மத்தோடு ஆற்றும் என இந்நாளில் சத்தியம் செய்கின்றோம்.

# வடக்கில் சில அரச அதிகாரிகளுக்கு ஏழைகளின் குரல் கேட்பதில்லை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் வேதனை

(கிளிநொச்சி)

வடக்கில் சில அரச அதிகாரிகளுக்குக் ஏழைகளின் குரல் கேட்காத நிலைமையே இப்போது இங்கு இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேதனை வெளியிட்டார்.

'தர்மம்' அமைப்பின் ஏற்பாட்டில் செவிப்புலசவால் உடையோரின் சைகைமொழி உரிமை மற்றும் விழிப்புணர்வு தொடர்பான நிகழ்வு கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

'இலங்கையில் சைகை மொழி அங்கீகரிக்கப்பட வேண்டும், அரச நிறுவனங்களை இலகுவாக அணுகக் கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்' என வலியுறுத்தப்பட்ட இந்த நிகழ்வில், இது தொடர்பான கோரிக்கை மனுவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளிப்பதற்காக வடக்கு மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஆளுநர் தனது உரையில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இங்கு நீங்கள் திரண்டிருப்பதன் மூலம் உங்கள் உரிமையை நிலைநாட்ட எவ்வளவு அக்கறையாக இருக்கின்றீர்கள் என்பதை உணர முடிவதாகக் குறிப்பிட்டார்.

உங்களின் குரல்கள் மாத்திரமல்ல ஏழைகளின் குரலும் அரச திணைக்களங்களிலுள்ளவர்களால் கேட்கப்படுவதில்லை என ஆளுநர் வேதனையுடன் சுட்டிக் காட்டினார்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மனுவை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பேன் என்று குறிப்பிட்ட ஆளுநர், மாற்றாற்றலுடையோர் நிவாரணங்கள் கேட்டு வருவதில்லை மாறாக தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கே விரும்புகின்றனர் என்பதை தான் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதாகக் கூறினார்.

தான் மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில் அங்கு சைகை மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இருந்தமையால் உங்களில் பலரின் தேவைகளை தன்னால் இலகுவாக நிறைவேற்ற முடிந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், அவ்வாறான ஒருவர் ஏனைய திணைக்களங்களிலும் இருந்தாலும் சிறப்பாக இருக்கும் எனவும் தெரிவித்தார். (ம-7)

# பதவிகள் கிடைக்காவிட்டாலும் பொறுப்புக்களை நிறைவேற்றுவேன்

## ஹிருணிகா பிரேமசந்திர

பதவிகள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் பொறுப்புக்களை நான் நிறைவேற்றுவேன் என முன்னாள்

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் (புதன்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றுள்ள தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒன்று பெண்ணொருவருக்கு வழங்கப்படுமாயின் அதற்குப் பொருத்தமானவள் நான் எனத் தெரிவித்திருந்தேன்.

எனினும் இம்முறை பெண்களுக்கு வழங்குவதில்லை என்று கட்சி தீர்மானித்திருக்கிறது. அதனாலேயே எனக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் பதவிகள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் எனது பொறுப்புக்களை நான் நிறைவேற்றுவேன். 2020 இலும் தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் ஓரிரு வாரங்களுக்குள் மீண்டும் எனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்துவிட்டேன். தேர்தலில் தோல்வியடைந்ததற்காகவும், தேசிய பட்டியல் ஆசனம் கிடைக்கவில்லை என்பதற்காகவும் நான் துவண்டுவிடப் போவதில்லை.

மேலும் அரசியல்வாதிகள் நீருக்குள் மூழ்கடிக்கப்படும் பந்தாக இருக்க வேண்டும். கீழே செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மேலெழ முயற்சிக்க வேண்டும் என்றும் மக்களுக்காக நான் செய்யும் சேவைகளை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது. எனது தோல்விக்கு இதுவும்கூட காரணமாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

# உலக தியான தினம்

## ஐ.நாவில் விசேட உரை

(கொழும்பு)

உலக தியான தினமானது நாளை சனிக்கிழமை உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப் படவுள்ள நிலையில் இன்று வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஶ்ரீலஶ்ரீ ரவிசங்கர் ஐக்கிய நாடுகள் சபையில் "உலக அமைதி மற்றும் ஒற்றுமைக்கான தியானம்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந் நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள், தூதுவர்கள் மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

நிமோனியாக் காய்ச்சல்

# ஆனைக்கோட்டையில் குடும்பஸ்தர் மரணம்

யாழ். ஆனைக்கோட்டையில் நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் ஆனைக் கோட்டை சாவக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த குணலிங்கம் குணசேகரம் (வயது-46) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபருக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் நிலவிய நிலையிலும் அவர் மருத்துவ ஆலோசனைகளைப் பெறாதிருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று திடீரென மயங்க [illegible] றுள்ளார். இதனைய டுத்து அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பிலான மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற் கூற்றுப்பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் நிமோனியா காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தாக்கியதில் சிறுமி உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம், நவகத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரனகஹ வெவப் பகுதியில் மின்சாரம் தாக்கி 14 வயதுடைய சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பற்ற மின் கம்பியிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முயன்றபோது குறித்த சிறுமி மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

அதன் பின்னர் அவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் புத்தளம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும பயனாளிகளில் இதுவரை 6,000 பேருக்கு வங்கிக் கணக்கில்லை

## வங்கிக் கணக்குகளை திறக்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் அஸ்வெசும கொடுப்பனவுகளை வரவு வைப்பதற்கு வங்கிக் கணக்கு இல்லாத பயனாளிகளை வங்கிக் கணக்கு திறக்குமாறு நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

அஸ்வெசும முதல் கட்டத்தில் தகுதி பெற்ற சுமார் 6,000 பேர் வங்கிக் கணக்குகளைத்திறக்காததால் கொடுப்பனவுகளை பெறவில்லை என சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் வங்கிக் கணக்குகளை திறக்க முடியாத மக்களும் அதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டாலும் வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், வங்கிக் கணக்கு இல்லாத பயனாளிகள் 27 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் இருந்து கடிதத்தைப் பெற்று வங்கிக் கணக்குகளை திறக்குமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-8)




ஆயுள் காப்புறுதி ஆலோசகர்களுக்கான 15 ஆவது தேசிய மன்றத்தின் ஆயுள் காப்புறுதி தொழில்துறை விற்பனை விருதுகள் 2023 இல் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் விற்பனைக் குழுவிற்கு கிடைக்கப்பட்டது. இந்த சிறப்பு விருது வழங்கும் விழா கடந்த 3 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மொனார்க் இம்பீரியலில் நடைபெற்றது.

இதில் சிறந்த கிளை முகாமையாளர் பிரிவின் கீழ் இலங்கை இன்சூரன்ஸ் லைஃப் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த ஏ.சுபேசன் மற்றும் கம்பஹா கிளையைச் சேர்ந்த ரோஹன குமார ஆகியோர் வெகுமதி பெற்றனர்.

# மனித உரிமைகள் ஆணையத்தில் குவியும் முறைப்பாடுகள்

## அறிக்கையில் தகவல்

**(கொழும்பு) இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தில் நாளாந்தம் ஏராளமான முறைப்பாடுகள் குவிந்து கொண்டிருப்பதாக ஆணையத்தின் ஊடக அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.**

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நாளாந்தம் 60 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்த கொவிட் தொற்றுக் காலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 8000 முறைப்பாடுகள் இன்னும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இலங்கை



மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொலிஸ், கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தாமதமாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3280

Search for people, places and things

### சதுர்சன்




### நிதுன்




### மதுமிதன்




### விநு




### யுகேஷி




### பவளநிலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் காத்து...

தர்மம் யாழில் "சேடம்" இழுத்து வந்த நிலையில் "வலம்புரி" அதன் உயிர் காத்து வாழ்வளித்து நிமிர்ந்திருக் கிறது.

சமூகம், சமயம், மொழி, பண்பாடு எனப் பலதுறைகளிலும் கால்பதித்து மண்ணின் அடையாளக் குறியீடு களில் ஒன்றாக மாறி, வெகுவிரைவில் தமிழ் மண்ணையும் மக்களையும் தனதாக்கி "வலம்புரி" பெற்றிருக்கும் வெற்றி வரலாற்று வெற்றியேயாம்.

பத்திரிகைப் பலம் கொண்டு, பலரையும் அச்சுறுத்தியும் அடிபணிய வைத்தும், செயற்பட்டு வந்த சிலரின் நடவடிக்கைகளால், மனம் நொந்தி ருந்தவர்களுக்கு வலம்புரியின் வருகை, பெரும் உவப்பாயிற்று.

முடிந்தளவு பொதுநலம் பேணிய வலம்புரியின் செயற்பாடுகள், அதன் மீதான பற்றுதலை, மக்களுக்கு அதி கம் ஏற்படுத்தியது, "வலம்புரி" மக்கள் வயப்பட, மக்கள் வலம்புரியின் வயப்பட் டார்கள்.

அந்த இணைப்பே, வலம்புரியை இருபத்தைந்து ஆண்டுகால எல்லை யைக் கடக்க வைத்திருக்கிறது.

"வலம்புரியின்" இந்த நீண்ட பய ணத்திற்கு வழி சமைத்துக் கொடுத்த பெருமையில், பெரும் பங்கு எனது அன்பு நண்ப ரான வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களேயே சாரும்.

தமிழறிவு, சமயப்பற்று பேச்சாற்றல் எழுத்துநடை எனப் பல்துறை ஆற்றல் கொண்டும் தன்னடக்கத்துடன் இயங்கி வரும் அவர் வேராய் நின்று "வலம் புரியை" விருட்சமாக்கியிருக்கிறார். முழுச் சுதந்திரம் அளித்து அவரை இயங்க விட்டிருக்கும் சி.வெற்றி வேலாயுதம், க.திருமாலழகன் உள் ளிட்ட நிர்வாகத்தினரும் தமிழ்மக் களின் நன்றிக்கு உரியவராகின்றனர்.

எங்கள் கழக முயற்சிகள் அனைத் திலும் கைகொடுத்து உதவிவரும் "வலம்புரி" இன்னும் பல்லாண்டு களைக் கடந்து செழிப்புற வேண்டு மென என்னை வாழ்விக்கும் "கவிச் சக்கரவர்த்தி" கம்பநாடன் பாடிப்பரவும் பரம்பொருளை வேண்டிப் பணி கிறேன்.

**"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

## தமிழரசுக் கட்சி...

டுள்ளது.

குறித்த கட்சியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் மத்தியகுழு உறுப்பினருமான மருத்துவர் சி.சிவ மோகனால் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனி யாவில் கடந்த 14ஆம் திகதி இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தை ஆரம்பிப் பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பத்மநாதன் சத்திய லிங்கம் முற்பட்டபோது, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வருகை தராமல் கூட்டத்தை நடத்தக் கூடாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறியிருந் தார்.

எனினும், அவர் தலைவர் பதவி யிருந்து விலகிவிட்டார் எனவும் அவ ரின் தலைமையில் கூட்டத்தை நடத்த் முடியாது எனவும் சிலர் கோரியிருந்த னர்.

எவ்வாறாயினும், தமது நிலைப்பாட் டில் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சிவமோகன் விடாப்பிடியாக இருந்தமையினால் நீண்டநேரமாகக் கூட்டம் ஆரம்பிக்கப்படாமல் அமைதி யின்மை நிலவியது.

பின்னர் கூட்டத்துக்கு மாவை சேனாதிராஜா வருகைதந்தபோது, பதவி விலகியவர் தலைமையில் கூட் டத்தை நடத்த முடியாது எனச் சிலர் தெரிவித்தனர்.

அதேநேரம், பதவி விலகலை மாவை சேனாதிராஜா மீளப் பெற்று விட்டதாகவும் கருத்துகள் முன்வைக் கப்பட்டன.

இந்த நிலையில், மாவை சேனாதி ராஜாவின் பதவி விலகலை மீளப்பெற அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 28ஆம் திகதி அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பதற் கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டி ருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிமுறைகளை மீறி மத்திய குழு எடுக்கின்ற அனைத்து நடவடிக்கை களுக்கும், தீர்மானங்களுக்கும் தடை உத்தரவு கோரி முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சிவமோகன் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு எதிர்வரும் நாட் களில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்படும் என எதிர்பார்ப்பதாக மனு தாரர் தரப்புத் தெரிவித்துள்ளது.

கட்சியின் கொள்கைகளை வகுப் பதும், செயற்றிட்டங்களை வகுப்பதும் கட்சியின் பரிபாலனமும், தலைவர் தெரிவும் பொதுச்சபையின் ஆணைக்கு உட்பட்டவை என்றும், அவ்வாறான தீர்மானங்களைக் கட்சியின் மத்திய குழுவினால் எடுக்க முடியாது எனவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மக்களுக்கு...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றில் நேற்று வியாழக்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கி ரமசிங்க மேலும் தெரிவித்திருப்பதா வது,

சர்வதேச நாணய நிதியத் தின் உடன்படிக் கையை முன்னெ டுத்துச் செல் வதும், அதனைப் பாதுகாப்பதும் அவசியம்.

அந்த உடன் படிக்கையில் இருந்து வெளி யேறுவதற்கு அர சாங்கத்திற்கோ அல்லது எதிர்க் கட்சியினருக்கோ அதிகாரம்இல்லை.

உடன்படிக்கை யில் இருந்து வெளியேறினால் நாட்டில் மீண்டும் பொருளாதாரப் பிரச்சினைகள் எழும்.

இதேவேளை மக்களுக்கு நிவா ணரம்வழங்கப்பட வேண்டும் என வும் அவர் தெரி வித்துள்ளார்.(ம-7)

## எரி...

பட்டுள்ளதாக எரி பொருள் விநி யோகஸ்தர்கள் தெரிவித்தனர்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுத்த தீர் மானமே இதற் குக் காரணம் என எரிபொருள் பிரிப் பாளர்கள் சுட் டிக்காட்டியுள்ள னர்.

கூட்டுத்தாப னம் அறிமுகப் படுத் தியுள் ள புதிய முறையின் படி, எரிபொருள் ஓடருக்கு முந் தைய நாள் ஒன் லைனில் பணம் டெபாசிட் செய்ய வேண்டும். ஏனெனில் இவ்வாறு பணம் டெபாசிட் செய்யும் பல வங்கிகள் இரவில் கணக்கு காட்டாத தால், இந்த எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. (ம-7)

## போதையில்...

நுழைந்த நபரொருவர் காவலாளியைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவமொன்று நேற்று மாலை இடம்பெற்றது.

மதுபோதையில் நோயாளர் விடுதிக் குள் நுழைய முற்பட்டவரை வைத்திய சாலைக் காவலாளி தடுக்க முற்பட்ட போதே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

35 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் காவலாளிகளால் பிடிக்கப்பட்டு யாழ்ப் பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

காயமடைந்த காவலாளி யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார். (ம-7,33)

### மஹஜன சம்பத

திகதி 2024.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 5690
A 7 4 6 2 6 5

அத சம்பத
A 6 2 6 5
சீட்டிழுப்பு இலக்கம் 265

### தன நிதானய

திகதி - 2024.12.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1720
B 35 49 66 80 B
Double Chance 88040

### மெகா பவர்

திகதி 19/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2038
U 23 01 21 59 60
134781

### லக்கி 7 VIP

திகதி 2024.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 516
J 0 2 0 6 0 7 J

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3932
சீட்டிழுப்பு திகதி 19.12.2024
V 04 19 30 63
V 158612

### ஹந்தஹன

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 999
விருச்சிகம் 25 35 36 50 விருச்சிகம்
030512 — 50

### உத்தியோகபூர்வ முடிவுகள்

19.12.2024 — வெற்றி வாரம் 398
ஆங்கில எழுத்து L — 0 6 4 7 1 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,524,062.00
78849

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2664
சீட்டிழுப்பு திகதி 2024.12.19 — தினம் வியாழக்கிழமை
19 29 38 61 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,803,872.80

### சனிதா

திகதி 19.12.2024 — வெற்றி வாரம் 4825
45 55 64 74 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,906,504.40
86386

### சசிரி

581 — 19.12.2024 — வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 26 46
ரூ.200,000.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4376
சீட்டிழுப்பு திகதி 19.12.2024 — தினம் வியாழக்கிழமை
04 15 34 40 — சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,468,028.80
219111

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 20 21 62 67 71
1840 — 19.12.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,725,184.80

### அத கோட்டிபதி

வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2490 — சீட்டிழுப்பு திகதி 2024.12.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,530,862.40
16 24 30 66 E
836104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ஜுன மகேந்திரனை கைது செய்க

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பெர்பெர்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அஜன் கார்டிய புஞ்சிஹேவா ஆகியோரை உடனடியாக கைது செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபர்களாக உள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பெர்பெர்சு வல்ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் ஆகியோரை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார். (ம-7)




BLC CAMPUS | DLC | LINCOLN UNIVERSITY | othm | Ofqual

உயர்தரப்பரீட்சையின் பின்னர், யாழின் முன்னனி உயர்கல்வி நிறுவனமான BLC CAMPUS உடன் இணைந்து வடக்கு மாகாணத்திலேயே முதன்முறையாக அரச அங்கீகாரம் பெற்ற உயர் கற்கை நெறிகளைத் தொடருங்கள்.

021 222 33 55

50% OFF

HIGHER/ADVANCED DIPLOMA IN ARTIFICIAL INTELLIGENCE (AI) AND DATA SCIENCE
HIGHER/ADVANCED DIPLOMA IN MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (MIT)
HIGHER/ADVANCED DIPLOMA IN BUSINESS MANAGEMENT
HIGHER/ADVANCED DIPLOMA IN COUNSELLING AND APPLIED PSYCHOLOGY
HIGHER/ADVANCED DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
HIGHER/ADVANCED DIPLOMA IN EDUCATION
HIGHER/ADVANCED DIPLOMA IN HUMAN RESOURCE MANAGEMENT
HIGHER/ADVANCED DIPLOMA IN SOFTWARE ENGINEERING
HIGHER/ADVANCED DIPLOMA IN LEADERSHIP AND MANAGEMENT
HIGHER/ADVANCED DIPLOMA IN PROFESSIONAL ENGLISH

THE LEADING
EDUCATIONAL INSTITUTE IN JAFFNA (2733)

077 707 4449 | 0777 17 4443 | 0777 70 7443
No. 330, Stanley Road, Jaffna.

புதுவருடத்தை முன்னிட்டு
கோழி முட்டை மலிவு விலையில்
புறோயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர்க்கோழிகள், குஞ்சுகள் இவை அனைத்தும் (2795)
1Kg கல்பேட்ஸ் இறைச்சி - 1000/=
1 முட்டை - 25/=
நியூ சிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக் கடை
இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். / இல.8, 4ம் குறுக்குத் தெரு, சின்னக் கடை மாக்கற் முன்பாக குருநகர், யாழ்ப்பாணம்.

வைத்தியம்
வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (650)

கிழவன்காடு கலாமன்றத்தின் வாழ்த்துக்கள்
வெள்ளிவிழாக் காணும் வலம்புரிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு மேலும் சேவையில் சிறந்து விளங்க ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளை வேண்டி வணங்குகின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ். கிளை (C-1859)

FLIGHT TICKETS BOOKINGS
◆ அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களினை சிறந்த விலையில் கொள்வனவு செய்ய எம்மை நாடுங்கள்
◆ இந்தியா விசா சேவைகள்
◆ கனடா, லண்டன், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ரிக்கற் முன்பதிவுகள்
Apex Travels
0777 597 598/076 3333 644
No.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (651)

மானிப்பாயில்
காணி விற்பனைக்கு
மானிப்பாய் ஆனந்த வீதியில் (ஆனந்தம் வைரவர் கோவில் அருகில்) ஒரு பரப்பும் 5.5 குழி அளவுடைய காணி விற்பனைக்குண்டு. (648)
077 8093 293
076 2702 176

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
077 544 8503 (2833)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1857)



சிறிராம் ஜுவல்லர்ஸ்
புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை
22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.
வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.
இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 165 1729, 077 773 0567, 021 222 8334



வெவ்வேறு உணவுப் பண்பாடுகள் இணைந்த
சுவைமிகு உணவு வகைகளை
எமது அமுதம் உணவகத்தில் சுவைத்திடுங்கள்
15%



வார இறுதி நாட்களில்
ரூபா 2,500



எமது மங்களம் விருந்துபசார மண்டபம்
(C-1785)
திண்ணை ஹோட்டல்
86, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொடர்பிற்கு - +94 76 523 4035 | பொது - +94 21 203 0400


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org